# மாருதப்புரவீகம் பண்பாட்டு மலர் 2014

இதழ் - 1



பிரதேச செயலகம்
வலி வடக்கு,
தெல்லிப்பளை

# மாருதப்புரவீகம்

## பண்பாட்டு மலர் 2014

கலசாரப் பேரவை,
வலி வடக்கு,
தெல்லிப்பளை.
2014

**நூல் தலைப்பு**
மாருதப்புரவீகம்
பண்பாட்டு மலர் 2014

**வெளியீடு**
கலாசாரப் பேரவை வலி வடக்கு
தெல்லிப்பளை 2014

**பக்கம்**

**பிரதிகள்**
300

**அச்சுப்பதிப்பு**
VETER CORNER
126, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.


ஐ
தமிழ்த் தாய்

# தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன தான தந்தா னே.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

-சுப்பிரமணிய பாரதியார்-

# தமிழ்த்தாய் வணக்கம்

**(பராளிசைக் கொச்சகக்கலிப்பா)**

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதில் சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையா ளந்துளுவும்
ஊன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம்போல் உலக வழக் கழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

**மனோன்மணீயம்**

**பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை**

வலி.வடக்கு கலாசாரப் பேரவை

தெல்லிப்பளை

# தெல்லிப்பளை பிரதேச கீதம்

**பல்லவி**

வானுயர்ந்த புகழ் மலிந்த வளம் நிறைந்த முற்றம்.
மரபுகாத்துத் தலைமுறையாய் தமிழ் வளர்த்த கொற்றம்,
ஞானியரும் யோகிகளும் உறைந்துயர்ந்த சுற்றம்.
"நாளும் வென்றுவாழ்க எங்கள் "வலிவடக்கு சொர்க்கம்"

**சரணங்கள்**

கீரிமலை ஈசன், தெல்லிநகர துர்க்கை, மாவைக் கந்தன்,
யேசு, வேளாங்கன்னி,கோயில் சொல்லும் தொன்மை.
வானவூர்தி, கப்பல், புகையிரதத்துறைகள்...... தம்மை
வைத்திருக்கும் எங்கள் வாழ்வின் பெறுமதிக்கே தெல்லை?

கற்றவர்கள், கலைஞர், விளையாட்டு வீரர் வாழும்
களனியெல்லாம் பொன்கொழிக்கச் செம்பாட்டு மண் சூழும்.
வெற்றிலை, நெல், பனை, வெங்காயம்,முந்திரிகை, மீனும்
விளையும் கலைகளோடு... இல்லை பண்பாட்டுக்கும் ஈனம்.

தெல்லிப்பளை, கீரிமலை, பன்னாலை, விழிசிட்டி,
தையிட்டி, இளவாலை, மாவை, வசாவிளான்,அளவெட்டி,
கொல்லங்கலட்டி, கவுணாவத்தை , கட்டுவன், மயிலிட்டி,
குரும்பச்சிட்டி, பலாலி சேர்ந்த 'நானிலம்' நம் சக்தி!

மாருதப் புரவீகவல்லி, நகுலமுனிதாம்...தம்.......,
மனிதமுகம் மீளவைத்த கீரிமலைத் தீர்த்தம்.
ஆடி அமாவாசையன்று அதில் கடன் நாம் தீர்ப்போம்.
"வழுக்கியாற்றின் தாயகம்" நம் மண்ணை வாழ்த்தி ஆர்ப்போம்.

தோலகட்டி நெல்லிரசம், காங்கேசன் சீமெந்து,
காச,புற்று, உள மருந்து, கலங்கரை இங்குண்டு!
ஆசிரியகலாசாலை, கல்விச்சோலை, நீதிமன்று,
பிரதேச செயலகம், சபையும் நிமிரும் தமிழை காத்து வென்று.

# தெல்லிப்பளை பிரதேச செயலகம் நடாத்தும் கலாசார விழா

## ஆசியுரை

மேற்படி விழாவில் "மாருதப்புரவீகம்" எனும் பெயர் கொண்டு வெளியாகும். நூல் எல்லா மக்களுக்கும் பிரயோசனமாகி வரலாறுகளைத் தெரிந்து கொள்வதற்கு இயல்பாக நூல் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம். இந்நூல் பிற மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்து தமிழையும் சமயத்தையும் வளர்த்தெடுப்பதற்காக வேண்டிய முயற்சிகளை செய்ய எல்லாம் வல்ல மாவைக் கந்தன் துணை கொண்டு அருள் புரிய வேண்டுமாய் ஆசீர்வதிக்கின்றேன்.

"மாவைக்கா போற்றி போற்றி நின்பாதம் சரணம்"

மஹாராஜஸ்ரீ ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள்,<br>ஆதீனகர்த்தா,<br>மாவை ஆதீனம்.

# ஆசியுரை

ஒரு மனிதன் பிறக்கும் போதே ஒரு பண்பாட்டோடே பிறக்கிறான். ஒரு பண்பாட்டுக்குள்ளே பிறக்கிறான். அவன் வளரும் போது அப்பண்பாடும் அவனோடு கூடவே வளர்கின்றது. இப் பண்பாடே அவனுடைய வாழ்வாகவும் வாழ்வே அவனுடைய பண்பாடாகவும் அமைகின்றது. இப் பண்பாடு அவனுக்கு அவனுடைய அடையாளத்தைக் கொடுக்கிறது. அவன் எந்த நாடு, எந்த இனம், எந்த சமயம் போன்றவை அவை. இவை இல்லாமல் ஒரு மனிதன் இருக்க முடியாது. இவ் அடையாளங்கள் யாவும் ஒரு மனிதனை உருவாக்குகின்றன. மனிதனும் இவற்றை உருவாக்குகின்றான், வளர்க்கிறான்.

இந்த வகையிலே தெல்லிப்பளைப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் எமது சமூதாயத்திற்கு மிக அவசியமானவை. இருக்கின்ற எமது அடையாளங்கள் இன்று தொலைக்கப்படுகின்றன. எமது அடையாளம் எது என்று தெரியாத நிலையிலே புதுச் சமூதாயம் வளர்கின்றது. நிறுவனப்படுத்தப்பட்ட, நிறுவனப்படுத்தப்படாத சக்திகளால் எமது தமிழ் அடையாளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் எமது அடையாளத்தைக் காப்பதிலே, வளர்ப்பில் காத்திரமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல கலாசாரப் பேரவை முன்வர வேண்டும். கலாசார விழாக்களுக்கு அப்பாலே ஒவ்வொரு தமிழனும் தனது நாளார்ந்த செயற்பாடுகளில் தமிழ் அடையாளத்தை உணர்ந்து கொள்ள அதை வளர்த்துக் கொள்ளத்தக்க முறையில் தன் செயற்பாடுகளை வகுத்துக் கொள்ள வேண்டும். வீடுகளிலும் பாடசாலைகளிலும் வேலைத் தளத்திலும் சமயச் செயற்பாடுகளிலும் இச்செயற்பாடுகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் மிகவும் சவால் நிறைந்தது என்பதை மறுக்கமுடியாது. அதனாலே, இவற்றை விட்டுவிடவும் முடியாது.கலாசாரப் பேரவை தனது திட்டமிடல் வட்டத்தை

மேலும் விரிவாக்கி பல்வேறு தரப்பினரையும் உள்வாங்கித் தன் எதிர்கால பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று ஆசிகள் கூறி நிற்கின்றேன்.

அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா
பங்குத் தந்தை
புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்
குளமங்கால்
மல்லாகம்.

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

தமிழர்களின் கலை கலாசாரப் பாரம்பரியங்களைக் கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. இந்த மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேசமும் தமக்குரிய கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு திகழ்கின்றது. இந்த வகையிலே இயற்கைவளம் பல கொண்ட தெல்லிப்பளைப் பிரதேசமானது அப்பிரதேசத்திற்குரிய மக்களின் தனித்துவமான கலை கலாசார பாரம்பரிய அம்சங்களுடன் விளங்குவதோடு வரலாற்றுத் தனித்துவம் மிக்கதான ஒரு பிரதேசமாகவும் விளங்குகின்றது. இப்பிரதேச பண்பாட்டு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலை கலாசாரத்தினூடாகவே ஒரு இனத்தின் பண்பாட்டினை இனங்காணமுடிகின்றது. பண்பாடும் நாகரிகமும் சார்ந்த கலாசாரமானது அப்பிரதேச பாரம்பரியத்தினை வெளிப்படுத்தும் விதமாக அமைகின்றது. அந்தவகையிலே பிரதேச கலைஞர்களின் பங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. எந்த ஒரு கலைஞனும் போற்றப்பட வேண்டும். ஒவ்வொரு பிரதேசத்திலும் கலைஞர்களுக்கான கௌரவிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் கலைகள் வளர்ச்சிபெறவேண்டும்.

மேலும் இப்பிரதேசமானது காலத்தால் உருவாக்கப்பட்ட கலாசார முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தொல்லியல் மரபுகளைக் கொண்டு விளங்குகின்றது. இவ்விடயங்களை உள்ளடக்கிய தான நூலினை வெளிடுவது முக்கியமானதொன்று. ஒவ்வொரு பிரதேசமும் தமது பண்பாட்டு விழுமியங்களை நூல் வடிவிலே ஆவணப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். தெல்லிப்பளை பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து கலாசார விழாவிலே வெளியிடும் "மாருதப்புரவீகம்" என்னும் பண்பாட்டு நூல் சிறப்புற அமைவதற்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்**
**யாழ் மாவட்டம்**

# மேலதிக அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் வெளி யிடப்படும் மாருதப்புரவீகம் என்னும் பண்பாட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கலைவளமும் தமிழ்மணமும் ஒருங்கே அமையப் பெற்ற யாழ்ப் பாணத்தின் வடபால் நானிலச் சிறப்புக் கொண்டமைந்த வலிவடக்குப் பிரதேசமானது பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற வரலாற்று புகழ் மிக்க ஆலயங்களையும் பல்துறைக் கலைஞர் களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

இங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயத்தையும் மீன்பிடியையும் வாழ் வாதாரமாகக் கொண்டிருந்த போதிலும் கலை கலாசாரங்களைப் பேணுவதிலும் ஈடிணையற்றவர்களாக விளங்குகின்றனர். ஆன்மீக மேம்பாட்டிற்காக இதிகாச புராணங்களுடன் தொடர்புடைய பாவம் போக்குகின்ற நகுலமுனிவருடன் தொடர்புடைய நகுலேஸ்வரம் இந்துக்களின் பிதிர்க்கடன் தீர்க்கின்ற புனித தீர்த்தக்கரையையும் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியுடன் தொடர்புடைய மாவிட் டபுரம், தெல்லிப்பளை துர்க்கையம்மன் போன்ற ஆலயங்கள் சான்றுபகர்வனவாக உள்ளன.

எனவே எமது கலை கலாசாரங்களைப் போற்றிப் பேணிக்காப்பது அனைவரதும் தலையாய கடமையாகும். ஆகவே தெல்லிப்பளைப் பிரதே செயலகக் கலாச்சாரப் பேரவையானது மாருதப்புரவீகம் என் னும் பண்பாட்டு மலரினை நடாத்தப்பட இருக்கின்ற கலாசார விழாவில் வெளியிட இருப்பது எமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச் சியைத் தருகின்றது. அழிவடைந்துவரும் பண்பாட்டு பொக்கிசங் களை ஆவணப்படுத்துவதன் மூலம் இக்கால சந்ததியினர் மட்டு மன்றி எதிர்கால சந்ததியினரும் அறிந்து கொள்ள இத்தகைய மலர் வெளியீடுகள் துணை நிற்கின்றன. எனவே இவ்வரிய முயற் சியில் ஈடுபட்ட பிரதேச செயலாளர், மலர்க்குழு, கலை ஆர்வலர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரி வித்துக் கொள்கிறேன்.

**ரூபினி வரதலிங்கம்,**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

## வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளைப் பிரதேச செயலகக் கலாசாரப் பேரவையினால் நடத்தப்பட இருக்கும் கலாசார விழாவிற்கும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் மாருதப்புரவீகம் எனும் பண் பாட்டு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

இத்தகைய விழாக்களை நடத்துவதன் மூலம் தமிழ் மக்கள் மத்தி யில் அவர்தம் பாரம்பரிய இலக்கிய மரபுகளைப் பேணுவதற்கும், நவீன இலக்கிய முயற்சிகளை வளர்த்தெடுப்பதற்கும் அடிப் படையாக அமைகின்றது. தொடர்ச்சியான இத்தகு நடவடிக்கை கள் இளம் சந்ததியினருக்கு நமது கலை, கலாசார விழுமியங் களை கையளித்து மேம்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையாக விளங்குகின்றது.

அரச நிறுவனங்களாக இயங்கும் அமைப்புக்கள் இத்தகைய நட வடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம், மக்கள் மனதில் எமது மொழி, இனம், கலாசாரம், பண்பாடு தொடர்பான நம்பிக்கை உணர் வுகள் வேரூன்றி திழைப்பதற்கு வழிவகுக்கின்றது என்பதில் ஐய மில்லை.

அவ்வகையில், கலாசார விழாவொன்றைச் சிறப்பாக ஒழுங் கமைத்து நடத்த முன்வந்துள்ள தெல்லிப்பளைப் பிரதேச செயலா ளருக்கும், கலாசாரப் பேரவை உறுப்பினருக்கும், விழா ஒழுங் கமைப்பாளர்களுக்கும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன்.

கலாசார விழா நினைவாக வெளியிடப்படும் "மாருதப்புரவீகம் என் னும் பண்பாட்டு மலர் சிறந்த ஆக்கங்களைக் கொண்டவொரு தொகுப்பாக அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்.**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**கொழும்பு - 4**

## "மாருதப்புரவீகம்" பண்பாட்டு மலருக்கான வாழ்த்துரை

யாழ்ப்பாண மாவட்டத்திலே ஒவ்வொரு பிரதேசமும் தமக்குரிய கலை, கலாசாரப் பாரம்பரிய விழுமியங்களைக் கொண்டு திகழ்கின்றன எனலாம். இந்த வகையிலே வரலாற்றுத் தனித்துவம் மிக்கதான ஒரு பிரதேசமாகவும் இயற்கை எழிலும் கடல்வளமும், நிலவளமும் ஒருங்கே அமையப் பெற்று விளங்கும் பிரதேசமாகவும் தெல்லிப்பளைப் பிரதேசம் விளங்குகின்றது. இப் பிரதேசத்தின் கலை, கலாசாரப் பாரம்பரிய வரலாறுகளை உள்ளடக்கியதாக "மாருதப்புரவீகம்" என்னும் பண்பாட்டு நூல் வெளிவருவது மிகவும் போற்றத்தக்க பயன்மிக்க ஒன்றாகும்.

மனிதனுடைய வாழ்க்கையிலே கலாசாரம் என்பது மிகவும் முக்கியமாகக் கடைப்பிடிக்க வேண்டியதொன்று. பண்பாடும் நாகரிகமும் சார்ந்த கலாசாரமானது அப் பிரதேசப் பாரம்பரியத்தினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. கலை கலாசாரம் அற்ற வாழ்க்கை ஒரு முழுமையற்ற வாழ்க்கையாகும். மக்களின் வாழ்க்கையினை அவர்களது பண்பாட்டு எச்சங்களே வெளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றினை வருங்கால சந்ததியினருக்குப் பாதுகாத்து வழங்க வேண்டியது எமது கடமையாகும்.

தெல்லிப்பளைப் பிரதேசமானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல ஆலயங்களையும், தொழிற்சாலைகளையும், வைத்தியசாலைகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குவதோடு பிரசித்தி பெற்ற பாரம்பரிய கலைகள் மற்றும் உருவாக்கப்பட்ட கலாசார முக்கியத்துவம் வாய்நத பல்வேறு தொல்லியல் மரபுகளைக் கொண்ட இடமாக இப்பிரதேசம் விளங்குகின்றது.

இவ்விடயங்களை உள்ளடக்கியதான நூலினை வெளியிடுவது சாலச்சிறந்தது. ஏனைய பிரதேசங்களில் கலை கலாசார விழுமியங்கள் மற்றும் பிரதேசம் சார்ந்த பாரம்பரியங்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். இப்பண்பாட்டு நூலானது எதிர்கால சந்ததியினருக்குப் பயன்மிக்க

ஒன்றாகத் திகழ்வதோடு இந்நூல் வெளியீடானது சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

க.கணேஷ்,
முன்னாள் அரச அதிபர்
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வடக்குக் கலாசாரப் பேரவையின் முதலேற்பாடான மாருதப்புரவீகம் வரலாற்றில்த் தடம்பதிக்க வாழ்த்துத் தெரிவிப்பதில்ப் பெரும் மகிழ்வடைகின்றேன்.

வடக்குமாகாணத்தின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இவ்வாண்டு பிரதேச செயலக மட்டத்தில்ப் பல அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அவற்றுள் ஒன்றான பிரதேசமலர் வெளியீடான மாருதப்புரவீகம் வெளிவருவது வாழ்த்தி வரவேற்கப்பட வேண்டியதாகும்.

வரலாற்றுத் தொன்மை மிக்க பூமியான வலிகாமம் வடக்கு, "கலைப்பூமி" எனச் சிறப்பித்துக் கூறப்படுவதோடு மாவையம்பதியிலே முத்தமிழ்க் கலாமன்றம் ஆண்டு தோறும் முத்தமிழ் விழாவினை நடாத்தி நாதஸ்வர, தவில் மேதைகளையும், வித்துவான்களையும் மட்டுமல்லாது வயலின் இசைக் கலைஞர்களையும் உருவாக்கி இப்பூமிக்கலைஞர்களின் வரலாற்றுத் தொன்மைகளின் உறைவிடமாய்த்திகழ்வதில் ஐயப்பாடில்லை.

அதுமட்டுமல்லாது, கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்கள், கைத்தொழிற்சாலைகள், செழிப்பு மிக்க விவசாய நிலங்கள், கடல்வளம் எனப் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டிருக்கும் வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் சிறப்புக்களையும் தொன்மைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததியினருக்குக் கையளிக்கும் முயற்சியின் அடையாளமாய் வரலாற்றில்த் தடம்பதிக்கும் மாருதப்புரவீகம் ஆல்போலத் தளைத்து, அறுகு போல் வேரூன்றி நிலைத்து நிற்க என் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உஷா சுபலிங்கம்
பிரதிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.

## வாழ்த்துச் செய்தி

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறும் கலாசார விழாவில் மாருதப்புரவீகம் என்னும் மலர் வெளிவருகின்றது என்ற செய்தி காதுக்குமட்டுமல்ல உள்ளத்திற்கும் இனிப்பான செய்தி. பிரதேச வரலாறு, மக்களின் வாழ்வியற் கோலங்கள், கலைகலாசார சமூகப் பண்பாட்டுச் செயற்பாடுகள், யதார்த்தநிலைத் தகவல்களை உள்ளடக்கி வெளிவரும் இம்மாருதப்புரவீகம் பிரதேசத்தின் பெறுமதிமிக்க ஆவணம் என்றால் மிகையில்லை. யுத்தத்தின் இரும்புப் பிடிக்குள் நீண்ட காலம் கிடந்து படிப்படியாக அழிவிலிருந்து மீண்டு பொலிவுபெற்றுவரும் இவ் வேளையில் இப்பொக்கிஷம் வெளிவருவது மிகப்பொருத்தமானதே. எண்பதுகளில் மிக அடர்ந்த குடித் தொகையையும், நீண்ட நெடுஞ் சமய சமூகப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், பொருளாதார முக்கியத்துவங்களையும் கொண்டு விளங்கிய வலி வடக்கு அதன் பல்வேறு சிறப்புக்களால்த்தான் தனித்துவத்தை பேணி வருவதையும் தவிர்க்க முடியாத முக்கியத்துவம் பெறுவதையும் காண்கின்றோம்.

கடல்வளமும், நிலவளமும், கனியவளமும், கலைகலாசார ஆன்மீக வளமும், அறிவுவளமும் நிறைந்திருக்கும் இம்மண்ணின் பெருமைகள் பேசப்படவேண்டியது காலத்தின் கட்டாயம். இவ்வரலாற்றுக் கடமையையும் பொறுப்பையும் புரிந்து கொண்டு வலி வடக்கு கலாசாரப் பேரவை மாருதப்புரவீகத்தை மலரவைத்தது பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்.

இவ்வாண்டு கலாசாரப் பெருவிழாவின் ஒரு சிறப்பு அம்சமாக வெளிவரும் மாருதப்புரவீகம் மந்தமாருதமாகவும் அவசியத்திற்கேற்ப சண்ட மாருதமாகவும் வீசி வலிகாமம் வடக்கு என்னும் வரலாற்றுப் பெருமைமிக்க மண்ணின் பெருமைகளை அறியாதவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்கும் ஊருக்கும் அயலார்க்கும், உலகெங்கிலும் உள்ளவர்க்கும் பரப்ப எனது வாழ்த்துக்களைக் கூறிப்பணிகிறேன்.

இ.த.ஜெயசீலன்
பிரதேச செயலாளர்
பருத்தித்துறை.

# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி

சரித்திரப் பிரசித்தி பெற்ற தெய்வீக தலங்களையும், பாரம்பரிய மான கலைப் பண்பாடும் நிறைந்த வலி வடக்குப் பிரதேசத்தின் பெருமையை அறியாதவர்களில்லை. இப் பிரதேசத்தின் பெரு மையை அனைவரும் அறியும் பொருட்டு மாருதப்புரவிகம் எனும் அரிய மலர்வெளியிடுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின் றேன். வலி வடக்குப் பிரதேச கலாசார பண்பாட்டுப் பேரவை பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளை நிறை வேற்றிவருவது கண்டு பெருமையடைகிறோம்.

பிரதேச செயலர் உயர் திரு க.ஸ்ரீ.மோகனன் அவர்களின் ஆற்றுப் படுத்தலில் இதே திட்டங்களை உருவாக்கி சபை சிறப்பாக செயற் பட்டுவருகின்றது. கலைஞர் கௌரவிப்பு முதல் நூல் வெளி யீடுகள், விழாக்கள் எனப் பல பணிகள் தொடர்ந்து இடம் பெறுவது கண்டு பூரிப்படைகின்றேன்.

ஈழத்துக்கலை வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் பிரதான திருவூர்கள் வலி வடக்கில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவைக் கந்தன் ஆலயத்திலிருந்தே நாதஸ்வர, தவில் கலைப் பண்பாடு ஏனைய பகுதிகளுக்கும் பரவியது என்பது உண்மை.

இருநூறு ஆண்டு பழமை வாய்ந்த கல்லூரி வலி வடக்கில் தோற் றம் பெற்ற வரலாறு முதல் உலகம் போற்றும் பல அறிஞ்ஞர்கள், கலைஞர்கள், கல்வி மான்களின் சிறப்பு வலி வடக்கின் தனித்து வம் எனலாம். எங்கள் அன்னை சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி பேராசிரியர் சு.வித்தியானந்தன் போன்ற வரலாற் றாளர்கள் வலி வடக்கு பெற்ற பெரும்பேறுகள் எனலாம். பண்டிதர் கள் மகாவித்துவான்கள் மலிந்த பூமியின் வரலாற்று ஆவணம் சிறக்க வாழ்த்தி, ஆசிகூறி அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு.திருமுருகன் ,**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பளை**

## மாருதப்புரவீகம் மலர் வெளியீடு
## மலர்க்குழு

01. திரு.கனகராஜா ஸ்ரீமோகனன்
பிரதேச செயலாளர்

02. திரு.குமாரசாமி பிரபாகரமூர்த்தி
உதவிப் பிரதேச செயலாளர்

03. சுப்பிரமணியம் சிவகுமாரன்
உதவித் திட்டமிடற் பணிப்பாளர்

04. திரு.பஞ்சராஜா கஜேந்திரன்
கணக்காளர்

05. திரு.குணபாலசிங்கம் சாந்தமோகன்
நிர்வாக கிராம அலுவலர்

06. திருமதி.தக்ஷாயினி செல்வகுமார்
கலாசார உத்தியோகத்தர்

07. திரு.வைரவன் கதிரமலை
சமூக சேவை உத்தியோகத்தர்

08. திரு.நடேசப்பிள்ளை நவீந்திரன்
கிராம உத்தியோகத்தர்

09. திரு.சிதம்பரநாதபிள்ளை திருச்செந்திநாதன்
முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர்

10. திரு.த.அருள்குமரன்
ஆசிரியர்.

# தெல்லிப்பளைப் பிரதேச செயலாளர் திரு.க. ஸ்ரீமோகனன் அவர்களது வெளியீட்டுரை

தெல்லப்பளை பிரதேச செயலக கலாசாரபேரவை மாருதப்புரப் வீகம் எனும் நூலை வெளியிடுவதில் மிகவும் பெருமையடை கின்றேன். இந்நூல் கவிதை, பண்பாட்டு, இசை, நாடகம், வரலாறு எனப்பல விடயங்களை தன்னகத்தே உள்ளடக்கியதாக வெளி வருகின்றது.

எமது வரலாற்றுப் பண்பாட்டுடன் பினனிப்பிணைந்த வகையில் மாவிட்டபுரத்தின் தொன்மையும் மேன்மையும் கொண்டதாகவே இந்நூல் பெயர் பெறுகின்றது. முனிவர்களும் வந்து முத்தி பெற்ற இடத்தின் பெருமை ஆவணமாக வேண்டியதன் வெளிப்பாடே இறைவன் அருளெனின் அது மிகையாகாது.

இந்நூலில் இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு ஆக்கமும் இயலு மானவரை எம்மால் பெறப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளன. தெல்லிப் பளை பிரதேச செயலர் பிரிவில் இலைமறை காயாக இருக்கும் பல பாரம்பரிய விடையங்களை வெளிக் கொண்டு வருவதாக இந் நூல் அமையுமென நம்புகின்றேன்.

இந் நூலிற்கான தகவல்கள் சேகரிப்பிற்கான காலம் வரையறைக்கு உட்பட்டதாகையால் காலத்தை கருத்திற் கொண்ட வண்ணமே வெளி வருகின்றது. தொடர்ந்து இத்தகைய பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் அனைவரதும் பங்களிப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கின்றேன்.

**பிரதேச செயலாளர்,**
**தெல்லிப்பளை.**

## பிரதேச செயலகம் - தெல்லிப்பளை மாருதப்புரவீகம்

நகர்ந்து கொண்டிருக்கும் ஆண்டில்
எமது கலாசார நகர்வுகளின் பார்வை

எமது பிரதேச செயலகத்தால்ப் பல்வேறு கட்டங்களில்ப் பல்வேறு பரிணாமங்களில் ஒவ்வொரு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே கலாசாரா பிரிவிலும் 2014ம் ஆண்டில் பல முன்னேற்பாடான நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை நோக்க முடிகின்றது. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு திணைக்களங்களுடனும் மாவட்ட செயலகத்துடனும் அமைச்சுக்களுடனும் இணைந்து பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. இவற்றை மேற்கொள்ளும் பொருட்டு மாகாண கலாசார உத்தியோகஸ்தர் கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தி யோகஸ்தர் மத்திய கலாசார அலுவல்கள் அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் அனைவரினதும் பிரதேச செயலாளரின் வழிகாட்டலுடனான இணைந்த சேவையாகவே காண முடிகின்றது.

மேலும் இவற்றின் செயற்பாடுகளை நோக்கின் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 25ற்கு மேற்பட்ட ஆலயங்களுக்குப் புனரமைப்பிற்காகவும் சில ஆலயங்களுக்கு அடித்தள வசதிகளுக்காகவும் நிதியுதவி வழங்கி செயற்படுத்தியுள்ளமையைக் காணலாம். அதிலும் குறிப்பாக வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கு ரூபா 10 லட்சம் புனரமைபிற்காக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தந்தை செல்வாபுரம் கன்னிவளவு பிள்ளையார் ஆலயத்தில்ப் புண்ணிய கிராமம் எனும் சிறப்பு நிகழ்வு இடம் பெற்றுள்ளது. அவ்வாறே சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் பன்னாலை சிவபூதவராயர் ஆலயத்தில் சிறப்பான சொற்பொழிவும் இடம் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டது.

நாட்டில் மழையின்மை காரணமாக எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வீணியவரை, வித்தகபுரம், தெல்லிப்பளை ஆகிய இடங்களில் ஆலயங்களில் மழை வேண்டிச் சிறப்பான பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. ,

அவ்வாறே இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் சில ஆலயங்கள், சில அறநெறிப் பாடசாலைகள் இந்து அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அறநெறிப் பாடசலைகளுக்கும் இசைக் கருவிகள், அறநெறிச் சீருடைகள், ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

அத்தோடு தவளக்கிரி முத்துமாரி அம்மன், கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலயம், குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் ஆகிய ஆலயங்களில் நிலவிய சில பிரச்சினைகள் பிரதேச செயலாளர் தலையீட்டினால்த் தீர்க்கப்பட்டது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு இந்துக் குருமாரிற்கு அடையாள அட்டைக்கு விண்ணப்பங்களை அனுப்பியதுடன் ஆலயங்களில் குரு பூசைகள் நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு மாவட்டச் செயலகத்தால்ப் பொறுப்பேற்கப்பட்டுக் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் பராமரிக்கப்பட்டுவரும் காளை மாட்டிற்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வரும் நிதியுதவி தொடர்பான நடவடிக்கையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

கௌரவ ஜனாதிபதி அவர்களது பிறந்த தினத்தினை முன்னிட்டு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், கீரிமலை நகுலேஸ்வர ஆலயம், தெல்லிப்பளைத் துர்க்காதேவி ஆலயம் முதலானவற்றில் விசேட பூசை வழிபாடுகளுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. அடுத்து மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நெறிப்படுத்தல்களின் அடிப்படையில் பாடசாலை மாணவர்கள், வெளியார்(திறந்த) அடிப்படையில்

பிரதேச மட்டத்தில் கலை இலக்கியப்போட்டிகளை நடாத்தி மாவட்ட மட்டத்தில்ப் பங்குபற்றுதல்களை ஏற்படுத்தி வெற்றிகளை ஈட்டுவதற்கும் வழிவகைகளை மேற்கொண்டமை.

அரச சிறுவர் ஓவியப்போட்டிகள், அரச நாடகப்போட்டிகள் போன்றவற்றில் பிரதேசம், மாவட்ட மட்டங்களில் பங்குபற்றுதல்களுக்கு வாய்ப்பளித்தல். ஊனமுற்றோரிற்கான கலை, இலக்கியப் போட்டிகளுக்கான பிரதேசமட்டத்தில் ஊனமுற்றோர்களைத் தெரிவு செய்து மாவட்ட மட்டத்திற்கு அனுப்பியமை. கலைஞர் ஊக்குவிப்புத் தொகையான 5000 ரூபா வினை வறிய கலைஞர்களுக்காக மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொடுத்தமை. கையெழுத்துப் போட்டிகளுக்காக கலைஞர்களை பங்குபெறச்செய்தமை. இதே போல் கலாசார மத்திய நிலையத்தினாலும் பல்வேறு கலாசார செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதாவது கலாசார மத்திய நிலையத்தினால் இசை, நடனம், நாடகம், ஓவியம் போன்ற கலைவகுப்புக்கள் இலவசமாக நடாத்தப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இங்கு பயிலும் மாணவர்கள் மாகாண மட்ட, தேசியமட்ட இசை, நடனம் ஆகிய போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றிகளும் பெற்றுள்ளனர். அதிலும் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டியவிடயம் என்னவெனில் கலாசார மத்தியநிலைய மாணவர்களின் நடன நிகழ்வுகள் ரஸ்சியாவில் பெரஸ் நாட்டில் மேடை ஏற்றப்பட்டமை ஆகும். அத்தோடு இம் மாணவர்கள் வியாங்கொடை, கண்டி மாவட்ட கலாசார மத்திய நிலைய மாணவர்களுடனும் இணைந்து கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயம் ஆகும்.

அவ்வாறே வழமையான வருடங்களை விட இவ்வருடம் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச கலாசார அபிவிருத்தித் திட்டங்களுக்கென நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகக் காணப்படுகின்றது. அவற்றில்ப் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும் சில இவ்வருடத்திற்குள்

பூர்த்தியாக்கப்படும் நிலையிலும் உள்ளன. அவ்வாறு ஒதுக்கப் பட்ட நிதியில் கலைஞர்கள் சந்திப்பு, கலை மன்றங்களுடனான சந்திப்பு, கலாசாரப் பேரவை உறுப்பினர்களுடனான சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் மேற்கெள்ளப்பட்டு செயற்றிட்டங்களும் நடைமுறைப்படுத்தல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதாவது பாரம்பரியப் பொருட்களின் கண்காட்சி ஒன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழாவன்று மாவை பொதுச்சேவைக் கழகத்தின் மூலமான ஒழுங்குபடுத்தல்களுடன் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் பாரம்பாரிய விழாவான ஆடிப்பிறப்பு நிகழ்வும் மாவிட்டபுரம் ஆலய முன்றலில் பிருந்தாகானலய நிறுவனத்தின் வாயிலாகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே கலாசார விழிப்புணர்வு நாடகமும் பல இடங்களில் மேடை ஏற்றப்பட்டதுடன் பாடசாலை மாணவருக்கான நாடகப்பயிலரங்கும் மேற்கொள்ளப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் இந்நிதியினூடாகக் தெல்லிப்பளை கலை இலக்கியக்கழத்தின் ஒழுங்குபடுத்தலுடன் சிறுகதைப் பயிற்சிப்பட்டறையும் மேற்கெள்ளப்பட்டது. எமது பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வறிய எழுத்தாளாகளின் சிறுகதைத் தொகுதி வெளியீட்டிற்கு உதவும் பொருட்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள நிதியில் இருந்து ரூபா 25000 வழங்கப்பட்டது.

வடமாகாணத்தில் ஏனைய கட்டங்களாக ஒதுக்கப்பட்ட நிதிகளின் மூலமாக பிரதேச பண்பாட்டு விழா, கலைஞர் கௌரவிப்பு, பண்பாட்டு மலர்வெளியிடல், இறுவெட்டுவெளியீடு ஆவணப்படுத்தல்கள், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் என்பனவும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வறிய கலைஞர்களுக்காக மாதாந்தம் வழங்கப்படும் ஓய்வூதிய வரிசையில் அமரசிங்கம் இராசதுரை தெரிவு செய்யப்பட்டு அவரிற்கான கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கப்பட்டுவருகின்றது.

இவற்றினை விட எமது பிரதேச செயலக பிரிவில் வர்த்தமானி அறித்தலுக்குட்பட்ட ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம், தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம் அத்தோடு கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் போன்றவற்றின் வருடாந்த மகோற்சவ காலங்களுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு பிரதேச செயலாளரினால் கண்காணித்தலும், உற்சவகாலப் பணிமனைக் கடமைகளும் இடம் பெற்று வருகின்றது.

மாவட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் உற்சவ காலத்தில் 25 தினங்களும் கலாசாரப் பிரிவினரால் கலை நிகழ்வுகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் சிறப்பாக கொண்டாடப்படும் விழாவான சிவராத்திரி தினம், ஆடி அமாவாசை திருநாள் போன்ற நன்னாட்களில் சிறப்புச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் கலாசார பிரிவினரால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் இறுதி நாளான தீர்த்தோற்சவத்தன்று தெய்வீக இசைச் சங்கமம் விஷேட நிகழ்வொன்று பிரதேச கலைஞர்கள் மூலமாக வலிவடக்கு கலாசாரப் பேரவையால் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு 2014ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்ற தேசத்தின் மகுடம் கண்காட்சித் தொடரில் இவ் வருடம் குளியாப்பிட்டி என்னும் இடத்தில் நடைபெற்ற கண்காட்சியில் எமது பிரதேசத்தைச் சேர்ந்த அமரர் ஏ.வி.ஆனந்தன் அவர்களது கைவண்ணத்தில் உருவான மரச் செதுக்கல்களின் காட்சிப்படுத்தல் அனைவரினதும் வரவேற்பை பெற்றது. அவற்றினை கலாசாரப் பிரிவினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு தேசத்தின் மகுடம் நிகழ்விற்கான கலை நிகழ்வுகள் போட்டி வரிசையில் எமது பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மாலாதேவி மதிவதனன் அவர்கள் பங்கு பற்றி (கவிதை) வெற்றியீட்டியமையும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். மேலும்

பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெறும் பொங்கல் விழா, சரஸ்வதி பூசை நிகழ்வுகளிலும் ஒழுங்குகளை மேற் கொள்ளும் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்தலும் இடம்பெற்று வருகின்றது.

2014 ஆண்டு தமிழ் சிங்களப் புது வருடத்தை முன்னிட்டு வசந்தம் தொலைக்காட்சியுடன் இணைந்து கலாசார பிரிவினரும் பாரம்பரிய விளையாட்டுக்களையும், கலை நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்திருந்தனர். மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற சித்திரைத் திருவிழாவிலும் எமது பிரதேச செயலகப் பிரிவின் சார்பிலும் கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால்க் கோரப்பட்ட சிறந்த நூற் பரிசுப் போட்டி 2014, முதலமைச்சர் விருது 2014 போன்றவற்றிற்குக் கலைஞர்களைத் தெரிவு செய்து அனுப்பியதுடன் அவர்களுக்கு இவ்வருடம் (இருவர்) முதலமைச்சர் விருதும் கிடைத்தமை சிறப்பம்சமாகும்.

அத்தோடு வட மாகாணசபைக் கௌரவ உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீடு மூலமாக இந்து ஆலயப் புனரமைப்பு, பண்பாட்டு நிகழ்வுகள், கிறிஸ்தவ ஆலயப் புனரமைப்பு போன்றவற்றிற்கான ஒழுங்கமைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இவ் வருடம் புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மற்றும் மறு சீரமைப்பு அமைச்சினாலும் எமது பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 3 ஆலயத்திற்கு நிதி கிடைக்கப்பெற்று அதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வருடத்திற்கான விருதுகள் வரிசையில் கலாபூஷணம் விருதிற்காகத் தெரிவு செய்து அனுப்பப்பட்டவர்களினுள் தெரிவு செய்யப்பட்டமையும் எமது செயலகத்திற்குப் பெருமை சேர்ப்பதாகவுள்ளது. மேலும் பிரதேச மட்டத்தில் நடைபெறும் அறநெறிப்பாடசாலை நிகழ்வுகள் ஆலய நிகழ்வுகளில் பங்கு பற்றுதல் வாணி விழாக்கள், கலை நிகழ்வுகளில் பங்கு பற்றுதலும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் நடாத்தும் பாரம்பரிய நிகழ்வுகள் கலாசார நிகழ்வுகளிலும்

பங்குபற்றியமையும் குறிப்பிடத் தக்கதாகும். எனவே இவ்வாறாக 2014 ஆண்டில் பல்வேறு செயற் திட்டங்களை நெறிப்படுத்தியும் முன்னகர்த்தியும் எமது பிரதேச செயலகரின் வழி நடத்தல்களுடன் செயற்பட்டு வருகின்றமையும் எதிர் காலத்தில் இச்செயற்பாடுகள் மேலும் விரிந்து பரந்து செல்லும் என்பதும் கண்ணூடு.

தொகுப்பு :- தக்சாயினி செல்வகுமார்
கலாசார உத்தியோகஸ்தர்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| சைவத்தின் மேன்மையும் மகிமையும் | 01 |
| பண்பாட்டுக் கோலங்கள் | 03 |
| மாவிட்டபுரம் கந்தசாமி<br>கோயிலின் சிறப்பு கலைகள் | 07 |
| சருகுகளாகிப்போகும் சடங்குகள் | 11 |
| தமிழர் கலாசாரம்<br>மாறவேண்டியதும், கூடாததும் | 15 |
| வலிகாமம் வடக்கு பிரதேசப் பத்திரிகைகள்<br>சஞ்சிகைகள் ஒரு ஆரம்ப ஆவண அறிக்கை | 20 |
| வாழ்வியலில் சடங்குகள் | 31 |
| உன்னை எண்ணி உயிர் வாழ்வேன் | 34 |
| பண்பாட்டின் பேணுகையாக<br>வெளிக்கிளம்பும் நாடகக்கலை | 35 |
| இசை நாடகங்களும் வலிவடக்கும்<br>ஒரு கலைஞனின் பார்வை | 38 |
| எமது வாழ்வில் தலையாய கடமைகள் | 43 |
| அன்பு கொண்டு நீயும் | 45 |
| வலி சுமக்கும் வலி வடக்கு | 46 |
| எம்நில மாட்சி தனைப்பாடும் | 47 |
| வலிவடக்கு த. ஜெயசீலன் | . 49 |
| தமிழன்னை | 51 |
| மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி<br>வீரகத்தி பிள்ளையார் வரலாறு | 52 |
| ஈழத்து இசைநாடக முகவரி<br>நடிகமணி வி.வி.வைரமுத்து | 55 |
| "ஒரு பிடி சாம்பல்" | 59 |
| ஆனந்த பைரவி | 68 |
| வலிகாமம் வடக்கு வரலாற்று<br>முக்கியத்துவம் | 70 |
| இதயம் கனிந்த நன்றிகள் | 74 |
| இறையருள் | 76 |

# சைவத்தின் மேன்மையும் மகிமையும்

இந்தச் சரீரம் கிடைத்தது நாம் இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம் என்ற அருமருந்தான வாக்கியம் தவப் பெருந் திரு. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் தந்தது. அரிது அரிது மானிடராதல் அரிது என்கின்றார் நம் ஔவைப்பிராட்டியார். இனிய வாழ்வு உண்டு உடுத்து உறங்கி இறப்பதுதான் முடிவல்ல. இதனை விலங்குகள் போன்ற ஐந்தறிவினை வாழ்வு என்கின்றனர் சைவ சான்றோர்கள். நாம் சைவ வாழ்க்கை வாழ்வதற்கு சைவசமயமே முன்னுதாரணமாக உதவுகின்றது.

சைவ வாழ்க்கை பற்றி புலோலி சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும், கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம் வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் பச்சையாகவே தோன்றும் வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும். கரியதாகிய காகமும் பச்சையாகவே தோன்றும் அது போல சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால் யாவும் உவப் பானதாகவே தோன்றும். இதனால் சைவத்தின் மேன்மையும் சைவ வாழ்க்கையும் புலனா கின்றது.

சைவ சமயத்தின் படி நாம் ஒவ்வொருவரும் ஆணவம் எனும் வியாதியால் நன்கு பீடிக்கப்பட்டு இருக்கின்றோம். ஆணவம் ஆண்மாவோடு அநாதியாக உள்ளது. ஆணவம் இருளிலும் கொடியது என்கின்றது சித்தாந்தம். இந்த வியாதியை தீர்க்க வல்ல வைத்தியர் ஒருவர் இருக்கிறார். அவர் தான் சிவபெருமான். இதனாலே சிவனை வைத்திய நாதன் என்று அழைக்கின்றோம்.நோயாளி ஒருவர் பொருத்தமற்ற உணவுகளை விரும்புதல் உண்டு. அதனால் வைத்தியர் கூடாத உணவுகளைக் கொடுக்கமாட்டார். இந்த வைத்திய நாதனாககிய இறைவனும் அவற்றை கிடைக்க அருளமாட்டார். சைவ ஒழுக்கத்தில் மிகவும் பிரதானமானது வீபூதி அணிதல் திருவைந்தெழுத்து ஓதுதல் ஆகும். இதனை கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன் என்னும் தேவாரப் பாடலால் அறியலாம், நம் நல்ல வாழ்வுக்கு திருநீற்றுப்பதிகம், பஞ்சாட்சரப்

பதிகம் தினமும் ஓதுதல் வேண்டும். மனிதப் பிறவி எடுத்த நாம் நமது உடம்பிலுள்ள உறுப்புக்கள்யாவும் நம் வாழ்வு பூராகவும் நன்கு இயங்க திருச்சங்க மாலை தந்தார். அப்பர் சுவாமிகள், திருநாவுக்கரசநாயனார் பாடிய திருச்சங்கமாலையில் மனித உறுப் புக்களுக்கு தலையே நீ வணங்காய், கண்காள் காண் மின்களோ, மூக்கே நீ முரவாய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நினை யாய், கைகால் கூப்பித்தொழீர் எனப்பணித்தார். கோயிற் புராணத் தில் வருங்கதைகளினாலே கோயில் எப்படி உண்டாவது? அங்கே பூஜை வழிபாடு எப்படி நடப்பது என்கின்ற விசாரத்துக்குரிய விடயங்கள் ஊகித்து உணரக்கூடியவைகள் என்கிறார் பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள்.

சிதம்பரம் பெருமாள் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திருத்தலங்களில் முதன்மையானது. புராதனமான தெய்வத்தன்மை வாய்ந்த சிதம்பரத்தை கோயில் என்று அழைக்கின்றோம். கோயில் என்பது சிதம்பரத்தைக் குறிக்கின்றது. உமாபதி சிவாச்சாரியார் கோயில் புராணம் செய்துள்ளார். திருக் கோவில்களை பரிபாலனம் செய்யும் ஒவ்வொருவரும் கோயில் புராணத்தை கற்கவேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சிதம்பர தலத்தின் மென்மையை உணர் ந்து சிதம்பர மான்மியம் செய்தார். இங்கு சைவப்பிரகாச வித்தி யாலயத்தை நிறுவி சைவப்பரிபாலனம் செய்தார். சைவமும் தமி ழும் நன்கு சிறப்புற அச்சியந்திர சாலை நிறுவினார். இவரின் மூதாதையரான ஞானப்பிரகாச முனிவர் அந்நியராட்சிக் காலத் தில் பசுக்கொலைக்கு அஞ்சி பாரத தேசம் சென்றார். அங்கு சிதம்பரத்தில் வழிபாடு செய்து ஒரு மடத்தையும் நிறுவி திருக் குளத்தையும் வெட்டினார். இத்திருக்குளம் இன்னும் ஞானப்பிர காசம் என்னும் பெயருடன் விளங்குகின்றது. சிதம்பரத்தில் தான் திருத்தொண்டர்களின் பெருமைகளைக் கூறும் தெய்வச்சேக்கிழார் தந்த பெரிய புராணம் அரங்கேற்றப்பட்டது. இத்துணை பல்வேறு சிறப்புக் களைக் கொண்ட சைவத்தின் மேன்மை யையும், மகிமை யையும் உணர்ந்து சைவ வாழ்வு வாழ்வோமாக.

**கா.சிவபாலன்**

# பண்பாட்டுக் கோலங்கள்

ஒரு இனத்தின் நடத்தைகளும், வாழ்க்கையை நடத்தும் முறை களுமே பண்பாடு ஆகும். இது முந்திய தலைமுறையிலிருந்து அடுத்த தலை முறை பெற்றுக்கொள்ளும் செல்வமாகும். நடத்தை கள் எல்லாம் பண்பாடு என்று சொல்லப்பட்டாலும் நீர் என்றால் நன்னீரையே குறிப்பது போல நன்நடத்தைகளே பண்பாடு எனப் போற்றப்படும். ஓர் இனத்தை அடையாளப்படுத்துவது அந்த இனத் தின் பண்பாடே ஆகும். பல்லாயிரக்கணக்காண இனங்கள் வாழும் இந்த உலகத்தில் தமிழர்களாகிய நாம் எங்கள் இனத்தின் தனித் துவத்தை அடையாளத்தை நிலைபெறச் செய்வதற்கு எங்கள் பண்பாட்டைக் காக்கவேண்டும். நமது நடத்தைகள் அனைத்திலும் பண்பாடு தங்கியுள்ளது.

சிறப்பாக எமது பெயர், உடை, உணவு, உறையுள், உபசரிப்பு முறை, உறவாடும் முறை, பெரியோரைக்கனம் பண்ணும் முறை, நமது சடங்குகள், விழாக்கள், ஒழுக்கமுறைகள் என அனைத்தி லும் பண்பாடு தங்கியுள்ளது. பெயரொருவரை, இவர் எந்த இனத்தைச் சேர்ந்தவர் எந்த மொழிக்கு உரியவர், எந்த சமயத் தைச் சேர்ந்தவர் எந்தபண்பாட்டிற்கு உரியவர், என்பதை அவ ருடைய பெயர் தான் அடையாளப்படுத்துகிறது. ஆணா, பெண்ணா என்பதைக் கூடப்பெயர் தான் அடையாளம் காட்டுகிறது.

அதனால்தான் எவருக்கும் பெயர் தான் முதல் அடையாளமாக உள்ளது. பெயர் இல்லாதவர் இந்த உலகத்தில் எவருமே இல்லை ஆதலால் பண்பாட்டின் வேர் பெயர் ஆகும் என்பது எல் லோருக்கும் தெரிந்த ஒன்று. தமிழர் களாகிய நம் முன்னோர்கள் அனைவரும் தமிழ்ப் பெயர்களை உடையவர்களாகவே இருந்த னர். பெயர் சூட்டுதலை ஒரு முக்கியமான சடங்காகவே செய்தனர்.

பெயரைக் கொண்டு பொருளை அறிதல் போல ஒருவரின் பெயருக் கேற்பவே அவருடைய நடத்தைகள் அமையும். என்பதால் ஒரு பெரியவர் மூலம் சுபநேரத்தில் இறைவனை வணங்கிப் பெயர் சூட்டி அப்பெயரை எல்லோரும் அழைத்து அக் குழந்தையை வாழ்த்துவர். இதனை சுப மகரணம் எனப் பஞ்சாங்கம் குறிப்பிடு கிறது. ஒரு மந்திரத்தை திரும்பத் திரும்பச் சொல்லும் போது

மந்திர பலன் கிடைக்கும். அது போல பிள்ளையின் பெயர் மந்திரம் போல் அமைய பிள்ளையின் பெயரைச் சொல்ல சொல்ல அப்பெயரின் பொருளுக்கேற்பவனாய் அவன் உருவாகிவளர் வான் அதனால்தான் பெரியவர்களின் பெயரையோ அல்லது வணங்கும் தெய்வங்களின் பெயரையோ வைக்கும் பண்பாடு நிலை பெற்று இருந்தது.

'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' என்ற வள்ளுவன் சொல் போலப் பிள்ளையின் பெயர் மந்திரம் போலப் பலன் தந்தது. இக்காலத்தில் இந்த உண்மைகளை நம்மவர்கள் மறந்து விட்டார் கள். அந்நிய மோகத்திற்கு உட்பட்டு பிறமொழிப் பெயர்களை வைக்கும் நிலை ஓங்கி வருகின்றது. அப் பெயர் குறிக்கும் பொருள் என்ன என்பதைப் பெற்றோர். அறிவதில்லை பெயருக்குரிய பொருளைப் பிள்ளைகளும் அறியமாட்டார்கள். இதனால் எங்கள் பண்பாட்டின் ஆணிவேராகிய தமிழ்ப் பெயர்களை இழந்து எம் இனத்தின் அடையாளத்தையே அழித்து அன்னிய மயமாகிக் கலப்படமாகி விடுவோம். இக்காலம் குழந்தைகளின் பெயர் களைப் பார்ப்போமானால் எதிர்காலத்தில் இவர்கள் தமிழர் தானோ என்ற நிலை உருவாகிவிடும். இனப்பற்று உள்ள ஒவ்வொருவரும் இதனை சிந்தனைக்கு எடுத்து பிள்ளைகளுக்கு தமிழ்ப் பெயர்களையே வைக்கவேண்டும்.

உடை:

உலகிலுள்ள பல்வேறு இனத்தவர்களுக்கும் தனித்தனி அந்தந்த இனத்தின் பண்பாட்டுக்கு ஏற்றமாதிரியான உடைகள் உள்ளன. இவை பெரும்பாலும் அவர்கள் வாழும் நாடுகளின் தட்ப வெப்ப சுவாத்தியத்துக்கு ஏற்றதாக அமைந்திருக்கும். உடை உடல் அழகிற்கு மட்டுமல்ல உடல் நலத்திற்கும் இன்றியமையாததாகும். தமிழர்களின் பண்பாட்டு உடை வேட்டி, சால்வை சேட்டு அல்லது நஷனல் ஆண்களுக்குரியது பருவம் எய்தாத பெண் குழந்தை களுக்கு முழுப் பாவாடை சட்டையும் பருவம் எய்திய பெண் களுக்கு முழுப் பாவாடை, சட்டையுன், துண்டுத் தாவணியும், வளர்ந்த பெண்களுக்கு சேலையும் உரியது. இக் காலத்தில் உடைகள் பெரிதும் மாறிவிட்டன. உத்தியோகம் மற்றும் தொழில் களுக்குச் செல்வோர், பாடசாலை மாணவர்கள் சீருடை அணிவது தவிர்க்க முடியாதது. எனினும் எங்கள் இனத்திற்குரிய திருமணம்

முதலான பண்பாட்டு விழாக் காலங்களிலும் ஆலய வழிபாடு முதலான இடங்களிலும் எமது பண்பாட்டு உடைகளை அணிவதற்குத் தவற விடக் கூடாது. அந்நிய இனத்தவர்களின் உடை அழகானது அல்லது கவர்ச்சிகரமானது என அணிதல் எங்கள் பண்பாட்டையும் இன அடையாளத்தையும் சிதைக்கும் செயலாகும்.

உணவு:
உண்ணும் உணவும் உடை போல மக்கள் வாழும் நாட்டின் சுவாத்தியத்திற்கேற்ப இயற்கையோடு இயைந்த உணவாகவே இருப்பதைக் காணலாம். தமிழர்களாகிய நாம் எங்கள் மண்ணில் உற்பத்தியாகும் தானிய வகை, பழவகை , கிழங்குவகை, இலை வகைக்கே முக்கியத்து வம் கொடுக்க வேண்டும். உண்ணும் போதும் குடும்பத்தினர் எல்லோரும் ஒன்றாக இருந்து அளவளாவி ஆறுதலாக உண்ணவேண்டும்.

அப்போதுதான் குடும்ப உறவு நிலைப்பதுடன் உண்ணும் உணவும் சரியாகச் சமிபாடடையவும் உணவு சமிபாடடைவதற்குத் தேவையான சுரப்புக்கள் சுரந்து சத்துக்கள் உடலில் உறிஞ்சப்படவும் வாயப்பாக இருக்கும். பல நாட்களுக்கு முன் சமைத்துக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விட்டு அவரவர் தமக்கு வசதியான நேரத்தில் சூடாக்கி உண்ணும் பழக்கத்தால் குடும்ப உறவும் உறவின் பயனும் பாதிப்படையும். நாம் மட்டும் உண்ணாமல் விருந்தினருக்கோ இல்லாதவருக்கோ பகிர்ந்து கொடுத்து உண்பதும் நமது பண்பாடு ஆகும்.

இதனை வள்ளுவர் குறளில் 'பகுத் துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் வகுத்தவற்றுள் எல்லாம் தலை' என்றும் 'செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு' என்றும் சொல்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

உறவாடும் முறை:
ஒருவனாகக் கண்டவுடன் முகம்மலர்ந்து வணக்கம் சொல்வதும் சொல்லும் போது இரு கரமும் கூப்பி வணங்குவதும் இன்றியமையாதனவாகும். மேலை நாட்டுப் பணியில் கைகுலுக்குவது எங்கள் பண்பாடு அல்ல. அது சுகாதாரமான வழக்கமும் அல்ல. எங்கள் வீட்டுக்குப் பிறர் வந்தால் எழுந்து நின்று வரவேற்பதும் அவர்

களை உபசரிப்பதும் அவர்கள் போகும் போது வாயில் வரை கூட்டிச் சென்று வழி அனுப்புவதும் இன்றியமையாதவையாகும்.

விழாக்கள் சடங்குகள்:

விழாக்கள் மற்றும் சடங்குகளுக்குப் போகும் போது எங்கள் பண் பாட்டு உடையில் போவதும், எங்கள் பண்பாட்டில் உறவாடுவதும், உபசரிப்பதும் இன்றியமையாதன இவ்விடங்களில் தான் இளம் பிள்ளைகள் எங்கள் பண்பாட்டைக் கற்றுக் கொள்கிறார்கள். தங் கள் வாழ்க்கையிலும் அவற்றைக் கடைப்படிக்கப் பழகுகிறார்கள் என்பதை மறத்தல் ஆகாது.

மங்கள விளக்கேற்றல்:

அனேகமாக எல்லா விழாக்களிலும் மங்கள விளக்கேற்றல் நடை பெறுவதைக் காண்கின்றோம். மங்கள விளக்கேற்றும் நோக் கத்தையும் முறையையும் கவனத்தில் கொள்வது குறைவு. ஒளி தான் உயிரினங் களை வாழ வைக்கின்றது.

இறைவன் ஒளிவடிவாக இருக்கின்றான். ஆதலால எக்கர்மத்தை யும் தொடங்கும் போது விளக்கில் ஒளிவடிவாக இறைவனை எழுந்தருளச் செய்து எடுத்த கருமம் இனிதே நிறைவடைய வேண் டும் என வணங் குதலே விளக்கேற்றுவதன் நோக்கம். ஆதலால் எல்லோரும் எழுந்து நின்று இறைவனை வணங்க, உரியவர்கள் பயபக்தியுடன் விளக்கேற்ற வேண்டும்.

விளக்கேற்றியவுடன் கடவுள் வணக்கம் பாடவேண்டும். எச்சமயத் தோராயிந்தாலும் தத்தம் சமய ஒழுங்குக்கேற்ற கடவுள் வணக் கத்தைப் பாடலாம். விளக்கேற்றும் போது காலில் சப்பாத்து இருப் பது முறையல்ல. புனிதமான இடம் ஆதலால் புனிதமாக நின்று சப்பாத்தைக் கழற்றி விட்டே தீபம் ஏற்றவேண்டும். பண்பாட்டுக் கோலங்கள் மிக விரிவானது. நம்முன்னோர் எங்களுக்காக விட்டுச் சென்ற செல்வங்கள் மதமாற்றங்களாலும் அவற்றின் அருமையை மறந்து விடுகின்றோம். நாம் செய்யும் ஒவ்வொரு கருமத்தையும் எதற்காக எப்படி என்று சிந்தித்து எங் கள் பண்பாட்டைக் காத்து அடுத்த தலைமுறைக்கு கையளிப்போம்.

**கலாபூசணம். சைவப்புலவர் - சு.செல்லத்துரை**

# மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலின் சிறப்பு கலைகள்

நமது தேசத்தின் பண்பாடு, நாகரிகம், உயிர், வளர்த்த பெருமை கலைகளுக்குண்டு. மக்களின் உணர்ச்சி, செயல்கள் வெளியிடும் சாதனமாக கலைகள் உள்ளன. ஆரம்பகாலத்தே கோயில்களோடு இணைந்தே கலைகள் வளர்க்கப்பட்டன. பக்தியுடன் கலை இணைந்திருந்தது. அவ்வகையான புனித கிராமமான மாவிட்ட புரத்தே மாருதப்புரவீக வல்லியின் பெருமை பெற்ற கிராமம் ஆகும். கலை வளர்க்கும் பூமியாகும் இங்கு இசை, நாட்டியம், நாதஸ்வரம், நாடகம், ஓவியம் மற்று கிராமியக் கலை களும் காணப்பட்டன. மாவிட்டபுரத்தே இல்லாத கலைகளே இல்லை என்று கூறுமளவு கலை சிறப்படைந்துள்ளது.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வீதியில் வீமன்காமம் பாடசாலை செல்லும் பாதையில் மங்கள வாத்தியம் எனும் தவில் நாதஸ் வரங்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும். சற்றுமுன்னே செல்ல கல்லிலே கலை வடிக்கும் சிற்பிகளின் உளி இசை ஒலிக்கும் மறு புரத்தே மரத்திலே உருவாகும் சிற்பம் செதுக்குபவர் காட்சிநமக்கு தென்படும். "மாலை ஆதீனம்" கலையை வளர்க்க கோயில் சூழ லின் இசைவேரளார் குலத்தை இருத்தி தவில் நாதஸ்வரக் கலையை வளர்த்தன். குருகுல கல்வி மூலம் மங்கள வாத்தியக் கல்வி போதிக்கப்பட்டது.
தபேலா, உடுக்கு, கரகம், பண்ணிசை போன்றன வீரசைவரின் கலைத் தொண்டு. இதை விட கடம், சங்கு, புல்லாங்குழல், கஞ்சிரா, வீணை போன்றன வாசிப்பதிலும் இவர்கள் வல்லவர் கள். அளவெட்டி, கீரிமலை, குரும்பசிட்டி, துன்னாலை, தெல்லிப் பளை போன்ற பகுதிகளில் இவர்கள் வசித்தார்கள் மாவிட்டபுரம் ஆலய உற்சவத்தில் இவர்கள் தமது கலையை அரங்கேற்று வார்கள்.

மாவைகந்தன் திருவீதியில் கலையை உணர்ந்து கொள்ள முத் தமிழ் கலைமன்றம், மாலை கவின் நாடகம் கலாமன்றம் என்ப வற்றை அமைத்து களைஞர்கள் ஒன்று கூடி இயல், இசை, நாட

கத்தை வளர்த்தார்கள். இவற்றை விட கிராமியக் கலைகளில் அண்ணாவிமார் இருந்து வசந்தன்கூத்து, கரகம், கூத்து போன்ற கலையை வளர்த்தனர். உடுக்கபிடித்து காவியம் பாடுதல் இவ் வூரின் தனிப்பிரசித்தமானது. வட்டமாக கோலாடும் மரபு வசந்தன் கூத்தின் தனிபிரசித்த பூமியும் இதுவாகும். நாடகத் துறையில் பல நூல்கள் எழுதி வெளியிடப்பட்ட நாடக நூல்கள் பூதத்தம்பி, வாழ்வு பெற்றவள்ளி, நான் யார், இளைப்பறினார் இளையதம்பி, அறிவுகொழுத்திய அமரர் போன்றன மாலை சண்முக சுந்தரத்தி னால் எழுதிவெளியிட்டு பின்மேடையேற்றப்பட்டன.

புராணபடலம் ஓதும் மரபு மாவிட்டபுரம் பகுதியில் கந்தசாமி கோயில், வீணியவரை இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோயில், வருடாவருடம் கந்தபுராணம், திருவாதவூர் அடிகள் புராணம் படித்து பயன் சொல்வது மரபாகும் புராணபடல கலைஞர்கள் இங்கு இருந்து வேறு இடங்கள் சென்று புராணபடலம் ஓதிய மரபும் கோயிலில் மாணவர்களை வழிநடத்த பிரசங்கம் போன்றனவும் அவ்வூரில் உள்ளன. பேச்சு கலையை வளர்க்கவும் பல முயற்சி கள் ஆலயங்கள் மூலம் இடம்பெற்றன. இதில் வித்துவான் சுப்பை யாபிள்ளை, பண்டிதர் சச்சிதானந்தன், சங்கரப்பிள்ளை பண்டிதர் சிவஸ்ரீசண்முகநாதகுருக்கள் மறக்கமுடியாதவர்கள்.

மாவை கந்தசுவாமி ஆலயத்திருவிழாவும் கலையும் என எடுத்து நோக்கும் போது தைப்பூசத்தன்று சண்முகப்பெருமான் தேர் ஏறிவரும் போது திரு நடனக்காட்சியும் இதில் வாத்திய இசையும் காணப்படும். கார்த்திகை திருவிழாவன்று காவடி எடுப்பவர்கள் அதிகம். மாவிளக்கேற்றி சகஸ்ர நாம அர்ச்சனை வழிபாடு. விஜ யதசமி அன்று கந்தசாமி, துர்க்கையம்மனை நோக்கி எழுந் தருளி அங்கு பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். கார்த் திகை கார்த்திகையில் செற்க்கபனை கொளுத்தி வீதி வலம் இறைவன் வரும் போது பட்டாசு கொளுத்தும் மரபு, தீப்பந்தவிளையாட்டு கலைகளும் காணப்படும். திருவெம்பாவையில் வீதியில் பயனை பாடும் பண்ணிசை கலையும் நடைபெறும்.

பஞ்சரதத்தில் லிங்கேஸ்வரர், கந்தசாமி, சந்திரசேகரர், சண்

முகர், சண்டேஸ்வரர், வரிசையாக வரும் காட்சிபிரம்மிய மானது என்பதுடன் இவ் 5 மூர்த்திகளும் விக்கிரகலையை பறைசாற்று கிறது. பெரும் சப்பறம் அசையும் போது "அசையும் கோபுரமோ" அல்லது "மாமலை ஒன்று ஊர்கின்றதோ" என பக்தர்கள் ஏங்கு வார். அரோகரா, அரோகரா எனும் ஓசை ஒரே மாதிரியாகவும், கோபுரக் கலையில் பல புராணக்கதைகள் சித்தரிக்கப்பட்டதும் பக்தி நெறிக்கு பக்தரை இட்டு செல்ல பகதியோடு பாடல்களை பாடியதாக திருவெம்பாவையும், பக்தி சிறப்புடன் பாடப்படும். திருப்புகழ் உற்சவ காலங்களிலும் வெள்ளிக்கிழமைகளிலும் நடை பெறுவதை காணலாம். இசை நாடகக்கலையில் காத்த வராயன்கூத்து, அரிச்சந்திரன் மயாணகாண்டம், தாளக்காவடி, மாலை ஆலயதெற்கு வீதியில் நடை பெறும். இதை அண்டியுள்ள சிறிய ஆலயங்கள் நிதி சேகரிக்க இக் கலையை அன்று அரங் கேற்றியதுடன் நாட்டியநாடகம் இத்துடன் இனைந்திருந்தது. இந்தி யாவில் இருந்து மாவிட்டபுரம் வந்து தங்கி இருந்து இசையை பரப்பினர். கோட்டூர்சண்முக சுந்தரம்பிள்ளை இவர்களில் ஒரு வராவர்.

அயற்கிராமமான குரும்பசிட்டியில் பல்கலைக்குரிசில் எனும் ஓவிய களைஞர் ம.ம.எ.செல்லையா நாடகம், வானொலி நாடகம் ஒவியற் றுறையில் பிரசித்திபெற்றவர் உயிரோவியம் உருவாக்குவதில் வல்லுவர் குறுகிய ஒளிப்பட விளம்பரம் வெளியிட்டு திரையிட்டனர். கலைப்பேரரசு ய.வ.பொன்னுத்துரை இசை நடனக் கலையை வளர்பதில் முன்னின்று உழைத்தவர் இவர்கள் கலையை வளர்க்க மன்றங்களையும் வைத்திருந்தனர்.

அடுத்து வில்லிசைக்கலைகள் அறிவு பொதிந்து அருமையான இசை கவிதைநயமும் பொருந்தி அநாவசியமான கதைகள் அற்ற வில்லிசைகள் இப்பகுதியில் திருவிழாக்காலங்களில் காணலாம் இறைவனை அலங் கரிக்கும் "சாத்துப்படிக்கலையும்" வளர்க் கப்பட்டது. மாவைகந்தசுவாமி ஆலயதின் மேற்கு மூலையிலும், வடகிழக்குமூலையிலும் களைஞர்கள் வசித்தார்கள். ஓம், வெற் றிலை, நட்சத்திரம், நாகபாம்பு போன்ற வடிவங்களில் சாத்துயிர் செய்து மக்களை கவர்ந்தன. எமவைகந்தன் ஆலயத்திருவிழாவு டன் இணைந்தகலைகளாக சங்கீத கதாபிரசங்கமும், ஆருத்திர

தரிசனத்தில் கந்தபுராணம் ஓதும்மரபும் இன்னிசை கச்சேரிகளும், பஜனைமூலம் பண்ணிசையும், மிருக யாத்திரையில் வேட்டை யாடல் நடனமும், பட்டுகுட திருவிழா, பொய்க்கால் குதிரை யாட்டம், சப்பறம், பஞ்சரதசாத்துப்படி கலையும் வெள்ளிகிழமை பாடசாலை மாணவரின் பஜனையும் உற்சவ காலத்தே பாடசாலை மாண வரின் கலை வெளிப்பாடும பாடசாலை திருவிழாக்களில் வெளிப்படுவதை காணலாம்.

## உசாத்துணை நூல்கள்


1)அருள்ஒளி - சிறப்புமலர் 2003
துக்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை
இலங்கை

2) காங்கேசன்கல்லி மலர் - காங்கேசந்துறை கல்விவட்டாரம்
அதிபர்கள் சங்கம்
1985

3) மாலை மதி சனசமூகநிலையம் ஆய்வுக்கட்டுரை



கு. கோபிராஜ்
வீமன்காமம் வடக்கு
தெல்லிப்பளை

# சருகுகளாகிப்போகும் சடங்குகள்

அநாதியான சைவ சமயத்தைப் பின்பற்றியே காலப் போக்கில் பல சமயங்கள் தோன்றின. ஆகம விதிகள் கட்டுப்பாடுகளுடன் ஆன் மீகத்தை போதித்து நன்மார்க்கத்தை காட்டி நிற்பதும் எமது சைவசமயமே ஆகும். இச்சமயத்தையே பின்பற்றி தோன்றிய பல சமயங்கள் யாவும் தாம் வகுத்துக் கொண்ட கட்டுப் பாடுகளிலிருந்து வழுவாது அர்ப்பணிப்புடன் பேணி வருகிறார்கள்.

ஆனால் மற்றாருக்கு வழி காட்டிய எமது சமயம் மட்டும் "வேலி அம்பரம் படலை சங்கடம்" என்றவாறு சிறந்த வழிகாட்டலின்றி இடத்துக்கிடம் காலத்திற்குக் காலம் தத்தமது தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் வழிபாடுகள் பூஜைகள் சடங்குகள் என் பவற்றில் வழிமுறைகளை மாற்றி அவற்றிற்கு அர்த்தமில்லாமல் செய்து வருகின்றார்கள். அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களே அரச கடமைகளில் பங்குபற்றலாம்.

துறைசார் கடமைகளை புரிவதற்கு அந்தந்த துறையில் அங்கத் துவமுடையவர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. அது போலவே சைவ சமயத்தைப் பின்பற்றவதற்கும் (பிரவேச தீட்சை) வழிப் படுத்துவதற்கும் (அந்தந்த சடங்குகளுக்குரிய தீட்சைகள்) உரிய பொருத்தமான தீட்சைகளைப் பெற்று தகுதி பெறவேண்டும். என்பது வெளிப்படையாகும். சிவாலயங்களில் பூஜை செய்தல் மற்றைய ஆலயங்களில் பூஜை செய்தல் விக்கிரகங்களை தீண்டு தல் அக்கினி காரியம் செய்தல் மஹோற்சவ கிரியைகளை ஆற்று தல் போன்றவற்றிற்கு அந்தந்த தீட்சைகளில் தகுதி பெறாத விடத்து சடங்குகளில் சங்கற்பிப்போரும், சங்கற்பம் செய்வோரும் "குளிக்கப் போய் சேறு பூசும் நிலைக்கு ஆளாவார்கள் என்பது எடுத்து நோக்கப்பட வேண்டியதொன்றாக உள்ளது. கோயில் என்பது இறைவனின் இருப்பிடமாகும் உள்ளமும் பெருங் கோயில் என குறிப்பிடப்பட்ட போதும் இவ்வுலகில் ஆகமங்கள் விதிகளுக் குட்பட்டு இறைவனை பிரதிஸ்டை செய்யுமிடமாதலே கோயில் எனவும் அவைதான் ஆன்மாக்களை லயப்படுத்தும் ஆலயங்கள் என்று கொள்ளப்படுவதும் கோயில்களில் சடங்குகளின் போது ஆகமங்கள் விதிகள் ஆசாரங்கள் எவ்வளவு தூரம் என்பது துல்

லியமாக தெரியவரும். இவை ஏழதலை பண்டிதர் மு.கந்தை யாவின் சிவாலய தேவை சித்தமாந்த விளக்கிற் சைவ கிரியைகள் அகோர சிவாச்சாரியாரின் பத்ததிகள் எனபவற்றின் மூலமாக தெளிவுபடுத்தப்படும்.

ஏதாவது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தேவை கருதி மின்சாரம் கடத்தப்பட வேண்டுமாயின் இரு முனைகளிலும் பொருத்தப்படும் கருவிகள் அந்தந்த தொழிற்பாடுகளுக்குரிய தகுதி, தரம் ஆகியவற்றோடு இருந்தால் தான் கடத்தியும் தனது தொழிற்பாட்டின் உச்ச பலனை வெளிப்படுத்தக் கூடியதாக இருக் கும். இதில் முறைகேடு இருந்தால் பாரிய எதிர்த்தாக்கங்கள் ஏற் பட்டு பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாய் மாறிவிடும் ஆன்மாவையும் இறைவனையும் இணைக்கும் சமயச் சடங்கு களிலும் மேற்படி கூற்றின் அவசியம் எந்தளவிற்கு தேவைப்படு கின்றது என்பது உணரக் கூடியதாய் உள்ளது.

பொதுவாக எல்லா சமயங்களிலும் அடிப்படையாகக் கொண்டுள் ளது அன்புடன் கூடிய விசுவாசம் ஒன்றேயாகும். நாம் மன விசு வாசத்துடன் இறைவனை உருக்கமாக வழிபட்டால் எமக்க தேவையானவற்றை இறைவன் நல்குவான். என்பது வழி வழி வரும் ஒரு கோட்பாடாகும். இறைவன் எம்மிடத்தில் தம் மீது காட் டும் அன்பை விட வேறு எதையும் பிரதிபலனாக எதிர்பார்ப் பதில்லை.

ஆனால் நாங்கள் இறைவனிடத்தில் பெற்ற பலனுக்கு காணிக்கை செலுத்துவதாக நினைத்து எமது மனத்திருப்திக்காக சிலகாரி யங்களை செய்கின்றோம். இதன் அடிப்படையில் தான் குதிரை முகத்துடன் இன்னல் பட்ட மாருதப்புரவீகவல்லியும் அன்புடனும் வைராக்கியத்தடனும் இறைவனை வழிபட்டதனூடாகவே மாவிட்ட புரத்தில் தனது குதிரை முகம் மாறப் பெற்றமையும் குதிரை முகம் மாறினாலும் குதிரை முகம் மாறிய உணர்வு நீங்காத போது இறை அருளினால் விநாயகரை வழிபட்டு பூரணமாக குண மடையப் பட்டது. இதற்கு காணிக்கையாகவே கொல்லங்கலட்டி வரத்தலம் அழகொல்லை, கும்பளாவளை (மாவிடு திட்டி) பெருமாக் கடவை ஆலங்குழாய், கல்வளை என்ற ஒரு நேர்

கோட்டில் வரும் ஏழு இடங்களில் விநாயகர் ஆலயங்களை அமைத்து அன்புடனும் வைராக்கியத்துடனும் இறைவனை வழிபடுவோர்க்கு இறையருள் (தனக்கு கிடைத்தது போன்று) கிடைக்கும் என்ற நோக்குடன் அமைத்ததாக கூறப்படுகின்றது. எமது சமய சடங்குகளில் பெருந் தொகையான பணம் விரயமாவது யாவரும் அறிந்ததொன்றாகும். இவ்விதம் பணத்தையும் காலத்தையும் விரயம் செய்து எமது சமயத்தின் சிறப்புக்களை இழிவுபடுத்தும் வகையில் அமைவதே இங்கு கவலைக்குரிய விடயமாக உள்ளது.

முக்காலத்தை விட நிகழ்காலத்தில் எமது சமய சடங்குகளில் பல்வேறு நிலையைச் சார்ந்தவர்கள் சமயத்தை சார்ந்தவர்கள் பங்குபற்ற வேண்டி இருப்பது சூழ்நிலை கருதி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியுள்ளது. இவர்கள் முன்னிலையில் எமது சமயச் சடங்குகளின் செயற்பாடுகள் மூலம் சமயம் இழிவு படுத்தப்படுவது யாவரும் அறிந்ததும் பூனைக்கு மணி கட்டுவது யார் என்று நினைத்தும் தெய்வகுற்றம் குரு தோசம் என்ற பயம் காரண மாகவும் இவற்றை வெளிப்படுத்தவதற்கு எவரும் முன்வரு வதில்லை இதற்கான காரணங்களில் ஆலய நிர் வாகத்தில் சமயம் சம்பந்தமான அக்கறை, கற்றறிவு, பட்டறிவு இல்லாத வர் களும் இடம் பெறுவதையும் ஒன்றாக கருதுவது மிகையாகாது.

குறிப்பாக இவ்விதம் ஆலயங்களில் நிறைவேற்றப்படும் பல சடங்குகள் இருந்தாலும் தாக்கத்தை ஏற்படுத்தும் பொது இடங் களில் நிறை வேற்றப்படும் முக்கிய இரு சடங்குகளில் சில குறிப் புக்களை இங்கே எதிர்பார்ப்பது மனங்கொள்ளத்தக்கது.

1. திருமணச் சடங்குகளில் கன்னிகாதானம் மாங்கல்யதாரணம் போன்ற சடங்குகள் மூலம் இணைந்தவர்களும் சந்ததி தொடர் பானவர்களுமே ஆசாரம் உள்ளவர்களுமாகிய சைவர்களே மற்ற வர்களுடைய திருமணச் சடங்குகளில் ஈடுபடலாம். என்றாலும் பதவி, முகமன், அந்தஸ்து செல்வாக்கு என்பவை இதனை தடை செய்வதும் சகுனங்கள் (கொட்டுமேளம் மூலம் தவிர்த்தல்) கிரியை வழிமுறைகள் (படப்பிடிப்பாளரின் அந்தப்பக்கம் பார், நெருங்கி நில், கொஞ்சம் பொறுங்கள்) போன்ற தலையீடுகள்

மூலம் கொச் சைப்படுத்தப்படுவதும் மணவறையை மறைப்பதாக அரசாணி மாலைகள் இடையில் அகற்றும் அட்டூளியம் அவற்றைத்தடுக்க முடியாத குருக்களின் பரிதாபம் அந்தரங்கமாக செய்ய வேண்டிய பூதாக்கலம் பணிதல், அம்பலத்தில் நிறைவேற்றும் அசிங்கம் அனாவசியமானவர்களினதும் ஆசார மில்லாதவர்களினதும் ஆசீர் வாதங்கள் மனநெருடல்களை தருவதுடன் சடங்குகளின் அத்தி வாரத்தையே பெயர்த்து விடுகின்றன.

2.மரணச்சடங்குகளில் தேவையற்ற தேவைகருதி இறந்தவர்களின் உடலை சிலதினம் வைத்திருப்பதாக உடற்பாதுகாப்பு என்ற கரணத்தை வைத்து ஒருபகுதி உறுப்புகள் அகற்றப்பட்டு பொதி செய்யப்பட்ட உடலை சவம் என்று பெயரிட்டு பணவிரயத்துடன் கும்பபூசை அக்கினி காரியங்கள் என்பன ஒரு காட்சிப் படுத்தல் நிகழ்வாக செய்து அதன்மூலம் செய்யப்படும் அபிஷேகம் அனுட் டானம் ஆகிய முக்கிய கருமங்கள் என்பவற்றை உரிய முறையில் செய்யாது (இதிலும் தீட்சை பெற்றவர்களே சம்பந் தப்படுத்தப் பட்டு) கவனித்துக்கொண்டு இருப்போர் மத்தியில் கடும் விமர்சனங் களை ஏற்படுத்தி சமயச்சடங்குகளை அர்த்தமற்றதாக்கி விடுகின் றனர். மரணவீட்டில் சோடாக்கள் குளிர்பானம் வழங்குதல் மது போதையில் ஆசாரமற்று இருப்பது என்பது இதில் அடங்கும்.

இக்குறைபாடுகள் குறிப்பிடப்படுவதன் நோக்கம் குறை கண்டு பிடிப்பது அல்ல சமயத்தொண்டு ,சமயப்பணி, சமயவளர்ச்சி ஆகியவற்றில் அக்கறையுடன் செயற்படுவதாக தம்மைக் காட்டிக் கொள்ளும் நிறுவனங்கள் தொண்டர்கள் சாசனங்கள் என்பவை இதில் தலையிட்டு தலை திறந்த வெளியில் நின்று அவஸ்த் தைப்படும் எமது சமய பாரம் பரியங்களை பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதற்கேயாகும். இது யாவையும் தனித்து குறை காண்பதற்கானது இல்லை என்பதை மீண்டும் குறிப்பிடுகின்றேன்.

**சா. தணிகாசலபதி**

**மாரிசிட்டி, அளவெட்டி.**

# தமிழர் கலாசாரம்
# மாறவேண்டியதும், கூடாததும்

கலாசாரம் என்ற சொல் லத்தீன் மொழியின் "கல்சரா" என்ற சொல்வேரில் இருந்து தோன்றியதாகும். உரோம எழுத்தாளர் "சிசீரோ" தான் இந்தச் சொல்லை முதன் முதலில் பாவித்தவராக கருதப்படுகின்றார். அப்போது "ஆத்மாவை பயன்படுத்தல்" என்ற அர்த்தத்தில் அது பயன்பட்டது.

கி.பி 17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இந்தச் சொல் பரவலாகப் பாவிக் கப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் இச்சொல் மனிதர்களை மேம்படுத்தல் குறிப்பாக கல்வியினூடு மேம்படுத்தல் என்று அர்த் தப்பட்டிருக்கின்றது. 18ம்,19ம் நூற்றாண்டுகளிலும் மனிதர்களின் முழுமை பற்றிக் குறிப்பதற்கே அது பெரும்பாலும் உபயோகிக் கப்பட்டது. எட்வேட் ரைலர் என்ற விஞ்ஞானி உலகளாவிய மனித ஆற்றலை குறிக்க இந்தச் சொல்லை கையாண்டுள்ளார்.

20ம்நூண்டின் ஆரம்பத்தில் தான் "மானிடவியல்" கற்கைகளின் மையப் பொருளாகக் "கலாசாரம்" மாறியது. குறிப்பாக அமெ ரிக்காவில் இதுபற்றிய பல கற்கைகள் அறிமுகமாயின. ஒரு சமூகம் தனது முன்னோர்களிடமிருந்து எவற்றையெல்லாம் கற்று கொள்கிறதோ அவற்றின் தொகுப்பை குறிப்பதாக இச்சொல்லின் அர்த்தம் மாறத் தொடங்கியது.

இன்று கலாச்சாரம் என்ற சொல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட இனக்குழுமத்தின் மொழி, சமயம், கலைகள், இலக்கி யம், தத்துவம், விளையாட்டுக்கள், உணவு முறைகள், உடை, கட்டிட அமைப்பு முறை, சடங்குகள், விழாக்கள், ஆபரணங்கள், நம்பிக்கைகள், எண்ணங்கள் போன்ற பல விடயங்களின் கூட்டு மொத்தம் என்ற கருத்தோடு உலாவருகிறது.

இந்தப் பின்னணியில் தமிழர் கலாசாரம் என்பதைப் பார்க்க வேண்டியுள்ளது. உலகில் இன்று வாழ்கின்ற இனக் குழுமங் களில் மிக ஆதியான மான ஒரு சிலவற்றுள் தமிழ் இனமும்

ஒன்று என்பது பெருமைக் குரியதுதான். ஆயினும் அதுதான் கலாசார அடையாளங்களை விரை வில் இழந்து விடுமோ என்ற நிஜமான பயமும் ஆய்வாளர் மத்தியில் தோன்றியுள்ளது.

கலாசாரத்தின் எல்லாக் கூறுகளையும் எந்த மாற்றமும் இல்லா மல் அப்படியே பேணிவர முடியுமா? பேண வேண்டுமா? என்றால் 'இல்லை' என்பதுதான் பதில். அதற்காக எல்லாவற்றையும் 'கை நழுவ' விடுவது அறியாமை.

மனிதன் ஆரம்பத்தில் விலங்குகளுக்குச் சமமாகத்தான் வாழ்ந் தான். விஞ்ஞான,தொழில் நுட்ப வளர்ச்சியோடு சமாந்தரமாக ஏற்பட்டதுதான் நாகரீக வளர்ச்சி. நாகரீகம் என்பது மனித சமூக மேம்பாட்டுடன் பிரபஞ்ச இருப்புடனும் சம்பந்தப்பட்டது. உதா ரணத்திற்கு உடை என்ற கலாச் சார கூறை எடுத்துக் கொள் வோம். ஆரம்பத்தில் உடை இன்றி வாழ்ந்த மனிதன் குளிர், வெய் யில், பாதுகாப்பு, மானம் என்ற பல காரணங்களுக்காக உடை அணியக் கற்றுக் கொண்டான்.

தமிழர் நூற்சேலை, பட்டுச் சேலை உடுக்கும் காலம் வந்தது. தமிழருடைய கலாச்சார உடை சேலை, பாவாடை, தாவணி, வேட்டி சட்டை என்று வந்தது. இது நாகரீக வளர்ச்சியின் உச்சம். முழுமையான உடையொன்றை ஒரு சமூகம் தனக்கென வகுத் துக் கொண்டது. திரும்பவும் அரை குறை ஆடைக்கு செல்வது கூர்ப்பின் பின் செல்வதாகும். பாலியல் கவர்ச்சி மிகுந்த ஆடைகள் சமூகப் பிறழ்வுகளை உருவாக்கும் வகை செய்யும். ஆகவே தமிழர் தம் கலாசார உடையைக் காப்பாற்றுவது எமது கடமை.

சங்க காலத்தில் தமிழ்ப் பெண்களின் நிலை மிகச் சிறப்பாக இருந்ததை எமது இலக்கியங்கள் சுட்டுகின்றன. அவர்கள் மிகச் சுதந்திர மாகக் கடலில் நீந்தி விளையாடினர் பந்து விளையாடினர். சிற்றில் இழைத்து விளையாடினர்.கிழங்கு, பயறு, உழுந்து ஆகிய தானியங் களைக் கொண்டு கொக்கான் விளையாடினர். ஆகவே கொக்கான் விளையாடுவது வீட்டிற்குத்

தரித்திரம் என்ற நம் பிக்கை தமிழர் கலாசாரக் கூறாக இருக்க முடியாது. சிறு பிள்ளை கள் அத்தகைய விளையாட்டில் ஈடுபடும் போது உள்ளங் கையின் சிறு தசைகள் விருத்தியடையும்.

திணைப்புனம் காத்தல், நிலத்தை தோண்டுதல், பயிர் விளைவித் தல், நெல்லுக் குற்றுதல் என்ற பல வேலைகளை சங்ககாலப் பெண்கள் செய்தனர். விடியற் காலையில் எழுந்து முற்றம் கூட்டுதல் போன்ற இல்லத்திற்கு செய்ய வேண்டிய பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர். வீட்டிற்குள்ளே பூட்டப்பட்டு வாழ்ந்தவர் களாக இருக்கவில்லை. அதே நேரம் இருந்து தவறுதல் பெரும் குற்றம் என்ற நம்பிக்கை பழைய தமிழ் சமூகத்தில் இருந்தது. ஆண் தவறினாலும் குற்றம் பெண் தவறினாலும் குற்றம். ஒரு வனுக்கு ஒருத்தி என்ற உறுதியோடு அன்பான இல்லற வாழ்க் கையில் ஈடுபடும் தமிழர் கலாச்சாரத்தை எந்தக் காலத்திலும் விட்டு விடக்கூடாது.

பெண்கள் நீராடிய பின் அகில் புகை இடுதல், கூந்தலை நீளமாக வளர்த்துப் பின்னுதல், கொண்டையிடுதல்,கொண்டையில் பூமாலை யணிதல் ஆகியவை தமிழர் கலாசாரங்கள். செயற்கையான வாசனைத் திர வியங்களை பாவிப்பதால் உடலுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பக்க விளைவுகள் தீமைகள் பற்றி விஞ்ஞானிகள் எச் சரிக்கத் தொடங்கி விட்ட நேரத்தில் இயற்கையோடு ஒட்டிய எமது கலாசாரக் கூறுகளைப் பின்பற்றி உடலுக்கு சந்தணம் பூசிக் கொள்வதே சிறந்தது.

பொன், வெள்ளி, மணி, பவளம், முத்து, சங்கு ஆகியவற்றால் ஆன நகை அணிதல் எமது பண்பாடு. ஆயினும் இன்றைய சூழலில் தங்க நகை அணிவது உயிரைக் கொடுக்கும் நிலையை உருவாக்குகிறது. காலத்தின் கோலம் கருதி தங்கத்தைத் தவிர்த்து ஏனையவற்றைப் பயன்படுத்தினர்.

ஒரு சமூகத்தில் பலதரப்பட்டவரும் இருப்பார். பணக்காரர் இருப் பார், அதிகாரம் உடையோர் இருப்பார், கற்றவர் இருப்பார், ஒரு பிரச்சினையின் போது பலரும் பலவித கருத்துக்களை முன்வைப் பார் யார் சொல்வது இறுதியில் சட்டபூர்வமாக ஏற்கும் முடிவாக

இருக்க வேண்டும். கல்வியா? செல்வமா? வீரமா? ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகாது என்று சினிமாப்பாடல் தமிழர் கலாச் சாரம் என்ன சொல்லுகிறது "அறிவுடையோர் சொன்னவழி அர சனும் செல்வான்" என்பதே எமது பண்பாடு முறையாகக் கசடற சான்றோர்களின் கருத்துக்களைக் கேட்டு நடக்கும் சமூகம் உயரும். தானியங்களும் காய்கறிகளும், பழங்களுமே எமது கலாசார உணவுகள். இந்த மூன்று உணவுக் கூறுகளையும் அதிகளவு சாப்பிட்டு வந்தாள் நோய்வராது என்றுதான் இன்று வைத்திய நிபுணர்களும் கூறுகின்றனர். இருக்கும் உணவை அடுத்தவருக்கு கொடுத்து உண்ணல் எமது பண்பாடு.

" விருந்து புறத்தாத் தாணுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற் பாற்றன்று"

என்பது குறள்.

மிக அரிதாகக் கிடைத்த நெல்லிக் கனியை தான் உண்ணாது, ஓளவை என்ற பெண் புலவருக்கு கொடுத்த அதியமான் இந்தக் கலாசாரக் கூறை மிகத் தெளிவாக சுட்டும் பாத்திரம். இன்று நாம் என்ன செய் கிறோம்?

உலகம் முழுவதும் எமக்குக் கிடைக்குமாயினும் பழிக்குரிய செயல்களை செய்யாதிருப்பதே தமிழர் தம் கலாசாரம். போதைப் பொருட்பாவனை, மதுப்பாவனை, புகைத்தல், சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் எதிரான துஸ்பிரயோகங்கள், களவு, கொலை, வாள்வெட்டு என்று சான்றோர் பழிக்கும் செயல்களை எந்தத்த யக்கமும் இன்றி செய்யும் ஒரு இனமாக எப்படி மாறினோம்? தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வெருவரும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயம். உயர்ந்த கலாசார அடையாளங்களே ஏனைய சமூகத்தினர் மத்தியில் எம்மை தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும். எவ்வளவோ சிரமப்பட்டு முன்னைய தலை முறையினர் எம்மிடம் கையளித்திருக்கும் பண்பாட்டுக் கூறுகளை ஓடும் தண்ணீரில் போட்டுவிட முடியாது.

கண்ணூறு பார்த்தல், நிமித்தம்பார்த்தல், குறி சொல்லல், குணம் பார்த்தல் போன்ற சில வழக்கங்கள் எமது கலாசார கூறுகளில் காணப்பட்டாலும் அவற்றுக்கு விஞ்ஞான ஆதாரம் இல்லாதிருப் பதால் கல்வி முன்னேற்றத்துடன் மெல்ல அழிந்து போகும்.

அதை அப்படி அழிந்து போக விடுவதால் சமூகத்திற்குத் தீங்கு ஏதும் ஏற்படாது. ஆக, கலாசாரத்தின் கூறுகள் ஒவ்வொன்றையும் நாம் தெளிவாக அறிந்து காப்பாற்ற வேண்டியவற்றை காப்பாற்றுவதற்கு கடுமையாக உழைப்பதோடு, அறிவு விருத்தியோடு விலக்கவேண் டியவற்றை விட்டுவிடவும் வேண்டும்.

**இலக்கிய வித்தகர்**
**திருமதி கோகிலா மகேந்திரன்**

## வலிகாமம் வடக்கு பிரதேசப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஒரு ஆரம்ப ஆவண அறிக்கை

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே எமக்கு அறிமுகமான பத்திரிகை துறையின் ஊடாக பெரும் இலக்கிய பங்களிப்பை வழங்கிய பகுதி யாக வலிகாமம் வடக்கு பிரதேசத்தை குறிப்பிடலாம். இங்கிருந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக பத்திரிகைப் பாரம்பரியம் நிலவி வந் துள்ளது. ஏடுகளில் எத்தனையோ இலக்கியச் செல்வங்களை பல் வேறு காரணங்களால் பல்வேறு காலங்களில் இழந்தமை போன்றே காகிதத்தில் உலாவிய எத்தனையோ இலக்கிய தோற்றங்களை யும் பல்வேறு காரணங்களால்,பல்வேறு காலங்களில் இழந்து வருகின்றோம்.

எல்லாவற்றையும் ஒன்றாகத்திரட்டி ஆவணப்படுத்தி பதிவுகளாக்க வேண்டிய பெரும்பணிகளை நிறுவனம் சார்ந்ததோ தனி நபர்களாக வோ கூட்டாகவோ ஆற்றவேண்டிய ஒரு சமுக கடமையாகும். ஒரு பிரதேசத்தின் பெருமை என்பது பிரதேசத்தில் எழுந்த இலக்கியங் களேயாகும். இழந்தவை பற்றிய இருப்பவை பற்றிய கணக்கெடுப் பாக இல்லாமல் ஒரு ஆவணப்பதிவாக இக் கட்டுரை அமைகின் றது. குறுகிய கால அவசரத்தில் தயாரிக்கப்பட்டமையால் ஏற்பட்டி ருக்கக்கூடிய தவறுகள், விடுபாடு கள், தகவல்களை சுட்டிக்காட்டி இவை பற்றி தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் வைத்திருப்போர் அறியத்தக்கதால் வருங்காலத்தில் சீர்செய்து தொடர உதவும்.

சுதேசநாட்டியம் தற்போதய உலகத்தைப் பத்திரிகையுலகமெனல் பொருந்தும். மேனாடுகள் பத்திரிகைகளினாலேயே முன்னேற்ற மடைந்துள்ளன. கீழ் நாடுகளோ பத்திரிகை விஷயத்தில் கவனம் செலுத்துவதாகக் காணோம் எமது யாழ்ப்பாண நாட்டில் தமிழ ருக்கெனத் தோன்றிய பத்திரிகைகள் பல. அவற்றுள் சில ஆதரவு கிடைக்காமல் அழிந்தொழிந்து போக எஞ்சியிருப்பவை மிகச் சிலவே. அவையும் ஆதரவின்மை என்னும் நோயால் பீடிக்கப்பட்டு ஒருவாறு உயிருடன் இருந்து வருகின்றனர்.

நமது நாட்டில் நடைபெறும் பத்திரிகைகள் பெரும் பாலும் சாதா ரண அறிவு படைத்தவர்களாளேயே ஆதரிக்கப்பட்டு வருகின்றன கல்லடி வேலுப்பிள்ளை சுதேஷநாட்டியம் பத்திரிகை 16.11.1932. இதழில் இது, 20-ம் நூற்றாண்டில் வெளிவந்த பத்திரிகையில் மிக

முக்கியமான பத்திரிகையாகக் கணிக்கப்படும் சுதேச நாட்டியம் என்ற வீராவேசம் சுதந்திர உணர்வும் ஆக்க இலக்கியத் திறனும் கொண்டு வசாவிளானில் இருந்து வெளிவந்த பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியாகும். இலங்கையின் புகழ் பெற்ற தமிழறிஞர்களுள், கவிதை, உரைநடை, பத்திரிகை கண்டனம், கட்டுரை, வரலாறு, ஆராய்ச்சி எனப் பல துறைகளிலும் ஆக்கங் களைத்தந்து சிறப்பிடம் பெற்றவர். சுதேச நாட்டியம் பத்திரிகை ஸ்தாபகரும் அதன் ஆசிரியருமாக விளங்கிய ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களே.

யாழப்பாணச் சரித்திரத்தைப் பற்றி ஆராயும் எவருக்கும் இவரால் எழுதப்பட்ட யாழ்ப்பாண கௌமுகி எனும் நூலின் அருமை நன்கு விளங்கும். இத்தகைய சிறப்புப் பெற்ற ஆசுகவி கல்லடி வேலுப் பிள்ளை அவர்களுக்கு தாமும் ஒரு பத்திரிகை நடாத்த வேண்டும் என்ற விருப்பம் பல நாட்களாக இருந்து வந்தது. 1860 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி பிறந்த இவரின் 40 வருட வாழ்வின் பின்பே இவ்விருப்பம் நிறைவேறியது.

இந்தியா சென்று செந்தமாக ஒரு அச்சு இயந்திரத்தை கொள் வனவு செய்து கொண்டு வந்து 15.09.1902 தொடக்கம் சுதேச நாட்டியம் என்ற பெயரில் அமைந்த தனது சரித்திரக் கீர்த்திமிக்க பத்திரிகையை தொடங்கினார். இதன் முதல் ஆசிரியராக சு.ஆசு கவி வேலுப்பிள்ளை அவர் களே விளங்கினார். இடையில் 1910 ஆம் ஆண்டளவில் இவர் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்த போது திரு.இரா.நல்லதம்பி ஆசிரியராகத் தொடர்ந்தார். பத்திரிகையின் வெளியீட்டாளராக திரு.சி.நல்லதம்பி விளங் கினார். வசாவிளான் சாரதாபீட அச்சுயந்திர சாலையில் அச் சிடப்பட்டது. The Jaffna Native Opinion என தலைப்பு குறிப்பிடப்பட்டு இருந்தது.

மாதம் இருமுறை வெளிவந்த சுதேசநாட்டியம் யாழ்ப்பாண மக் களின் எண்ணங்களை, கருத்து வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும் களமாக சமூக முன்னேற்றப்பணிகளை முன்னிறுத்தி உழைக்கவும் வேண்டி வெளிவந்தது. ஈழத்து தமிழ் பத்திரிகைகள் பற்றி ஆய்வு செய்த கலாசூரி.ஆ.சிவநேசசெல்வன் 19ஆம், 20ஆம், நூற்றாண்டு கால அனேக பத்திரிகைகள் சமய பின்னணியை கொண்டிருந்த சூழ்நிலையில் அவற்றிலிருந்து பெரிதும் விலகி சமூக நோக்கில் வெளிவந்த முக்கிய பத்திரிகை சுதேசநாட்டியம் ஆகும் என்கின்றார். மதுவிலக்குப் பிரசாரம்,

சீதனத்தின் கேடு போன்ற சமூகப்பிரச்சினைகளையிட்டு பத்திரிகை கள் குரலெழுப்ப முன்னோடியாக சுதேசநாட்டியம் திகழ்ந்தது.சமய விடையங்களை முற்றாக விட்டுவிடாது அதேசமயம் சமூக முன்னேற்றம் கருதிய பல விடையங்கள் இப் பத்திரிகையில் வெளியாகின. ஆங்கிலக் கல்வி கற்றதன் மூலம் இலங்கையில் 19ஆம் நூற்றாண்டில் மத்தியதரவர்க்கம் ஒன்று உருவாகி வளர்ந்து வந்த அக் கால கட்டத்தில் சுதேச மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை அக் காலப் பத்திரிகைகள் வளர்க்க துணை செய்தன.

அச்சு இயந்திரங்களின் அறிமுகத்தால் மேனாட்டவரின் நூல்கள், வெளியீடுகள் சமயப்பிரசார வெளியீடுகள் தாரளமாகப் பெருகி வலம் வந்த நிலையில் சுதேச மக்கள் மத்தியில் சுயபாஷை, சொந்தச் சமயம் சம்பந்தமான விழிப்புணர்வை மேம்படுத்துவதில் இப்பத்திரிகைகள் பெரும் பங்காற்றின என ஆய்வாளர்கள் குறிப் பிடுகின்றனர். சமய முன்னேற்றம் கருதி வெளிவந்த சுதேச நாட்டி யம் ஆசுகவி வேலுப்பிள்ளையின் நிழலில் சுமார் 30 வருடகாலம் சிறப்போடு விளங்கியது. அதன் பின்னர் திரு.சி.நல்லதம்பி அவர் கள் பொறுப்பில் வெளிவந்தது.

பழமைக்கும் புதுமைக்கும் இப் பத்திரிகை ஒரு பாலமாக விளங் கியது என்று அவரது பேரன் விஜயேந்திரன், புலவரன் ஆணித் தரமான கண்டனங்கள், கவிதைகள், பல்வேறு புலவரின் ஆக்கங் கள், சைவ சித்தாந்தக் கட்டுரைகள், பழந்தமிழ் இலக்கியக் கட்டு ரைகள், பெரியார்களின் வரலாற்றுக் கட்டுரைகள், நாவல்கள் , நாடகங்கள், நூல் விமர்சனங்கள் போன்ற பலவித ஆக்கங்களும் வெளிவந்தன என்று குறிப்பிடுகின்றார். 19ஆம் நூற்றாண்டுக்கும் 20ஆம் நூற்றாண்டுக்கும் உரிய இலக்கியப் போக்கு, சமூகப போக்கு, தேசநலன் போன்றவற்றை நிதர்சனமாக எடுத்துக்காட்டிய வலிகாமம் பிரதேசத்திலிருந்து வெளிவந்த இப்பத்திரிகையின் பிரதிகளை இன்று பார்வையிடும் வாய்ப்பு மிகவும் அருகியே போய் விட்டது.

தேசிய சுவடிகள் சாலையிலும் சில தனியார் நூலகங்களிலும் சில பிரதிகளே காணப்படுகின்றன. குருசந்திரோதயம் இப் பத்திரிகை 1908ஆம் ஆண்டிலிருந்து வசாவிளான் ஸ்ரீ சாரதாபீட அச்சுயந்திர சாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இதன் முதல் ஆசிரி யர்களாக பி.எம்.வைத்தியலிங்கம்பிள்ளையும், சு.அ.செல்லத் துரையும் விளங்கினர். யாழ்ப்பாண மக்களின் சமூக முன்னேற்றம்

கருதி வெளியிடப்பட்ட பத்திரிகை என்ற தகவலை இலங்கையின் தமிழ் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி என்ற ஆய்வில் திரு.இ.சிவ குருநாதன் பதிவுசெய்துள்ளார்.

இதே தகவலையொத்த பதிவை ஈழத்து தமிழ்ப்பத்திரிகைகள் ஓர் ஆய்வு நூலில் திரு.ஆ.சிவநேசச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். மேலும் பத்திரிகையின் அளவு 17"x8" என்று குறிப்பிடுவதுடன் தேசிய புராதன சுவடிச்சாலையின் பட்டியலை ஆதாரமாகக் கொண்டு தகவலை வழங்கியதாக குறிப்பிடுகின்றார். இலங்கை யில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் 1881-1984 ஒரு கையேடு நூலில் கோப்பாய் சிவம் அவர்கள் இப்பத்திரிகை 1907ஆம் ஆண்டு வெளிவந்ததாகவும் ஆசிரியர் பெயராக எஸ்.ஏ.செல்லத் துரைப் பிள்ளையை மட்டும் பதிவுசெய்துள்ளார். இப்பிரதேசத்தில் வெளி வந்த இப்பத்திரிகை சம்மந்தமாக மேலதிக தகவல்கள் திரட்டப் பெற்று ஆவணப்படுத்தும் முயற்சி வருங்காலத்தில் மேற் கொள்ளப் படல் வேண்டும்.

சைவச் சிந்தாந்த பானு இப்பத்திரிகை 1924ஆம் வசாவிளான் ஜெயஸ்ரீ சாரதா பீட அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. இதன் ஆசிரியராக தி.எஸ்.பண்டித் நடாாசா அவர்கள் விளங்கினார். இப்பத்திரிகையின் பிரதான நோக்கம் சைவ சமயத் தத்துவ விளக்கம் செய்வதாக அமைந்திருந்தது. புராணக் கதைகளும் சமய சீர்திருத்தக் கருத்துக்களும் பத்திரி கையில் அதிகம் இடம் பெற்று இருந்தன. பக்க அளவு 17"x11" ஆக அமைந்திருந்தது.

பஞ்சசக்தி:
1930ஆம் ஆண்டளவில் தெல்லிப்பளை பஞ்சகன்மிய பரிபா லன சபையின் வெளியீடாக இப்பத்திகை வெளிவந்தது. யாழ்ப் பாணம் ஸ்ரீ கணேச அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது. இதன் ஆசிரியாாக திரு.ஆர்.எஸ்.கார்த்திகேய ஆச்சாரி விளங் கினார். சைவசமயம் சார்ந்த விடயங்கள், தச்சுத்தொழில், சிற்பக்கலை என்பவற்றின் முன்னேற்றங் கருதிய விடயங்களும் இப்பத் திரிகையில் இடம் பெற்றன. பக்கஅளவு 18"x11"

ஈழகேசரி:
குரும்பசிட்டியைச் சேர்ந்த நா.பொன்னையாப்பிள்ளை ஆசிரியராக

வும் நிறுவுனராகவும் இருந்தார். இப்பத்திரிகை 22.06.1930 தொடக்கம் வெளிவரத் தொடங்கியது. இது ஓர் தேசிய பத்திரிகையாகவே ஆரம்பம் முதல் தன்னை வடி வமைத்துக் கொண்டது. சுன்னாகம் நகரில் பொன்னையா அவர்களுக்குச் சொந்தமான திருமகள் அச்சகத்தில் அச்சடிக் கப்பட்டது. செய்திப்பத்திரிகையாக விளங்கியமையால் இலங்கையின் சுதந்திரப் போராட்டம் பற்றிய செய்திகளையும் அரசியல் புலத்தில் பிரதான இடம் வகித்த சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், சேர்.வைத்தியலிங்கம் துரை சுவாமி போன்ற தமிழர் தலைவர்களின் கருத்துக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து செய்தி களை வெளியிட்டது.

அத்துடன் சமூகச் சீர்கேடுகளைக் களைய மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கட்டுரைகளையும் வெளியிட்டது. மேலும் ஈழத்து இலக்கியத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பத்திரிகையாக விளங்கியது. புகழ் பெற்ற எழுத்தாளர்களுக்கு மட்டுமல்லாமல் புதிய பலரையும் இலக்கியப் படைப்பாளிகள் ஆக்கி பெருந்தொண்டாற்றியது. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மகன் அம்பலவாணப்பிள்ளை, வித்துவசிரோன்மணி புன்னாலைக்கட்டுவன் கணேசையர், போன்றோரின் எழுத்துப்பணிகள் இப்பத்திரிகையில் சிறப்பிடம் பெற்றிருந்தன. சமயப் பத்திரிகையாக மட்டுமன்றி சமூக, இலக்கிய, அரசியல் பத்திரிகையாக பன்முகப்பணிகளை சிறப்பாக ஆற்றிய ஈழகேசரி பத்திரிகை 28 ஆண்டு வரை அப்பிரதேசத்தில் வெளிவந்தது. பொன்னையாப் பிள்ளையின் மறைவுக்குப் பின்னரும் ஈழகேசரி வெளிவந்தது.

தமிழன் :

இலங்கைப் பத்திரிகைத் துறை ஆற்றிய ஆவணப்படுத்தல் முயற்சியில் ஈடுபட்ட ஆய்வாளர்களின் பதிவுகளின் படி இப்பத்திரிகை 1926 ல் கந்தரோடையிலிருந்து வெளிவந்ததாகக் குறிப்பிடப்படு வது சில வேளை அங்குள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டதான தகவலாக இருக்கலாம். அதேபோல் 1930ஆம் ஆண்டில் வெளி வந்ததாக பதிவும் காணப்படுகின்றது. அதேசமயம் 1941-ம் ஆண்டில் வெளியிடப்பட்டதாக மூன்றாவது குறிப்பும் இருக்கின்றது. தமிழன் பத்திரிகையின் ஆசிரியர் வே.சாரங்கபாணி ஆவார்.

இவர் சுதேச நாட்டின் பத்திரிகை ஸ்தாபகர் வசாவிளான் கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் மூன்றாவது புதல்வர் ஆவார். ஈழத்தின் தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களுக்கு தலை சிறந்த முன்னோடியாக விளங்கியவர். தமிழ் ஆங்கில மொழிகளில் அற்புத மான எழுத்தாற்றலை பெற்றவர். ஆனால் இப் பத்திரிகைகளை நாம் மீண்டும் காணக் கூடிய வாய்ப்பு எப்போதோ முடிந்தகாரியம் தானோ.

கலாநிதி (தமிழராச்சி, மும்மாத இதழ் 1942) சுவர் தர்ம போதம் (சைவ சமய, மும்மாத இதழ' 1945) இவ்விதழ்களின் ஆசிரியராக விளங்கிய பிரம்மஸ்ரீ தி.சதாசிவஐயர் அளவெட்டியில் 1882 இல் பிறந்தவர். பின்பு கல்வி அதிகாரியாக பதவி வகித்த காலத்தில் சுன்னாகத்தில் வாழ்ந்தவர்.

இவரால் ஸ்தாபிக்கப்பட்ட ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் சார்பாக கலாநிதி என்னும் தமிழ் மொழி ஆய்வுச் சஞ்சி கையை பொருமுயற்சி எடுத்து வெளியிட்டார். 1942 இல் வெளி வந்த இச்சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலே பண்டிதர்களும், தமிழ் அறிஞர்களும் இருந்தார்கள். கலாநிதி சு.நடேசபிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வே.நாகலிங்கம், வை.இராம சாமிசர்மா, அ.வி.மயில்வாகனம் ஆகியோர் இடம்பெற்று தரமான ஆக்கங்களைத் தந்தார்கள். தி.சதாசிவஐயர் பிரமாண சமாஜம் என்னும் அந்தணர்களின் கூட்டமைப்பின் சார்பாக சவர்தர்மபோதம் என்னும் மும்மாத சஞ்சிகை ஒன்றையும் 1945இல் வெளியிட்டார். ஆலய கிரியைகள் பற்றியும், சமய தத்துவங்கள் பற்றியும், பல் வேறு ஆக்கங்களை வெளியிட்டார். சமஸ் கிருத மொழி சார்ந்த கட்டுரைகளும் இடம் பெற்று சிறப்பான வெளியீடாக விளங்கியது.

கலைஞானி:

1947ஆம் ஆண்டில் இப்பெயரில் குரும்பசிட்டியிலிருந்து சஞ் சிகை வெளியாகியது. கலைஞானி என்னும் அடைமொழியால் அறியப்படும் அ.செல்வரத்தினம் அவர்களை ஆசிரியராகவும் ஸ்தாபகராகவும் கொண்டு வெளிவந்தது. ஈழத் தமிழர் வரலாற்றை தேடற்கரிய ஆவணங்களாக அரும்பெரும் பொக்கிசங்களாகத் தொல்பொருள் சேகரிப்புக்களாகப் பேணிய பணியில் ஈடுபட்டவர் புகழ் பூத்த கலைஞரான கலைஞானி செல்வரத்தினம் ஓவியர், புகைப் படக்கலைஞர், நாடக விற்பன்னர், தொல்பொருள் சேகரிப்பாளர், சிறந்த பத்திரிகையாளர் என பன்முகக்கலை முகங் களோடு செயற்பட்டவர். கலை, இலக்கியம், வரலாறு, தொல்

பொருட் துறை சார்ந்த படைப்புக்களை கலைஞானி சஞ்சிகை கொண்டு வெளிவந்தது. மேலும் தகவல் களைத் திரட்டி இவரது பணிகள் பற்றிய ஆவணப்படுத்தல் நிறைவு செய்யப்படல் வேண்டும்.

தமிழ்மணி:

இது 1949ஆம் ஆண்டளவில் தெல்லிப்பளையிலிருந்து வெளிவந்த சஞ்சிகையாகும். இதன் ஆசிரியர் தெல்லியூர் செ.நடராசா. இவர் தமிழ் இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் மிக்க பரீட்சை யம் உள்ளவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருத மொழி வல்லுனர், வீரகேசரிதுணை ஆசிரியராகவும், சுதந்திரம் இணை ஆசிரியராக வும், இந்துசாதனம் ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் திகழ்ந்தனர். மேலும் இவர் யாழ்பாடி, ஜோதிடம் (1964) இளைஞன், வெள்ளியாரங்கம் என்னும் தலைப்புக்களையுடைய சஞ்சிகை களை வெளியிட்டுள்ளார் என அறிய முடிகின்றது. இச்சஞ்சிகை கள் பற்றிய மேலதிக தகவல்கள் திரட்டப்பட வேண்டும்.

வெற்றி மணி இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த சிறுவர் மாத இதழ் என்ற பெருமைக்குரிய இச்சஞ்சிகை 1950ஆம் ஆண் டில் குரும்பசிட்டியில் ஆரம்பமாகியது. வெற்றிமணி சஞ்சிகை ஆசிரியராகவும் ஸ்தாபராகவும் விளங்கியவர். புகழ் பூத்த அதிபரான திரு.மு.சுப்பிரமணியம் அவர்கள் ஆவார். பல படைப்பாளிகளை உருவாக்கியவர் 25 வருடகாலம் இச் சஞ்சிகை வெளிவந்தது யுத்த சூழல் நிலை காரணமாக நின்றுபோனாலும் தற்பொழுது சுப்பிரமணியம் அவர்களின் மகனான ஓவியக் கலை கள் க.சு.சிவகுமாரன் அவர்களால் ஜேர்மனி நாட்டில் வெளியிடப்படுகின்றது. இலங்கையிலும் இதன் பதிப்பு 2006 முதல் கிடைக்கப்பெறுகின்றது திரு.சிவகுமாரன் அவர்களை ஆசிரிய ராகக் கொண்டு சிவத்தமிழ் எனும் அன்மீக இதழும் ஜேர்மனியில் வெளியிடப்படுகின்றது. கலைமதி 1959 இல் அளவெட்டியிலி ருந்து வெளியான கலை இலக்கிய மாத இதழ் பொறுப்பாசிரியராக வித்துவான் சி.ஆறுமுகம் விளங்கினார்.

ஆசிரியர் குழுவில் திலகவதி நடராஜா, வ.பொன்னம்பலம், மாத கல் வ.கந்தசாமி, கே.சிவபாலன், க.சிவராமலிங்கம், க.சவிபாத சுந்தரம், இ.வே.செல்வரெத்தினம், ப.சந்திரசேகரம், வை.கனகச பாபதி, த.சேனாதிராஜா, எனப் பல தமிழறிஞர்களும், கல்விமான் களும் இடம்பெற்றிருந்தனர். சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர்களாக இருந்தவர்களின் வெளியீடாக குறிப்பிடக்கூடியது,

கவிதைகள், சமயக் கட்டுரைகள், தொடர் கட்டுரைகள், துணுக்கு கள், ஆய்வுக் கட்டுரைகள் அறிவியல் கட்டுரைகள் அன்பர் அவா (வாசகர் பக்கம்) சிறுகதைகள், இளைஞர் உள்ளம், உங்களுக் குத் தெரியுமா?, என பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றன. தனிப்பிரதி 25 சதமாகவும் ஆண்டுச் சந்தா மூன்று ரூபாவாகவும் இருந்தன. சிலம்பொழி இலக்கிய மாத இதழாக 1970 களில் தெல்லிப்பளையில் இருந்து வெளிவந்தது. ஆசிரியர் பழை யூர் சுந்தரம்பிள்ளை. சிலோன் விஜேந்திரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இலக்கிய இதழ் இதுவாகும். இவர் ஆசுகவி கல்லடி வேலுப் பிள்ளையின் பேரனாவார்.

அமுதா 1971ஆம் ஆண்டில் குரும்பசிட்டியில் இருந்து மன்மத இராஜனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாணவர் மாதம் இரு முறை இதழாகும் வேறு தகவல்கள் இல்லை. இசையாளன் 1972ஆம் ஆண்டிலிருந்து மாவிட்டபுரத்திலிருந்து வெளியாகிய கலை, கலைஞர் தொடர்பான சஞ்சிகை இதன் ஆசிரியர் கலாபூஷணம் S.R.ஞானசுந்தரம் அவர்கள் இவர் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சூழலில் இசைக் கலை, நாதஸ்வரக் கலை என்பவற்றை வளர்க்கவும், பாதுகாக்கவும், இசைவேளாளர் சங்கம் என்ற அமைப்பை நிறுவி அதன் தலைவராக இருந்து வந்தார். அச்சங்கத்தின் வெளியீடாக இசையாளன் என்னும் மாதச் சஞ்சிகை வெளியிடப்பட்டது.

அமுதா 1973 இல் காங்கேசன் துறை, க.குணரெத்தினம் என் பரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இலக்கிய சஞ்சிகை மேலதிக தகவல் இல்லை. உலகத் தமிழ் குரல் 1974ஆம் ஆண் டில் ஆவண ஞானி குருபசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களால் வெளியிடப்பட்ட சஞ்சிகை கண்டியில் அவரால் நிறுவப்பட்ட உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் சார்பாக வெளியிடப்பட்டது.

செந்தமிழன் 1778 ஆம் ஆண்டுவாக்கில் கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகராக இருந்து அதிலிருந்து வெளியேறி செந்தமிழர் இயக் கம் என்னும் அரசியலமைப்பபை உருவாக்கிய அளவெட்டி தோழர் வ.பொன்னம்பலம் ஆசிரியர் வெளியிட்ட அரசியல் சார்புப் பத்திரிகை தமிழ் இனத்தின் பிரச்சினைகள், அரசியல் பற்றிய பதிவுகளைக் கொண்டது. இளைஞர் குரல் 1978 இல் தெல்லிப் பளையில் இருந்து வெளிவந்த அரசியல் சார்புப் பத்திரிகை ஆசிரி யர் சோ.யோகநாதன் தமிழர் இளைஞர் பேரவை சார்பாக வெளி

யிடப்பட்டது. புதிசு 1980களில் அளவெட்டி அருணாசலம் இரவி, இளவாலை விஜேந்திரன், சேரன் ஆகியோரின் முயற்சியில் வெளி வந்த மும்மாத இதழ் ஆகும். ஆசிரியர் பணியை அ.ரவி மேற் கொண்டிருந்தார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் பெற்ற இலக்கியப் பயிற்சிகளால் ஏற்பட்ட உந்துதலால் இச் சஞ்சி கையை வெளியிட்டனர். நாட்டுப்பிரச்சனை காரணமான இளைஞர் கள் புலம் பெயர்ந்த சூழலில் நின்று போனது. இதில் கவிஞர் சு.வில்வரெத்தினம், ஆ.மு.விக்னேஸ்வரன், பேராசிரியர், எப்.ஏ.நுகு மான், போன்ற கல்வியாளர்களின் ஆக்கங்கள் இடம் பெற்றன. குறிப்பு அளவெட்டி ரவி புலம் பெயர் நிலையில் 1998 களில் லண்டனில் இருந்து புலம் எனும் சஞ்சிகையில் ஆசிரியரா கப் பணியாற்றி வெளியிட்டார். புலம்பெயர் படைப்பாளிகளின் படைப் புக்கள் இதில் இடம்பெற்றன.

14 இதழ்கள் 2000 ஒகஸ்ட், செப்டெம்பர் வரை இரு மாதங் களுக்கு ஒரு முறையாக வெளிவந்தது. கலை முகம் இச் சஞ் சிகை கலை, இலக்கிய இதழ், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற வெளியீடாக பல ஆண்டுகளாக வெளிவருகின்றது. ஆறுமாதத்திற்கு ஒரு இதழ் இதன் ஆசிரியராகவும் ஸ்தாபகராக வும் விளங்குபவர் இள வாலையைச் சேர்ந்த அருட்திரு கலாநிதி மரியசேவியர் அடியளார் ஆவார். இவரது அனுசரணை ஆலோ சனையுடன் நாடக அரங்கியல் சஞ்சிகையான ஆற்றுகை இதழும் வெளிவந்துகொண்டு இருக்கின்றது.

அன்னை புகழ் பூத்த இதழ் எழுத்தாளரும் அதிபருமான இணு. வை.நாகராசன் வெளியிட்ட சஞ்சிகை அன்னை ஆகும் இலக்கிய முத்திங்கள் இதழ் இதுவாகும். பாரதி பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் மயிலங்கூடல், இளவாலையிலிருந்து வெளியிட்ட சஞ்சிகையாகும்.

அருள் ஒளி 2002 ஆம் ஆண்டு ஆவணிமாதம் தொடக்கம் தெல் லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான வெளியீடாக அருள் ஒளி எனும் ஆன்மீக சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' எனும் மேலான கருத்தைக் கொண்டு இந்துசமயம் சார்ந்த பல்வேறு படைப்புக் களை வெளியிட்டு வருகின்றது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சீரியசிந்தனையில் உருவாகிய கருத்தை செயற் பாடாக்கி இதழை வெளியிடுகின்றோம் என ஆசிரியர்

பளையில் இருந்து வெளிவந்த அரசியல் சார்புப் பத்திரிகை ஆசிரியர் சோ.யோகநாதன் தமிழர் இளைஞர் பேரவை சார்பாக வெளியிடப்பட்டது. புதிசு 1980களில் அளவெட்டி அருணாசலம் இரவி, இளவாலை விஜேந்திரன், சேரன் ஆகியோரின் முயற்சியில் வெளிவந்த மும்மாத இதழ் ஆகும். ஆசிரியர் பணியை அ.ரவி மேற்கொண்டிருந்தார். தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் பெற்ற இலக்கியப் பயிற்சிகளால் ஏற்பட்ட உந்துதலால் இச் சஞ்சிகையை வெளியிட்டனர். நாட்டுப்பிரச்சனை காரணமான இளைஞர்கள் புலம் பெயர்ந்த சூழலில் நின்று போனது. இதில் கவிஞர் சு.வில்வரெத்தினம், ஆ.மு.விக்னேஸ்வரன், பேராசிரியர், எப்.ஏ.நுகுமான், போன்ற கல்வியாளர்களின் ஆக்கங்கள் இடம் பெற்றன. குறிப்பு அளவெட்டி ரவி புலம் பெயர் நிலையில் 1998 களில் லண்டனில் இருந்து புலம் எனும் சஞ்சிகையில் ஆசிரியரா கப் பணியாற்றி வெளியிட்டார். புலம்பெயர் படைப்பாளிகளின் படைப்புக்கள் இதில் இடம்பெற்றன.

14 இதழ்கள் 2000 ஓகஸ்ட், செப்டெம்பர் வரை இரு மாதங்களுக்கு ஒரு முறையாக வெளிவந்தது. கலை முகம் இச் சஞ்சிகை கலை, இலக்கிய இதழ், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற வெளியீடாக பல ஆண்டுகளாக வெளிவருகின்றது. ஆறுமாதத்திற்கு ஒரு இதழ் இதன் ஆசிரியராகவும் ஸ்தாபகராகவும் விளங்குபவர் இள வாலையைச் சேர்ந்த அருட்திரு கலாநிதி மரியசேவியர் அடியளார் ஆவார். இவரது அனுசரணை ஆலோசனையுடன் நாடக அரங்கியல் சஞ்சிகையான ஆற்றுகை இதழும் வெளிவந்துகொண்டு இருக்கின்றது.

அன்னை புகழ் பூத்த இதழ் எழுத்தாளரும் அதிபருமான இணு. வை.நாகராசன் வெளியிட்ட சஞ்சிகை அன்னை ஆகும் இலக்கிய முத்திங்கள் இதழ் இதுவாகும். பாரதி பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள் மயிலங்கூடல், இளவாலையிலிருந்து வெளியிட்ட சஞ்சிகையாகும்.

அருள் ஒளி 2002 ஆம் ஆண்டு ஆவணிமாதம் தொடக்கம் தெல்

லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான வெளியீடாக அருள் ஒளி எனும் ஆன்மீக சஞ்சிகை வெளியிடப்படுகின்றது. 'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' எனும் மேலான கருத்தைக் கொண்டு இந்துசமயம் சார்ந்த பல்வேறு படைப்புக் களை வெளியிட்டு வருகின்றது. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சீரியசிந்தனையில் உருவாகிய கருத்தை செயற் பாடாக்கி இதழை வெளியிடுகின்றோம் என ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரதேசத்தவரின் இலக்கியப் பங்களிப்பு மேலே பதிவு செய்யப் பட்டவை இப்பிரதேச வாசிகளால் நடத்தப்பட்ட பத்திரிகை, சஞ் சிகைகள் பற்றிய பதிவுகளாகும். இனி வேறு நபர்கள், நிறுவனங் களில் பங்கேற்று இப்பிரதேசத்தவர் பணியாற்றிய பத்திரிகை, சஞ்சிகைகள் பற்றிய பதிவு.

1955ஆம் ஆண்டு புகழ்பூத்த எழுத்தாளன் வரதன் நடாத்திய தேன் மொழி என்ற கவிதைக்கான இதழில் அளவெட்டியின் மகாகவி உருத்திரமூர்த்தி அவர்கள் இணை ஆசிரியராக விளங்கினார். 1948இல் வெளிவந்த ஸ்ரீலங்கா செய்திப்பத்திரிகை இலங்கை அர சாங்க தகவல் பகுதியின் அரசாங்க சமாச்சார திணைக்களத் துக்காக இலங்கை அரச அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இது அர சாங்க கொள்கை சிற்றிதழ் எனலாம். இதன் ஆசிரியராக விளங் கிய குல சபாநாதன், அளவெட்டி அ.ந.கந்தசாமி ஆகியோரின் காலத்தில் இலக்கிய வளர்ச்சியிலும் தனி அக்கறை எடுத்து வெளிவந்தது.

அளவெட்டி எழுத்தாளர் அ.ந.கந்தசாமி பத்திரிகைத் துறையின் பன்முகப் பணிகள் ஆற்றியவர் கட்டுரை, சிறுகதை, நாவல், நாட கம், கவிதை, இலக்கிய விமர்சனம் ஆராய்ச்சி கட்டுரைகள் எனப் படைத்தவர். கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை, தேசாபிமானி பத்திரிகையில் பணியாற்றினார் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார் பின் சுதந்திரன் வீரகேசரிப்பதிதிரிகையிலும் பணியாற்றினார் ஆங்கிலப்பத்திரிகையிலும் கடமையாற்றினார்.

## வாழ்வியலில் சடங்குகள்

சடங்கு மக்களது வாழ்வியலில் முதன்மையான அம்சமாக விளங்குகின்றது. ஆதிகால மனிதன் தொட்டு நாகரீகம் அடைந்த மனிதன் வரை சடங்கியல் சார் செயற்பாடுகள் காத்திரமானவையாக விளங்குகின்றன. சடங்குகள் மனிதர்களை ஒழுங்குபடுத்து வதற்கும் மனதிலே தெளிவு நிலையினை ஏற்படுத்துவதற்கும் துணை செய்கின்றன. சடங்குகள் மனிதர்களது வாழ்வில் மூன்று நிலைகளில் முதன்மை பெறுகின்றன.

அதாவது பிறப்பு, பராயமடைதல், இறப்பு ஆகிய நிலைகளில் முதன்மை பெறுகின்றன. எனினும் மனிதர்களது வாழ்வியலோடு தொடர்புடைய வகையில் இச்சடங்கு முறைகள் செல்வாக்கு செலுத்துகின்ற அதே வேளை ஆண்மீகம் சார்ந்த வகையில் கோயில்களது வழிபாட்டுடன் சடங்குகள் நெருங்கிய தொடர்பினை கொண்டிருந்தன. கோயில்களில் பூசாரிகள் வழிபாடுகளை மேற் கொள்கின்ற போது மக்கள் பயபக்தியுடன் பங்குபற்றினர்.

காலப்போக்கில் சடங்கு முறைகள் வழக்கொழிந்து செல்கின்ற போதிலும் சில ஊர்களில் இன்றும் வழக்கொழிந்து போகாமல் கோயில்களில் இடம் பெற்று வருகின்றன. கோயில் சடங்குகள் மக்களது உளவிடுதலைக்கான வடிகாலாகவும் அவர்களை பிரச் சினைகளில் இருந்து விடுவித்து வாழ்வில் நம்பிக்கை கொள் வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதனையும் அடிப்படை யாகக் கொண்டு இச் சடங்குகள் விளங்கு கின்றன. சடங்கு நிலை களில் உருவேறி ஆடுதல் மூலம் மக்களுக்கும் கடவுளுக்கும் இடையே நெருக்கமான ஆண்மீக ரீதியிலான தொடர்பு நிலை ஏற் படுத்தப்படுவதன் மூலம் மக்கள் தமது பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாக உள்ளது.

இப்பின்னணியில் மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தில் நீண்ட காலமாக இச்சடங்கு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இச்சடங்கு நிகழ்வானது அப்பிரதேச மக்கள் ஒன்று கூடுவதற்கும் அதே வேளை பிற தேசத்தவர்கள் இணைந்து கொள்வதற்குமான

வாய்ப்பு உருவாக்கப்படுவதாக உள்ளது. வரலாற்று சிறப்பு மிக்க தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளைக் கொண்ட பூசை வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்ட வகையில் மல்லாகம் பெரியதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் பெருவிழாவும் சடங்கு நிலையுடன் கூடிய வகையில் தீ மிதிப்பு நிகழ்வும் ஆலய பிரதம பூசகர் பெரியதம்பி தலைமையில் இடம்பெற்று வருகின்றது.

பொங்கல் பெருவிழா நிகழ்வினை முன்னிட்டு முதல் நாள் கோயில் வீதி மல்லாகத்தில் அமைந்துள்ள சாடிமனை ஆலயத்தில் அதிகாலை வேளை பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மதியம் விசேட பூசைகள் இடம் பெற்று அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு மாலை வேளை சாடிமனையில் விசேட பூசைகள் இடம்பெற்று பொங்கல் பொருட்கள் ஊர்வலமாக கே.கே.எஸ் வீதியூடாக மல்லாகம் சந்தியை அடைந்து நரியிட்டான் ஊடாக பிரதான ஆலயத்தை சென்றடைந்து விசேட பூசைகள் இடம் பெறும் மறுநாள் அதிகாலை பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பொங்கல் பானை வைக்கப்பட்டு பொங்கல் இடம் பெறும்.

மதியம் விசேட பூசைகள் இடம் பெற்று தீமிதித்தல் சடங்கும் பக்திபூர்வமாக இடம் பெறும் தமிழர் தம் பாரம்பரியங்களில் ஒன்றாக விளங்குகின்ற சடங்குடன் இணைந்ததான வழிபாட்டு முறையானது இன்றும் இங்கு சிறப்பாக நிகழ்த்தப்பட்டு வரு கின்றன. மனிதர்கள் தனிமனிதர்களாக அல்லாமல் சமூக செயல் நிலை உடையவர்களாக உருவாக்குவதற்கு இத்தகைய சடங்கு சார் செயற்பாடுகள் வாய்ப்பாகின்றன.

சடங்கு முறையில் பத்தி முறையிலான சடங்கு முறை ஒவ்வொரு சமூகத்தினராலும் தமக்குரிய வகையில் சிறப்பாக மேற்கொள் ளப்பட்டு வருகின்றனர் இச் செயற்பாடு அச் சமூகத்தினரது தனித் துவ செயற்பாட்டிற்கும் சமூகத்தின் பொறிமுறை செயற்பாட்டிற்கும் அடிப்படையாக அமைகின்றது பத்ததிச்சடங்குகளும் அவை வெளிப்படுத்துகின்ற முறைகளும் சமூகபண்பாட்டிற்கு ஏற்ப தனித்துவமானவையாக விளங்குகின்றன. பத்ததிச் சடங்குகள் சமூகத்தில் முதன்மை பெறுவதற்கு காரணமாக நோக்குகின்ற

போது உள ஆற்றுப்படுத்தலின் ஓர் அம்சமாக நோக்கலாம் காரணம் சடங்காடி தனது சன்னத நிலையில் பக்தர்களுடன் கடவுளாக தொடர்பு படுகின்றபோது அவர்களுக்கான எதிர்கால நம்பிக்கைக்கான ஆற்றுப்படுத்தலாக செயற்படுவதனை சடங்கு நிலைகளில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. மேலும் சடங்கு நிலைகளின் ஊடாக மூத்த தலைமுறையினரிடம் இருந்து இளைய தலை முறையினர் அறிவு பூர்வமான கருத்து நிலை களை உள்வாங்கிக் கொள்வதற்கான பயில் நிலை மிகுதியான செயல்முறையாக காணப்படுகின்றது.

இச்சடங்கு நிகழ்வில் முக்கியமாக விளங்குகின்ற தீ மிதித்தல் சடங்கானது. அம்மக்களது வாழ்வியல் முறையில் நம்பிக்கை யினைக் கொண்டு வருவதற்கான நிகழ்வாகக் காணப்படுகின்றது. தீ மிதிப்பதற்கு முன்னர் தீயினை ஆத்துதல் என்னும் செயற்பாடு காணப்படுகின்றத. அதாவது தீயினைக் கட்டுதல் எனக்குறிப் பிடுகின்றனர். தீயினைக்கட்டுதல் எனும் போது சாதாரணமாக கட்ட முடியாது. சடங்காடி தனது சன்னத நிலையில் உச்ச நிலை யிலேயே கட்ட முடியும் அதன் பின்னர் தான் தீயிலே இறங்கிய பின்னர் பக்தர்கள் தீயிலே இறங்குவதற்கான செயற்பாட்டினை மேற்கொள்வார்.

இம்முறை கூட உள ஆற்றுப்படுத்தலின் அம்சமாகவே நோக்க முடியும் இது நேர்த்திக்கடன் மற்றும் இச் செயற்பாட்டினை மேற் கொண்டால் நன்மை கிடைக்கும் போன்ற பல விடயங்களை குறிப்பிடலாம் கலைகளின் பிறப்பியல்புக்கு குறிப்பாக அரங்கக் கலைகளின் பிறப்பியலுக்குக் காரணமாய் இருந்த சடங்கு நிலைப் பயில்வுகளின் உச்ச நிலையினை இச்சடங்குகளின் ஊடாகப் பரி சித்துக்கொள்ளக் கூடியதாக உள்ளது. அத்துடன் பாரம்பரியங் களின் உயிர்ப்பினையும் சமூகக்கூட்டிணைப்பு சார்ந்த செயல் நிலையினையும் இச்சடங்குகள் ஊடாகக் கண்டு கொள்ள முடி கின்றது.

எஸ்.ரி.அருள்குமரன்
ஆசிரியர்

# உன்னை எண்ணி உயிர் வாழ்வேன்

கருவறையில் அமர்ந்த போதே
என் காதல் அரும்பிற்றுக் கண்மணியே
தாயவள் உதிரம் தமிழ் என்றுணர்ந்து
உன்மேல் தாளாத மையல் கொண்டேனடி
அவள் மடி தவழ்ந்த போது தமிழே
உன் மேல் கொண்டேன் அளவிலாக் காதலடி
தாலாட்டு எனும் வடிவில் மனந்
தொட்டுப் போனாயடி
விழி மூடிக் கேட்டிருந்தேன்
விரிந்தது உன் மேல் மோகமடி
பேசும் மொழியாய் என்னில் நீ
தவழ்ந்த போது மேலும் தீராக் காதல் கனன்றதடி
முத்து முத்தாய் உனை எழுதிய போது
தந்த முத்தத்தால் எச்சில் பட்டு
ஈரமானதடி என் எழுதும் தாள்
உன்னை அணிசெய் இலக்கியங்களை
ஊன்றி நுகர்ந்த போது
உறவாடித் திளைத்த உணர்வில்
உன்மத்தம் கொண்டேனடி
அமுதென உனை அள்ளி மாந்தி
மதுவுண்ட மாந்தியாய் மயங்கினேனடி
காதலால் மிக வாடி நூலாகிப் போனேனடி
கரை சேர்க்க மடிகாலாய் வாய்ந்த
கவித்தமிழால் காலமெலாம் உனைக்
காதலிப்பேனடி கவிமழையால்

## பண்பாட்டின் பேணுகையாக வெளிக்கிளம்பும் நாடகக்கலை

நாடகம் என்பது செய்துகாட்டப்படுகின்ற கலை வடிவமாக விளங்குகின்றது. நிகழ்ந்ததாகக் கருதப்படும் ஒன்றை நிகழ்ந்த ஒன்றை, நிகழக் கூடிய ஒன்றை செய்துகாட்டுகின்ற ஆற்றுகைக் கலை வடிவமாக விளங்குகின்றது. செய்து காட்டுகின்ற ஆற்றுகை நிகழ்வானது பண்பாட்டின் அடியாக வெளிக்கிளம்புவனவாக காணப்படுகின்றன.

நாடகக்கலையானது வரலாற்றுப்பாதையில் மதம்,சடங்கு பார்ப்பவர் ஏற்றுகக்கொள்ளக்கூடிய நம்பகத்தன்மை என்பவற்றை தளமாகக் கொண்டுள்ளது. நாடகத்தின் கட்புலத்தன்மையும் அதன் கனபிரசன்னத்தன்மையும் அதனுடைய ஆற்றுகைத் தன்மையும் பார்ப்போரை முதன்நிலைப்படுத்துகின்றன.

நாடகம் ஒரு கூட்டுக்கலையாகும். இந்த உண்மையை இரண்டு மட்டங்களில் வைத்து உணர்ந்து கொள்ள வேண்டும். ஒன்று அதன் அறிக்கைக்குக் பலரின் கூட்டுச் செயற்பாட்டை வேண்டி நிற்பது. மற்றது நாடகம் அதன் உண்மையான தொழிற்பாட்டிற்குப் பார்ப்போரை நம்பியிருப்பது நாடகம். ஆற்றுபவரையும் பார்ப்பவரையும் இணைத்து நிற்கும் ஒருங்கு நிலை வடிவமாகும்.

நாடகத்தின் இந்த கூட்டுத்தன்மை அது பார்ப்போரிடத்து உண்மையாக நடந்தது நடக்கக்கூடியது என்ற நம்பகத் தன்மையை ஏற்படுத்திவிடுகின்றது. இதனால் நம்முன்னே நடப்பது நிஜம் என்றே பார்ப்போர் நம்பி விடுகின்றனர்.

நாடகம் என்பது எல்லாப் பண்பாடுகளிலும் காணப்படுவது. அது பண்பாட்டை சித்திரிப்பதற்கான ஓர் ஊடகமாகவும் ஆகிவிடுகின்றது. பண்பாட்டினால் நாடகம் தீர்மானிக்கப்படுகின்றமை எவ்வளவு உண்மையோ அந்த அளவிற்கு நாடகம் பண்பாட்டைத் தீர்மானிக்கின்றது என்பது உண்மையே.

நாடகம் எதனை மோதுகைப் பொருளாகக் கொள்கின்றது. அந்த மோதுகைக்கு துணைப்பொருட்களாக எவ்வெவற்றை பயன்படுத்திக் கொள்கின்றது. அது நிலை நிறுத்தும் பெறுமானங்கள் யாவை ஆகியவை பண்பாட்டினுடைய ஸ்தலத்தை தீர்மானிக்கின்றது.

நாடகம் என்னும் கலை வடிவம் நாம் மனிதனை அறிந்து கொள் வதற்கான ஒருதளமாகும். நாடகக் கலையினை கலைகளில் ஒன்றாகக் கொள்கின்றோம். கலை என்பது சமூக அழகியல் நிகழ்வாகும். அது சமூகத்தின் பண்பாட்டில் நிலைகொண்டு நிற்பது. பண்பாடு என்பது சமூகத்தின் வாழ்க்கை முறைமை யாகும். அதற்குள் வாழ்க்கை சம்பந்தப்பட்ட மதம், சூழல், மனித உறவுமுறைமை, பொருளாதார நடவடிக்கைகள், சமூக ஒழுங்கமைப்பு, வாழ்க்கை நோக்கு என்பன இடம்பெறுகின்றன.

பண்பாடடினுடைய இயல்புகளாக பண்பாடு அறியப்படுவது மனித வாழ்க்கையின் உயிரியல் சூழல் உளவியல் வரலாற்று அம்சங் கள் வழியாக வருவது குறிப்பிட்ட அமைப்பு முறையினைக் கொண்டது. குழுவுக்குக்குழு மாறுபடுவது, அசைவியக்கம் கொண் டது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினால் பகிர்ந்து கொள்ளப்படுவது குறிப்பிட்ட மக்கள் தொகுதியினால் பகிர்ந்து கொள்ளப்படுவதால் அது வெளிப்படையாகவும் உய்த்துணரப்படுவதுமான அம்சங் களைக் கொண்டது எனக் கூறப்படுகின்றது.

பண்பாடு என்பது கலைகளின் மூலம் தனது உயிர்ப்பினை வெளிப் படுத்திக் கொள்வது அந்த நிலையிலேயே அச் சமூகத்தின் படைப்பியல் உந்தலும் படைப்பியல் வலுவும் அழகியற் தொழிற் பாடுகளும் தொல்பியல் முறைமைகளும் இணைகின்றன.

கலைகளின் முக்கியத்துவம் அவை பண்பாட்டின் வெளிப்படுகைத் தளமாக அமைவதேயாகும். கலைக்கும் பண்பாட்டிற்குமுள்ள இந்த உறவு காரணமாகவே கலையானது சமூகத்தினை எடுத் துணர்த்தும் உயிர்ப்பு மையமாக அமைகின்றது. இதற்கு கலை வெளிப்பாட்டிற்குள் அடங்கும் நாடகக் கலை வடிவமானது பண் பாட்டின் பேறுகையினையும் உயிர்ப்பினையும் பேணுகின்ற ஆற் றுகை கலை வடிவமாக விளங்குகின்றது.

நாடக அரங்கு என்பது பண்பாட்டோடு இணைந்தது. அது அந்த பண்பாட்டினுடைய தன்மைமையை கொண்டது. அந்த பண்பாட்டி னுடைய நம்பிக்கைகளை வாழ்க்கை முறைகளை வாழ்க்கை பற்றிய கண்ணோட்டங்களை இவ்வரங்கின் 5 லயமாக நாம் கண்டு கொள்ளலாம். அரங்கிற்கும் பண்பாட்டிற்கும் இடையில் உள்ள தொடர்பில் இரண்டு விடயங்கள் குறிப்பிட்டுக் கூற முடியும்.

1.பண்பாட்டினூடாகவே அரங்கு வளர்கின்றது. ஒரு குறிப்பிட்ட அரங்கு தோன்றுகின்றதென்றால் அது ஒரு பண்பாட்டினூடாகவே வருகின்றதெனலாம்.

2. அவ்வரங்கு அப்பண்பாட்டினை மீள வலியுறுத்துகின்ற நாடகக் கலையின் தோற்றுவாயும் அதன் அறிக்கை நிலையும் பேணுகை யும் பண்பாட்டின் அடித்தளத்தினூடாக வெளிக்கிளம்புவதனை அவதானிக்க முடிகின்றது. பண்பாட்டினுடைய உயிர்ப்பு நிலையே நாடகக் கலையின் உயிர்ப்பு நிலையைப் பேணுவதாக அமைந்து விளங்குகின்றது.

கலை என்பது காலத்தின் கண்ணாடி எனும் வகையில் நாடகக் கலையும் காலத்தின் பண்பாட்டுக் கோலங்களை புலப்படுத்துவன வாக அமைகின்றன. நாடகக் கலையானது சமூகத்தினுடைய கண் ணாடியாக சமூகத்திலுள்ள பிரச்சினைகளை எடுத்துக்காட்டு வதாக அமைகின்றது.

சமுதாயம் என்னும் கட்டுக்கோப்புக்குள் இயங்குகின்ற ஒரு நிறு வனமே நாடகமாகும். இவ்வகையில் தமிழர்களுடைய பண்பாட்டு மரபிலும் தமிழர்களுடைய பண்பாட்டின் பேணுகையாக நாடகக் கலையானது அவ்வவ் காலத்திற்கேற்ப வெளிக்கிளம்பிய தன்மை யினை அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாணத்தின் சில பாகங் களிலும் முல்லைத்தீவு மன்னார் பகுதிகளிலும் மலை நாட்டிலும் சிறப்பாக மட்டக்களப்பு மூதூர் திருகோணமலைப் பகுதிகளிலும் தமிழர் மத்தியிலே அவர்களுடைய பண்பாட்டினை பேணுகின்ற பாரம்பரிய நாடகக் கலை வடிவங்கள் இன்னும் உயிர்ப்புடன் பேணுகை நிலையிலும் அறிக்கை நிலையிலும் காணப்படு வதனை அவதானிக்க முடிகின்றது.

இத்தலத்தில் நோக்குகின்ற பொழுது பண்பாட்டினுடைய பேணு கையாக நாடகம் என்னும் கலை வடிவம் வெளிக்கிளம் புவதை அவதானம் கொள்கின்றோம். பண்பாடு கையளிக்கப்படுவதற்கு நாடகம் ஒரு முக்கியமான ஊடகமாக விளங்குகின்றது. உண்மை யில் நாடகமானது அறிக்கை நிலையில் சமூகத்தின் பண்பாட்டின் உயிர்ப்பினை பேணுகின்ற வகையிலும் அடுத்த சந்ததிக்கு ஊடு கடத்துகின்ற வகையிலும் பண்பாட்டின் முறைசாரா கல்வி மைய மாக விளங்குகின்றது எனலாம்.

S.T குமரன்
BA(Hons), MA Dip.in PSy,
Dip.in. Ed நாடகத்துறை
ஆசிரியர் யாழ்ப்பாணம்

# இசை நாடகங்களும் வலிவடக்கும் ஒரு கலைஞனின் பார்வை

ஈழத்துப் பாரம்பரிய கலைகளை உற்று நோக்குவோமாயின் நம் வாழ்வியற் பிரதேசங்களில் தனித்துவமாய் தோற்றம் பெற்றவையும் தமிழகத்திலிருந்து கடத்தப்பட்டவையுமாக ஒருங்கு கலந்து உருவாக்கம் பெற்றவையாக உள்ளமையைக் காணலாம். இக் கலைகள் தமிழர்கள் என்ற எமது அடையாளத்தின் சின்னங்களாக இன்று எஞ்சியிருப்பவை.

இவற்றுள் தனித்து எமது மண்ணுக்கே மூல உரித்தான கலை வடிவங்களாக இன்று தப்பிப்பிழைத்து வாழ்பவை ஒருசிலவேயாகும். தமிழகத்தின் இரவல்களை எம் தாயகப்பாரம்பரியமாக எங்ஙனம் சுட்டலாம் என்ற வாதங்களும் உண்டு. இதே வினா எம் தாய் மொழியின் மீதும் தொடுக்கப்படலாம் என்ற வாதங்களும் உண்டு. இவற்றை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு சுமார் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக எமது மக்களால் ஆற்றுகை செய்யப்பட்டு அனுபவிக்கப்படுகின்றகலை வடிவங்களை எமது பாரம்பரியக் கலைவடிவங்களாகக் கொள்வதில் தவறில்லை என வாதிடுவோரும் உண்டு. இப்பாரம்பரியக் கலைகளுள் ஒப்பீட்டளவில் அதிகமான செந்நெறிச் செழுமையுடைய கலைவடிவமாக இசை நாடாகங்கள் கொள்ளப்படத்தக்கன.

புராணஇதிகாசக் கதைகளைக் கர்நாடக சங்கீத இராகங்களற்ற பாடல்களாக அமைத்து கதாபாத்திரங்கள் உரியவகை வேட உடையணிந்து சட்டமேடையில் ஆர்மோனியம், மிருதங்கம், சல்லாரி போன்ற பக்க வாத்தியங்கள் சகிதம் நடிகர்கள் தாமாகவே பாடி நடிக்கும் முறையானது இசை நாடகங்களின் தனித்துவமாகும். செய்யுள், வெண்பா, விருத்தப்பா என பாடல்களாகவே அமையப்பெற்றிருந்த புராணஇதிகாசக்கதைகளை அவற்றின் தன்மையைப் பின்பற்றி பாடல்களாகவே இசைநாடகங்கள் ஆற்றுகை செய்ய முனைந்தன. குரல்வளமும் இசைஞானமும் நடிப்பாற்றலும் புராண இலக்கியங்களின் அறிவும், பொருத்தமான உடல்வாகும். இசை நாடக நடிகர்களுக்கு அடிப்படைத்தகுதிகளாய் அமைந்தன எனினும் குரல்வளமும் பாடும் ஆற்றலும் முக்கியம் பெற்றன. கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டாலும் கச்சேரிப் பணியிலிருந்து விலகி நாடகப்பண்பை உள்வாங்கியவையாக பாடல்கள் தனித்துவம் பெற்றன.

இத்தகைய பின்னணியிலேயே பிற்காலத்தில் தமிழ் இசை நாடகத் தந்தை எனப் போற்றப்படும் சங்கரதாஸ் சுவாமிகளும் சங்கீத இசை மெட்டுக்களின் மூலமே தனது நாடகங்களையாத்தார். கதைப்போக்கின் ஒவ்வொரு கட்டத்திலும் உணர்வு வெளிப்பாட்டு க்கு பாடல் அடிப்படையாக அமைந்தது. சோகம், கோபம், மோகம், சிருங்காரம், சல்லாபம், ஆக்ரோசம், வக்கிரம், பக்தி, இரக்கம், கருணை என உணர்வுக்கிளர்சிகளை பாடல்களுக்கூடாகவே இசைநாடகங்கள் தோற்றுவித்தன. சாத்தியமற்ற சந்தர்ப்பங் களிலும் வெற்றியைப் பெற்றன. இறந்த பாலனை வைத்து சந்திர மதி பாடுவதும் தர்பாரில் வந்து நின்று இயமதர்மன் பாடுவதும், பாம்பு கடித்தபின் லோகிதாசன் பாடுவதும் என இந்த நிலை களி லும் பாட்டுப்பாட முடியுமா என்னும் அபத்தச் சூழலை தன் னார்ந்த உணர்வுப்பிணைப்புகளை தோற்றுவிக்கும் இராக பாவத் தெரிவு உத்திகளால் வெற்றிகொண்டன இசைநாடகங்கள். 1867 இல் தூத்துக் குடியில் பிறந்த சங்கரதாஸ் சுவாமிகள் தான் வாழ்ந்த 55 வருடகாலத்துள் 50க்கும் மேற்பட்ட இசைநாடகங் களை எழுதி யுள்ளதாக கூறப்படுகிறது. எனினும் பல நாடகப்பிரதி கள் இன்று அழிந்து மறைந்த நிலையில் மிகச்சில நாடகப் பிரதிகளே எஞ்சி யுள்ளன. பவளக்கொடி, அல்லிஅர்ஜீனா, ஸ்ரீவள்ளி, சத்யவான் சாவித்திரி, அரிச்சந்திரா, கோவலன் சரித் திரம், நளதமயந்தி, நல்லதங்காள், ஞானசௌந்திரி, மார்க் கண்டேயர் சிறுத்தொண்டர், அபிமன்யு சுந்தரி, வாலிமோட்சம், சதியுறுதய இலங்காதகனம், பக்தப்பிரகலாதா, மன்மதகானம், லவ குசா, சாரங்கரன் போன்ற நாடகங்கள் இன்றும் அரங்கேறுகின்றன.

19 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் அக்கால இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் அதிநவீனம் வாய்ந்த உணாவூட்டும் கலையாக இசைநாடகங்கள் விளங்கின. பாமரர் முதல் படித்தோர் வரை அனைவரின் வாய்களிலும் இசை நாடகப்பாடல்கள் முணுமுணுப் பானவாய் அமைந்தன. பிற்காலத் தமிழ் திரைப்படங்களுக்கான அத்திபாரமாக இசை நாடகங்களே அமைந்தன. சமரச சன்மார்க்க நாடக சபை, பாய்ஸ், வேணுகான சபா எனும் நாடகக் குழுக்கள் கொடிகட்டிப்பறந்தன. ஆரம்பகால சினிமாத் துறையின் ஜாம்ப வான்களாக விளங்கிய எஸ்.ஜி.கிட்டப்பா, ரீ.கே.சண்முகம், பீ.யு. சின்னப்பா, ரீ.கே.பகவதி, ரீ.ஆர்.மகாலிங்கம், வி.என்.சுந்தரம், கே.ஆர்.இராசாமி, என்.எஸ்.கிருஸ்ணன், ஏ.பி.நாகராஜன், சுந்தராம் பாள், எம்.ஆர்.ராதா, தியாகராஜபாகவதர் என மிக நீண்ட பட்டியலி

லுள்ள கலைஞர்களை எல்லாம் இந் நாடக சபாக்களே புடமிட்டன.
எமது மண்ணிலும் இவ் இசை நாடகங்களின் கவர்ச்சியால் உந்தப்பட்டு இளைஞர்கள் அவற்றைப் பயின்று பிற்காலத்தில் தென்னிந்தியாவையும் தாண்டிப்புகழ் சேர்த்தனர். காங்கேசன்துறை வசந்தகானசபா, அல்வாயூர் மனோகரகானசபா, என நாடக மன்றங்களும் பெரும் பெயர் பெற்றன. தமிழர் வாழும் வடபிரதேசம் எங்கும் இசை நாடகங்கள் செழிப்படைந்திருந்தாலும் வலிகாமம் வடக்கு பிரதேசம் பெருமை கொள்ளத்தக்கவகையில் உயர் புகழ்பூத்த நாடக கலைஞர்களை கொண்டிருந்தமை மறுக்க முடியாத உண்மையாகும். அரிச்சந்திர மயானகாண்டம் நாடகத்தை சுமார் மூவாயிரம் மேடைகள் அரங்கேற்றிய வி.வி.வைரமுத்து 1982 இல் போரசிரியர் வித்தியானந்தனால் நாடகச் சக்கரவர்த்தி என கௌரவிக்கப்பட்டிருந்தார். நடிப்பாற்றல் மட்டுமன்றி ஹார்மோனியம், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளையும் இலாவகமாக கையாளும் திறன்பெற்ற பல கலைஞர்கள் வலிவடக்கில் அன்றிருந்தனர்.

நாடகபாத்தரங்களின் பெயர்களை தம் பெயர்களோடு இணைக்கப்பட்டு அழைக்கப்படுமளவிற்கு புகழ்சேர்த்தும் இருந்தனர். எமன் மார்க்கண்டு, நாரதர் கனரத்தினம், கோவலன் தம்பு, காளிக்கந்தன், தேவடியாள் இளையதம்பி என ஊர்மக்கள் அக்காலத்தில் இவர்களுக்கு வழங்கியிருந்த பட்டங்கள் நிலைபெற்றிருந்தன. சரவணமுத்து, கனகரத்தினம், முருகானந்தன், தேவராசா, உருத்திராபதி, பார்வதி சிவபாதம் என ஒரு நாடகப் பரம்பரை தோற்றுவிக்கப்பட்டு இருந்தது. இசை நாடகங்களை அரங்கேற்று வதற்குரிய அரங்க நிர்மாணிகளும், ஒப்பனையாளர்களும், பக்க வாத்தியக்காரர்களும் வலிவடக்கிலிருந்து பஞ்சமின்றிகிடைத் தனர். அண்மைக்காலம் வரை இசை நாடக அரங்குகளின் முது கெலும்பாக இருந்த ஆர்மோனியக் கலைஞர் பிலிப் ஜோன் கபாஸ் வயாவிளானை பிறப்பிடமாக கொண்டவர். ஆலய விழாக்கள் என்றால் தபில் வித்துவான்களுக்கும் இசை நாடக கலைஞர்களுக்கும் வலி வடக்கிற்கு ஒரு மவுசு இருந்திருக்கிறது.

மூன்று தசாப்த கால யுத்த இடம்பெயர்வு நெருக்கீடுகளும் மேற்கத்தைய இசை கோலங்கள் சினிமாவினுள் புகுந்து நவீன சாதனங்களால் மெருகூட்டப்பட்டு உணர்வுக் கிளற்சிகளில்

வன்மை யுனர்வைத்தூண்டும் ஆக்கிரமிப்புக்களால் அல்லாடி நிற்கும் இசை ரசனைப்போக்கு கர்நாடக இசை நாடகங்களை மட்டுமன்றி, கச்சேரி அரங்குகளையும் இன்று வெறுமையாக்கி விட்டது. தெய்வங்களையும் தேவர்களையும் காதாபத்திரங்களாக கொண்டு பின்னப்பட்ட புராண இதிகாசக்கதைகள் வெறும் புனை கதைகளாக காணும் ஐயுறவுக் கண்ணோட்டம் விஞ்ஞான உல கின் சவால்களாக பழமையைப் போற்றும் பாரம்பரியக் கருத்துக் களுக்கு எதிர்கிளம்பியுள்ளன. அண்டப்பிரபஞ்சத்தின் நிலைபெறு தலுக்கும் இயக்கத்திற்கும் இடமாய் அமைந்த காலப் பெரு வெளிகளின் கர்த்தனான காலதேவன் இயமதர்மராஜனே இன்று நகைச்சுவை கதாபாத்திரமாக சினிமாவில் சித்தரிக்கபடவும் அதைப் பார்த்து சிரித்து மகிழவும் காலமாற்றம் வழியேற்படுத்தி விட்டது. வேடிக்கை மட்டுமே விழாக்களாக மாற்றங்கண்டு விட் டன. கோவில்களும் கூட்டத்தைப் பெருக்கும் உபாயங்களாகவே விழாக்களின் ஒழுங்குகளை மேற்கொள்ளுகின்றன.

இடைத்தரகர் இன்றி இஸ்டதெய்வங்களைப் பூசிக்கும் கிராமியச் சடங்குகளும் பூசைவழிபாடுகளும் மூடத்தனமானவையாக சித்த ரித்து எம் சமூகத்திலிருந்து அகற்றுவதில் சமஸ்கிருத உபா சனை முறை சாதனை நிகழ்த்திவிட்டது. எல்லன் இருளன், பேச்சி, பிடாரி, அண்ணமார், நாச்சிமார், காத்தவராயர், கறுப்பன் யார் என கேட்கும் அளவிற்கு எம் இளஞ்சந்ததி தொடர்பறுந்து நிற்கிறது. அந்தக்காலத்தில் மாலையில் மடை பரவி மக்கள் எல்லாம் ஒன்று கூடி உண்டுகளித்து இரா விழித்து இருந்து கோவில் முன்றலில் விழாகூத்துப்பார்க்கும் நிலையை இயந்திரமய வாழ்வில் இயங்கும் இன்றைய நிலையில் நினைக்ககூட நேரமில்லை என்றாகிவிட்டது. இன்று பண்பாடு பற்றிப் பேசுவோர் பாதுகாக்கப்பட வேண்டும் என மேடைகளில் முழங்கும் கோஷங்களாகிவிட்டன எமது பாரம்பரி யக்கலைகள். பெரும்பாலான மேடைகள் பேச்சோடு முடிவடை வது வழமைதான். மீறி ஒரு கூத்தோ இசைநாடகமே அரங்குக்கு வருமாயின் அதுவும் இறுதி நிகழ்ச்சியின் இடத்திலேயே இருக் கும். அனேக வேளைகளில் பேணவேண்டும் என்று பேசியவர்கள் அவை மேடையேறும் போது வீடுசென்று விடுவர்.

காலத்திற்கேற்றால் போல் மாற்றங்களை செய்தால் மக்களைக் கவரலாம் என அறிவுரைப்போரும் உண்டு. இசை நாடகங்களின் அத்திவாரமே புராணஇதிகாசக்கதைகள் தான். காலத்திற்

கேற்றால்போல் காட்சிகளில் வரும் கடவுள்களின் மாற்றத்தை ஏற்படுத்தலாமோ என கேட்போரும் உண்டு. நேரத்தைக் குறைப் பதும் ஒலி, ஒளி சாதனங்களை பயன்படுத்துவதும், அரங்க வெளியை மாற்றுவதும் எற்கனவே முயன்றாகிவிட்டது.

இசை நாடகங்கள் வெறும் பொழுதுபோக்கிற்கான மகிழ் நெறி கலையல்ல ஒருகாலத்தில் சமயப்பற்றையும் அறஒழுக்கத்தையும் சமூக ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தும் முக்கிய ஊடகங்களாக இருந்தவை அன்று அரிச்சந்திர புராணத்தை சிறுவயதில் பார்த்து சத்திய விரதத்தின் உத்தமத்தை உணர்ந்ததால்தான் சிறுவன் கரம்சந்காந்தி மகாத்மாகாந்தியானார். இசைரசனை, ஆத்மீக ஒழுக்கம், அற விளக்கம் என சிறுபராயத்தவர்களுக்கு நல்ல பல பயன்களைத்தரும் இசைநாடகங்கள் அனுபவிக்கும் ரசனைப் பற்றை சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். வெறும் போட்டிகளுக்காக பாடசாலைகளில் பழகும் நிலை மாறி எம் கலை என உணரும் நிலை வரும் வரை எம்மவரிடையே இசை நாடகங்கள் இன்றும் நிலைக்கும்.

வை.விஜயபாஸ்கர்
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

# எமது வாழ்வில் தலையாய கடமைகள்

சைவ சமயத்தவர்கள் வழிபாட்டில் தாய் தந்தையரை உயர்ந்த தெய்வங்களாகப் பேற்றுவது மரபு அவர்கள் வாழும்போது மட்டும் அன்றி வையகத்தை விட்டுச் சென்ற பின்னும் மீள நினைந்து வணங்கும் மரபு சைவ வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகிறது. தாய் தந்தையர்க்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காக அவர்களது மறைவிற்குபின் மாதந்தோறும் அமாவாசை திதி யென்று தந்தை யை நினைந்தும். பௌர்ணமி திதி யென்று தாயை நினைந்தும் விரதம் அனுஷ்டிப்பது எமது பண்பாட்டில் பாரம்பரிய முறையாகும். இது எம் மூதாதையர் வழித் தோன்றலாக வந்துள்ளது. விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு மட்டுமன்றி தாய் தந்தையர்க்கும் மறு மைக்கும் நற்கதி கிடைப்பதற்கு இவ்விரதங்கள் பயன் செய்யும் என விரத மகத்துவம் கூறுகிறது.

எமக்கு உயிர் தந்து, உணவுதந்து, கல்விதந்து, வாழ்வுதந்து எமை ஆளாக்கிவிட்டுச் சென்ற தாய்தந்தையர் இறப்புக்கு பின் னால் நற்கதி அடைய வேண்டும் என பிரார்த்தனை செய்தும் பிதிர் கடன்களை நிறைவேற்றி பிரார்த்தனை செய்து வருவது வழக்க மாகும். 'அந்திமக்கிரிகைகள் மாதந்தோறும், வருடந்தோறும் மீள நினைந்து வணங்குவது வேறெந்த சமயத்தவரும் கடைப்பிக்காத உன்னத பண்பாட்டு விழுமிய கலாசார நடைமுறையினை சைவ சமயத்தவர் காலகாலமாக பேணி வருகின்றனர்.

இன்று பெற்றோரை பேணும் பண்பாடு வாழும்போதும் அவர்களின் வாழ்வுக்கு பின்னாலும் அருகிவருவது அனைவரும் அறிந்த விடயமாகும். ஒருவரது வாழ்வில் ஆற்றலும் ஆளுமையும் தந்தை யிடமிருந்து அதிகம் பெற்றுக் கொள்வது இயல்பு. தாயிடம் அன்பு, அரவணைப்பு, தயவு, மன்னிப்பு என பலவற்றைக் கற்றுக் கொண் டாலும் தந்தையிடமிருந்து நாம்பெறும் ஆளுமை தனித்துவமானது. எந்தவொரு பிள்ளையையும் கவலை இன்றி வாழவைப்பதில் தந்தை அதிகம் அக்கறைகொள்வார்.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்ற கருத்து மிக்க ஆழ மானது. தந்தை தீயதை நீக்கி நல்லதையே பிள்ளைகளுக்கு எடுத்துரைப்பார். ஒவ்வொரு வீட்டிலும் அறிவு விளக்காக நின்று எம்மை அழைத்துச் செல்பவர் தந்தையே. எங்கள் வாழ்வில் ஒவ்

வொரு விநாடியும் கவனம், பொறுப்பு, பக்குவம், நிதானம் என்ற சொற்களை உச்சரித்து திசை காட்டுபவராக விளங்கிய தந்தை இறப்பைச் சந்திக்கின்றபோது அவர்கள் தாம்பெற்ற பிள்ளை களை மனைவியை நினைந்து நினைந்து உருகிய வண்ணம் தம் பயணத்தை தொடர்வார். அத்தகைய தந்தையை வருடத்தில் ஒரு நாள் பிதிர் தர்ப்பணம் செய்து மோட்சதீபம் ஏற்றி வழிபாடு செய் யும் மரபு இன்றும் தொடர்கிறது. இத் தினமானது நன்றியோடு பிரார்த்திப்பதற்கு ஆடி அமாவாசையை சைவ உலகம் பேணிவரு கிறது. இம் மரபு எதிர்காலத்திலும் பேணப்பட வேண்டும். மூத் தோர், குடும்பத் தலைவர்கள், இப் பண்பாட்டை சரியான முறை யில் பேணினால் எதிர்காலத் தலை முறையினர் தொடர்வதற்கு ஏதுவாக அமையும்.

ஈழத்திரு நாட்டில் ஆடி அமாவாசையன்று பிதிர்தர்ப்பணத்தை பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கும் மரபு உண்டு. குறிப்பாக வட பகுதி மக்கள் கீரிமலை கண்டகி தீர்த்தத்திலும் திருகோணமலை மக் கள் கன்னியா வெந்நீர் ஊற்றிலும் நீர்கொழும்பு, சிலாபம் மக்கள் மாயவன் ஆற்றிலும், கிழக் இலங்கை மக்கள் மாமாங்கேஸ்வரர் தெற்பைக் குளத்திலும் மன்னார் மாதோட்டமக்கள் பாலாவிக் கரையிலும், கொழும்பு வாழ் மக்கள் முகத்துவாரக் கரையிலும் ஏனைய மக்கள் தத்தம் ஊரில் உள்ள கடற்கரைகளில்ும், குளக் கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும் சிறப்பாக பிதிர்க்கடன் செய்து விரதத்தை பேணுவர். நன்றிக்குரிய இவ் விரதத்தை நாமும் பேணிக்காப்பது எம் தலையாய கடமையாகும்.

உசாத்துணை - மாதாந்த சஞ்சிகைகள் வாராந்த பத்திரிகைகள்

தொகுப்பு
திருமதி வற்சலா துரைசிங்கம்.

# அன்பு கொண்டு நீயும்

அன்பு கொண்டு பிற உயிரை நீயும்
அரவணைக்க கற்றுக் கொள்
இன்பமாக முகம் மலர்ந்து - என்றும்
இனிக்கப் பேசிப் பழகிடு
வன் சொல்லை நாளும் பேசுகின்ற
வழக்கமதைக் கைவிடு
கண்கள் இரண்டும் கருனை பொங்க
கருணையோடு வாழ்ந்திடு !

அன்பு பண்பு அடக்கம் இவை
அருங் குணங்களென அறிந்திடு
மண்ணில் வாழும் உயிரையெல்லாம்
மதித்துப் போற்றப் பழகிடு
வன்சொல் கோபதாபமிவை
வருத்தும் உந்தன் உயிரினை
இன்பமாக பேசி வாழ்ந்தால்
இனிக்குமிந்த உலகமிது !

அண்ணல் காந்தி புத்தர் யேசு
அரிய சைவ ஞானிகள்
மண்ணில் வாழ்ந்து சொன்னவற்றை
மறப்பதென்ன நீதியோ?
எண்ணில் இறைவன் ஒன்று என்றே
இயம்பும் வேத சாஸ்திரம்
உண்மை இதை உணர்ந்து கொண்டால்
உலகில் ஓங்கும் அமைதியே !

பூதலத்தில் எமது மண்
புகழ் பூத்து நிற்கும்
பொய்யுரைகள் புரட்டுக்கள்
போயகலுமென்று
அல்லல்கள் இனி இல்லை
பொல்லா வினை போக்கி
புதிய யுகம் காண்பதற்கே !

**திருமதி - வற்சலா துரைசிங்கம்**

# வலி சுமக்கும் வலி வடக்கு

(தாலாட்டு)

வலிகாமம் பூத்திருக்கு வலிவடக்கு காத்திருக்கு
மழையில்லா பயிரைப்போல வாழ்வடா-அங்கு
வாழ்வு துளிர் விடவில்லை ஏனடா

காங்கேசன் மயிலிட்டி பலாலி வாழ்வெல்லாம்
பழம் வலை ஆச்சுதே கேளடா - இன்று
பாழ்பட்ட வாழ்வாச்சு பாரடா

வசாவிளான் தையிட்டி ராசவள்ளி மரவள்ளி
மண்ணின் வளம் காட்டியதை கேளடா - இப்போ
புதர் மண்டிக் கிடக்கிறதே பாரடா

கலைகளுக்கு கருப்பட்டி அந்த இடம் குரும்பசிட்டி
களையிழந்து போனதைப்பாரடா - எங்கள்
காதோரம் வந்த கலை போச்சடா

கவலைகள் சுமந்து கொண்டு கண்ணீரில் கரைகின்றோம்
சொந்த இடம் இருந்தும் இல்லை பாரடா - அந்த
சோகக் கதையை நீ கொஞ்சம் கேளடா

முட் கம்பி வேலியடா எங்கு முடியும் என்று இல்லையடா
முழுவதுமே யார் சொந்தம் கேளடா - எங்கள்
முப்பாட்டன் முழுச்சொத்துத் தானடா

நடராசா சிறீஸ்கந்தராசா (மில்சிறீ)
(அளவெட்டி)

# எம்நில மாட்சி தனைப்பாடும்

எம்நில மாட்சி தனைப்பாடில்
    எழில் தமிழ் அறிவும் உயர்ந்தோங்கும்
செம்மைசேர் எம்தமிழ் விளையாடும்
    செழிப்பும் இந்நிலத் துயர்ந்தோங்கும்

அழகுறு தமிழின் மாட்சியினை
    அறிந்தே சொல்லும் கவிபலவும்
பழமென தந்த பெருங்கவிஞர்
    வாழ்விடம் என்றே இசைபாடும்

சாம்பலும் தமிழ் மணம் காணுமென
    சாற்றிய புலவர் சச்சியொடும்
உம்பர் உவகை அடைந்தழகு
    கண்டவர் கோடி கோடியம்மா

தசமெனத் தன்பெயர் தனைக்காட்டி
    தமிழ் விளையாடல் மிகுவுகந்தே
பாசமெனத்தமிழைப் பேணியதோர்
    பைந்தமிழ் அறிஞர் புகழ் பாடும்

தண்டிகைக் கபக ராஜன்தன்
    மாட்சியை பவவினில் பாடியுமே
எண்திசை மீதிலும் எம்புகழை
    ஏற்றிய புலவர் புகழ்பாடும்

இன்னும் மாவை என்றாலே
    இனிக்கும் வல்லி சரித்திரத்தில்
நன்றே குறிக்கும் இடம் யாவும்
    நம்தமிழ் பெருமை மிகுபேசும்

குமாரத்தி பள்ளம் எனுமிடமும்
    கூறும் வௌவால் பிறைகுகையும்
சேமமுற த்தமிழ் பெருமை சொல்லும்
    செய்தமிழ் நூல்கள் பலவுயிர்க்கும்

ஆடல் வல்லான் எம் ஈசன்
அருள்மிகு நகுலேச் சரத்தரசன்
நாடற் கரிய நல்லானை
பாடும் நூல்கள் பலவாகும்

கீரி முகமுடை நகுல முனி
தன் பிணிதீர்த்த திறம்பாடும்
வாரி யெனத்தகழ் கண்டசியும்
வற்றாப் புதுமை ஒளி நல்கும்

பிணிபல தீர்க்கும் மருந்தாகும்
பித்தன் புகழை தினம் பாடும்
பணியும் சித்தர் சமாதிகளும்
பற்பல இங்கே இசை பாடும்

இன்னும் ஈழத் தொளி நல்கும்
இனிதாம் மாவை தலைசிட்டி
நன்றுயர் வைரவர் ஆலயத்தின்
நந்தியாம் நாயும் கதையுரைக்கும்

அவவை மண்ணின் மாட்சியினை
அழகாம் மேள தாளமொடும்
உளமகிழ் மகா கவி புகழுரைக்க
உண்மை எங்கள் நெஞ்சினிக்கும்

மயிலை மண்ணின் மைந்தனெனும்
சுவாமி நாதன் நமச்சிவாய
புலவர் புகழும் உடனினிக்கும்
புகழே னுயர் தமிழ் புகழ் பாடும்

ஆக்கம்:-
(பாரதிநேசன்)
கொல்லங்கலட்டி
தெல்லப்பழை.

## வலிவடக்கு த. ஜெயசீலன்

பார்க்கும் இடமெல்லாம் பச்சைப் பசேலென்ற
ஊர்: கல்லைக் குடைந்து
ஓர் நொடியில் பயிரெழும்பும்
ஈரநிலம;
விளைத்தவெற்றிலையைநிதம் உருசித்து
நம்முன்னோர்
உமிழ்ந்துசிவந்தெம் உரிமையான
செம்பாட்டுப் பூமி ;
செந் நெல்லும். பன்னைஅரனும்,
வெங்காயம், முந்திரிகை, வெற்றிலையும்,
கடற்திருவும்,
பண்பாடும், கலையும், பக்த்திப்பரவசமும்,
தம்பாட்டிற் தோன்றித் தளைத்தலம !
யாருக்கும்
கும்பிட்டு வாழமல் குலற்தெழிலாற்பசிபோக்கிற்
தன்மானத்தோடு,
தவில்குழலின் மாரியினால்
வந்தஇசையறிவிவழுக்கியாறோடினைந்து
சந்ததமும் பாய
தகிப்பைச்சகித்து உயிர்
நின்று தழைத்த நிலம்!
வலவரங்கள் நூறுபெற்ற
அன்னைமடி;
அழகில் காதல் மனைவியடி;
எங்கெங்கே சுண்ணாம்புக்கல் தேடி
தொண்டினாலும்
எங்களது வேர்களினை
கொண்ட எங்கள் சொக்கபுரி;
சைவமும் தமிழும் சமைத்த...முடி
பின்வந்த
கிறிஸ்தவமும் கூடி நல்லினக்கம் கண்ட.... கொடி!
ஞானியர் யோகியர்கள் சித்தர் பலர்
ஞாலம்

வாழ...நடந்து சமாதியான புதையல்லடி!
மாருதபுரவீகவல்லி...நகுலமுனி
சபவிமோசனத்தைத்தேடி...
வந்துபெற்றபூமி!
கீரிமலை நகுலேசர், மாவிட்டபுர கந்தன்,
தெல்லிப்பளை துர்க்கை அருளாட்சி நடக்குதடி!
பிதிருக்குக் கடன் செய்யும்
புனித கீரிமலைக்கேணி....
தலைவீதியைக்கூட அழித்துஎழுதுமடி!
பொருளாதாரத்தின் பொருத்த';
விமானதளம்,
துறைமுகங்கள்,புகையிரதநிலையம்,
இவைமிளிர
வரலாறுதனைத்தானே எழுதிற்று, வந்து... படி!
இசைக்குஅளவெட்டி,
கலைக்கே குறும்பசிட்டி
இனிமைக்குத் தேலகட்டி, மனம்மயங்கக் கூவிலடி,
கடல்நிபுணமயிலிட்டி,
வெற்றிலைக்கு கொல்லங்கட்டி,
மிகத்திறஞ்
சீமோந்தா? காங்கேசன்,
தீர்த்தமா? கீரிமலை,
நோய்மற்றத் தெல்லி,
ஆசிரியர்க்குக்கண்... பலாலி,
வோல்விக்கு கவுனாவத்தை,
எனமிரட்டி...
மகாஜனா யூனியன்நடேஸ்வராஎன்று... பல
மகாகல்வி கூடங்கள் மலைகளாகிப்
புகழ் பெருக...
கல்வி வலை சமயம் வாழ்க்கைநெறிமுறைகள்
செல்வம் செழிப்புசிறப்பென்று பெறுமைகண்ட...
எல்லையிலா புகழ் பூத்துநிகறற்றுவாழ்ந்துயர்ந்த...
வலிவடக்கு;
போரல் வலிசுமந்தபோதும் இன்றும்
நலியாதுபுத்துயிர்த்துநடக்கிறதுஅதன்மிடுக்கு!

# தமிழன்னை

தமிழன்னை உருவ வரலாறு

உருவ விளக்கம்

இருக்கை : இயல், இசை,நாடகம்,சேர,சோழ,பாண்டிய இலச்சனைகளைக் கொண்டது.

மாலை : குறிஞ்சி,முல்லை,மருதம்,நெய்தல் மலர்களால் தொடுக்கப் பெற்றது.

அபயகரத்தில் உள்ள அ - ன் : தமிழ் முதல் எழுத்தாகிய 'அ' என்பதையும் இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதையும் கொண்டது. இதன் பொருள் தன்னை வணங்கியவர்களுக்குத் தமிழறிவு நல்கும் என்பதாகும்.

ஏடு : இலக்கியம் வளர்ந்துகொண்டிருக்கின்றது என்பதைக் கயிற்றால்க் கட்டாத ஏடு காட்டுகிறது. அன்னத்தைக்கொண்டது.

பின்னணி : தமிழ் - உலகம் தழுவியமொழிஎன்பதைக் காட்டுகின்றது.

தோற்றம்: என்றும் இளமை குன்றாதது என்பதற்கு ஏற்பகன்னித் தோற்றம்.

தாமரை : தெய்வமலர்த் திருவடிகள்

அன்னை உருவாக்கிய வரலாறு : தமிழறிஞர்கள், அயல் நாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் கூறிய கருத்துக்களுக்கு ஏற்ப ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டின் பொழுது இலங்கை ஓவியர் பெனடிரிக்கால் வரையப் பட்டது.

சிறப்பு : பூம்புகாரில் 2-1-81 அன்று, மதுரை சோமு இன்னிசை வழங்க, தவத்திருகுன்றங்குடி அடிகளார் அவர்கள் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் திறந்துவைத்தார்கள்.

அன்னை உலா : 3-1-81 அன்று பூம்புகாரில் இருந்து புறப்பட்டு மயிலாடு துறை, கும்பகோணம், தஞ்சை, புதுக்கோட்டை, நமன சமுத்திரம், ஆத்தங்குடி, குன்றக்குடி, திருப்பத்தூர், திருமெய்யம், கோனாபட்டு, மேலூர் வழியாக 4-1-81 அன்று காலை அறங்காவலர்கள் வரவேற்க, மதுரை அருள்தரு மீனாட்சி அம்மன் கோயிலை வந்தடைந்தது.

தமிழ்ச் சுரங்கம் வெளியீடு

பேராசிரியர் முனைவர் ஆறு. அழகப்பர்,

தலைவர், தமிழ்த்தாய் உருவ அமைப்புக்குழு.

## மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி
## வீரகத்தி பிள்ளையார் வரலாறு

8ஆம் நூற்றாண்டில் சோழகுலத்தவனாகிய திசை உக்கிரக சோழனது மகளாகிய மாருதரப்புரவீகவல்லி என்பவள் தனது குன்ம நோயும் குதிரை முகமும் மாறப்பெறாது மனம்வருந்தி சாந்த லிங்கை முனிவரிடம் சென்று தனது குறையினை முறையிட அவர் தீர்த்தயாத்திரை செய்வதனால்தான் இவ்வித கன்ம நோயானது நீங்கும் என்று சொல்ல அவ்வண்ணமே தீர்த்தயாத்திரை செய்தாள்.

மாருதரப்புரவீகவல்லி ஈழநாட்டில் வடபாலுள்ள கீரிமலை என்னும் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து கோயில் கடவை என்னும் இடத்தில் சுப்பிரமணியப் பெருமாளுக்கு ஆலயம் அமைத்து சோழ நாட்டிலிருந்து சுப்பிரமணிய விக்கிரகமும் பூசை செய்வதற்கு அர்ச்சகரையும் வருவித்து உரிய முறைப்படி பிரதிட்டை செய்து வழிபடக் குன்ம நோயானது நீங்கப்பெற்றதும் குதிரை முகம் மற்றவர்களுடைய பார்வைக்கு மாறியும் மாருதரப்புரவீகவல்லி பார்வைக்கு மாறாதிருந்தமையினாலும் மனம்வருந்தி அதற்குரிய காரணத்தை ஆராயும் போது விநாயகப் பெருமானை முதல் வழிபாடு செய்யாமல் இருந்தமையினாலேயே இக் குறையானது நிகழ்ந்ததென அறிந்து தான் செய்த தவறுக்காக 7 விநாயக விக்கிரகங்களைப் பிரதிஸ்டை செய்வேன் என நினைத்து முதலாவதாக கொல்லங்கலட்டி என்னும் இடத்திலே ஒரு விநாயக விக்கிரகத்தினையும் பின் வரத்தளம் பன்னாலை, அளகொல்லை கும்பளாவளை, பெருமாக்கடவை, அளவெட்டி என்னும் இடங் களில் ஒவ்வொரு விநாயகவிக்கிரத்தினையும் பிரதிஸ்டை செய்ய குதிரை முகமானது தனது பார்வைக்கும் இல்லாது மறைந்து அதிக அழகுடன் முகமானது பொலிவினைக்கண்டு அத்தலத்திற்கு பெருமாக் கடவை என்னும் காரணப் பெயரையும் (பெரிய குதிரை முகம் நீங்கிய இடம்) இட்டு தான் செய்த சபதத்தின் படியே ஆலங் குழாய், கல்வளை என்னும் இடங்களிலும் தாபித்தார் என்பர்.

முதலாவதாக மாருதப் புரவீகவல்லி தாபித்த விநாயகப்பெருமான் இப் பொழுது கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு மேற்கு வீதியில் இருக்கும் கேணியின் வாசலில் நின்ற ஒரு ஆலமர நிழலிலே நீண்ட காலமாக வீற்றிருந்தார். பின்னர் இருநூறு

வருடங்களுக்கு முன் குமாரவேலு என்பவர் தனது வீட்டின் ஒரு பகுதியில் அப்பெருமானை வைத்து (அந்த வீடு தற்போது உள்ள ஆலயத்து உள்வீதியின் தென்மேற்பகுதியிலிருந்தது) பூசித்து வந்தார்.

சிறிதுகாலஞ் செல்ல வீட்டில் வைத்து வணங்குவது அபசகுனம் முதலிய ஆசாரக்குறைவான காலங்களில் கஷ்டமாக இருந்ததால் தற்பொழுது பூங்கொல்லையாக இருக்கும் காணியில் மேற்குப் பக்கத்தில் ஒரு சிறு ஆலயம் மண்ணினால் அமைத்து அதனுள் வைத்து குமாரவேலுவினுடைய இளைய மகனும் நிர்வாண தீட்சை ஆச்சார்ய அபிஷேகம் பெற்றவரும், சமய சாஷ்திர ஆகம அறிவு நிரம்பப் பெற்றவருமாகிய அம்பலவாணக்குருக்கள் விநாயகப் பெருமானுக்கு ஆகம முறைப்படி ஆலயம் அமைத்து நித்திய நைமித்தியங்கள் செய்யவேண்டுமென்ற விருப்பத்தினால் தனது தந்தையாகிய பொன்னையாவினுடைய சொந்தமாக இருந்த காணியையும் தம்பவுடையார் என்றவருடைய பக்கத்துக் காணியையும் தானே பராமரிப்புக்காரனாக இருந்து சகல காரியங்களையும் செய்யக்கூடிய அதிகாரத்தோடு விநாயகப் பெருமான் மீது தரும சாதனமாக எழுதுவித்து அக்காணியுள்க் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், தம்பமண்டபம், மடப்பள்ளி, களஞ்சிய அறை முதலிய மண்டபங்களையும் உள் வீதி, புறவீதி ஆகிய இரு வீதிகளையும் திருமஞ்சனக் கிணற்றையும் அமைத்து ஆயிரத்து எண்ணூற்று எழுபத்திரண்டாம் ஆண்டு ஆங்கிரக வருடம் வைகாசி மாத அத்த நட்சத்திரத்திலே கும்பாபிஷேகம் செய்து அத்தினத்தினை முதலாகக் கொண்டு ஒவ்வொரு வருடமும் அலங்காரத்திருவிழாவையும் புரட்டாதி மாதத்திலே நவராத்திரி விழாவையும் மிகச் சிறந்த முறையிலும் ஏனைய விஷேட காலங்களிலே செய்ய வேண்டிய விழாக்களையும் செய்து வந்தார்.

ஆயிரத்து எண்ணூற்றி தொண்ணூறாம் ஆண்டளவில் அம்பலவாணக்குருக்கள் இறைவனடி சேர கோயில் தம்ப மண்டபமும் வாயுபகவானுடைய கோபத்திற்கிரையாகி இடிந்துவிழ குருக்களுடைய புத்திரர்கள் குழந்தைப்பருவத்தினராதலால் திருவிழா முதலிய நைமித்தியங்கள் நடைபெறாது சிறிது காலம் சென்றது. பின்னர் கொல்லங்கலட்டியிலும் சுற்றுப் புறத்திலும் உள்ள பெரியோரது ஆதரவினாலும் உற்சாகத்தினாலும் மேற்படி குருக்களது புத்திரர்களாகிய பொன்னையா, வைத்திலிங்கம் என்போர் பழையபடி தம்ப மண்டபம், யாகமண்டபம், வசந்தமண்டபம்,

கோபுரம் முதலியன அமைத்து ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபதாம் ஆண்டு அட்சய வருடம் ஆனிமாத அனுச நட்சத் திரத் திலே கும்பாபிஷேகம் செய்து அத்தினத்தை முதலாகக் கொண்டு வருடந்தோறும் அலங்காரத்திருவிழாவினை செய்து ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தொன்பதாம் ஆண்டு சுக்கில வருடம் தம்பம் அமைத்து கொடியேற்ற விழாவினைச் செய்து ஆனி மாதத்து அமாவாசைக்கு முதல் நாள் தேரினையும் அமா வாசை யிலன்று தீர்த்த உற்சவத்தினையும் செய்துவந்தனர். பின்னர் அதைமாற்றி ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தாறாம் ஆண்டு தாது வருடம் சுப்பிரமணியர், மகாலட்சுமி, சந்தான கோபாலர் முதலிய பரிவாரங்களுக்கு ஆலயங்கள் தனித்தனி அமைத்து அம் மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்தும் நாற்பத்தோ ராம் ஆண்டு விக்கிரம வருடத்திலே கர்ப்பகிரகம் அர்த்த மண்டபம் இரண்டினையும் வைரக்கல்லினால் செய்து பங்குனி மாதத்து அத்த நட்சத்திரத்திலே கும்பாவிஷேகம் செய்யப்பெற்று தேர்த் திருப் பணிச்சபையோரால்ப் புதிதாக அழகிய வேலைப்பாடுடன் கூடிய தேர் ஒன்று அறுபத்தைந்தாம் ஆண்டு குரோதி வருடம் பங்குனி மாதத்திலே செய்து முடிக்கப்பெற்று வெள்ளோட்டம் ஓடி அடுத்த வைகாசி மாதம் முதல் ஒவ்வொரு வருடமும் அத்தே தியிலே விநாயகப் பெருமான் வீதிவலம் வருவார்.

முகாமைத்திட்டத்தின் படி பொன்னையாதேசிகரின் மகன் அம்பல வாணக் குருக்களும் குமாரசாமிக்குருக்களும் 1955ம் ஆண்டு தொடக்கம் 1976ம் ஆண்டு வரை கூட்டு ஆதீன கர்த்தாக்களாக இருந்தார்கள். 1976ம் ஆண்டு அம்பலவாணக்குருக்கள் அமரராக 1995ம் ஆண்டு வரை குமாரசுவாமிக் குருக்கள் ஆதீன கர்த்தாவாக இருந்தார். 1995ம் ஆண்டு தொடக்கம் வைத்திலிங்கம் மகாலிங்க மும் அதன் பின்னர் வைத்திலிங்கம் கணேசலிங்கமும் 2002ல் அவர் அமரராகிய பின் கணேசலிங்கம் மதனமோகன் ஆதீன கர்த்தாவாகவுள்ளார்.

தி.உருத்திரகோடீஸ்வரக்குருக்கள்
பிள்ளையார்கோவில், வடக்குவீதி
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை.

## ஈழத்து இசைநாடக முகவரி
## நடிகமணி வி.வி.வைரமுத்து

இலங்கையின் இரண்டு தேசியக் கலைஞர்கள் கவனிக்கப்படாமல் உள்ளனர். ஒருவர் நடிகமணி வி.வி.வைரமுத்து மற்றையவர் கலை ஞான குபேரபூபதி தவில் மேதை தட்சிணாமூர்த்தி என தனது மன ஆதங்கத்தைப் பகிர்கிறார் சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரான வி.என்.மதியழகன் அவர்கள். இந்த இரு கலைஞர்களையும் தந்த பெருமை கொண்டது வலிகாமம் வடக்கின் செம்மண்.

நாடகக்கலையில் கொண்ட மோகத்தினால் கிடைத்த அரசாங்க உத்தியோகத்தைத் தொலைத்து விட்டு ஈழத்துக்கலை முகவரியாய் வாழ்ந்து மறைந்த நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள் ஈழத்து இசைநாடக மரபினை உலகறியச் செய்த பெருமைக்குரியவர். இந்தப் பெருமகனைப் பெற்ற பெருமையினால் வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை மண் மேனிசிலிர்த்துக்கொள்கிறது. இன்றும் அரிச்சந்திரா நாடகம் மேடையேறும் இடங்களில் எல்லாம் அனை வருக்கும் நினைவில்வரும் கலைஞர் நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்கள்தான். இசைநாடக ரசிகர் மனங்களில் எல்லாம் அரிச்சந் திரனாகவே வாழ்ந்து மறைந்தவர் வைரமுத்து. இன்றுவரை யார் அரிச்சந்திரனாக நடித்தாலும் அவர்களை நடிகமணி வைரமுத்து அவர்களுடன் ஒப்பிட்டே கலைஞர்கள் மதிப்பிடுகிறார்கள்.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் பெப்ரவரி 11, 1924 இல் பிறந்த வைரமுத்து தனது ஆரம்பக்கல்வியை காங்கேசன்துறை சைவ வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். பின்னர் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் 3 ஆம் வகுப்பில் சேர்ந்தார். பாடசாலைக் காலத்தில் அப்பூதியடிகள் என்ற இசை நாடகத்தில் அப்பூதியடிகளாக நடித்தார். 1938 ஆம் ஆண்டு தனது 14 ஆம் வய தில் சங்கீத கோவலன் என்னும் இசை நாடகத்துக்கு முதன் முத லாக ஆர்மோனியம் வாசித்துள்ளார்.

இசையில் அதிக ஆர்வம் கொண்ட இவர் 1941 தொடக்கம் 1942 வரை தமிழகம் சென்று மதுரையில் வித்துவான் செல்லப்பா பிள்ளையிடம் கர்நாடக இசை பயின்றார். இரண்டு ஆண்டுகளில் சங்கீத வித்துவானாகவும், ஒரு நடிகனாகவும் நாடு திரும்பினார். இலங்கை திரும்பியவருக்கு இரத்தினபுரியில் ஆசிரியப்பணி

கிடைத்தது. நாடகக் கலையில் ஆர்வமுள்ள வைரமுத்து அடிக்கடி விடுமுறை எடுத்து யாழ்ப்பாணம் வந்து மேடைநாடகங்களில் நடிப்பார்.

இதனால் இவரின் ஆசிரியர் வேலை பறிபோனது. கலைப்பணி மீது கொண்ட பற்றால் வசந்தகான சபா என்னும் நாடக மன்றத்தை ஆரம்பித்துச் சரித்திர புராண இதிகாச நாடகங்களை நடித்து மக்கள் மனங்களில் பதியவைத்திருந்தார். மேடை நாடகங்களில் பெண் பாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்பே வைரமுத்துவுக்கு முதலில் கிடைத்தது. சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் சாவித்திரியாக நடித்துப் பலரின் கவனத்தையும் ஈர்த்தார். சம்பூரண அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதியாகவும், ஸ்ரீவள்ளி நாடகத்தில் வள்ளியாகவும், நல்லதங்காள் நாடகத்தில் நல்லதங்காளாகவும் பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார்.

1950 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மேடையேற்றப்பட்ட சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்தில் முதன்முதலாக அரிச்சந்திரனாக வைரமுத்து நடித்தார். வைரமுத்துவின் வாழ்க்கைக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்த அரிச்சந்திர மயான காண்டம் என்னும் இசை நாடகம் அவரது தனித்துவ அடையாளமாக அமைந்ததோடு இலங்கை முழுவதும் 3000 இற்கும் அதிகமான தடவைகள் மேடையேற்றப்பட்டது. தனது ஆரம்பப் பாடசாலைக் காலத்தில் அப்பூதியடிகள் என்ற இசை நாடகத்தில் அப்பூதியடிகளாக வேடமேற்ற நடிகமணி வி.வி.வைரமுத்துவின் கலைப் பயணம் 1989 ஆம் ஆண்டு இலங்கை வானொலியின் நாடக ஒலிப்பதிவுக்காகக் கொழும்பு சென்ற போது மாரடைப்பால் மறையும் வரை தொடர்ந்தது.

ஈழத்தின் இசை நாடக வரலாற்றில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு மாபெரும் கலைஞராகத் திகழ்ந்தவர் அமரர் நடிகமணி வி.வி.வைரமுத்து. அவரது குரலின் ஆளுமை, நவீனதொழில் நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படாத காலத்தில் தனது வெண்கலக் குரலில் ரசிகர்களைக் கட்டிப்போட்டவர். அவர் பால பண்டிதர். இந்தியாவில் நாடகம் கற்றவர். தனக்கென ஒரு பாணியை உருவாக்கியவர். காத்தான் வடமோடி, தென் மோடி, காமன் கூத்துக்களுக்கு ஒரு கட்டுக்கோப்பு இருப்பதைப் போன்று சங்கரதாஸ் சுவாமிகளின் அடியொற்றிய இந்திய நாடகங்களை தனக்கென

ஒரு பாணியில் அமைத்து நடித்தார். அது வைரமுத்துவின் பாணியாக பரிணமித்தது. இலங்கை வானொலியில் பல இசை நாடகங்களை வழங்கினார். புகழ் உச்சியில் இருந்த போதும் சிறிதேனும் தலைக்கனம் இல்லாத அர்ப்பணிப்புமிக்க கலைஞர் நடிகமணி அவர்கள் பாடி நடிப்பது மட்டுமல்ல! மிருதங்கம், ஆர்மோனியம், வயலின், ஜலதரங்கம் போன்ற வாத்தியங்களை இசைப்பதிலும் வல்லவராய் இருந்ததோடு இலங்கை வானொலி யில் பல கர்நாடக இசைக் கச்சேரிகளும் செய்திருக்கின்றார்.

அரிச்சந்திரா, அல்லி அர்ஜுனா, பக்த நந்தனார், பவளக்கொடி, அருணகிரிநாதர், பூதத்தம்பி, கண்டி அரசன் ஆகிய நாடகங்கள் மூலம் மங்காப் புகழ்பெற்றவர் நடிகமணி வி.வி.வைரமுத்து. இவர் நடித்த அரிச்சந்திரா மயானகாண்டம் நாடகம் மட்டும் 3,000 தடவைக்கு மேலாகவும், பக்த நந்தனார் 1,000 தடவைக்கு மேலாகவும் மேடையேறியது.

அரிச்சந்திரா மயானகாண்டம் இலங்கை வானொலியிலும் பல தட வைகள் ஒலிபரப்பப்பட்டிருப்பதும் கலைஞர் ஏ.ரகுநாதன் தயாரித்த நிர்மலா என்னும் இலங்கையில்த் தயாரான திரைப்படத்தில் இந் நாடகத்தின் ஒரு காட்சி இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நாடகமே இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஒளி பரப்பு செய்த முதல் தமிழ் நாடகமும் இதுவாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பவளவிழாவின் போது இவர் பாடி நடித்த நந்தனார் இசை நாடகத்தை ஒலிப்பதிவு செய்து இறு வெட்டாக வெளியிட்டார்கள். இலங்கை வானொலியில் முதன் முதலாக வெளிவந்த நாட்டுக்கூத்து நாடகம் இதுவாகும்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் 'தமிழ் நாடகத்தின் மரணிக் காத குரல்' என்று வைரமுத்து அவர்களுக்கு புகழாரம் சூட்டு கின் றார். கலையரசு சொர்ணலிங்கம் இவருக்கு 'நடிகமணி' என் னும் பட்டத்தை 1960 ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்தார். முன்னர் காரை சுந்தரம்பிள்ளை இவர் பற்றி 'நடிகமணி வி.வி.வைர முத்து வாழ்வும் அரங்கும்' என்ற நூலை ஆய்வு நூலாக எழுதி யுள்ளார். 1964 ஆம் ஆண்டு அமைச்சர் எஸ்.தொண்டமான் 'நாட கச் சக்கர வர்த்தி' என்னும் பட்டம் வழங்கினார். 1970 ஆம் ஆண்டு தந்தை செல்வா 'நடிப்பிசை மன்னன்' எனும் பட்டத்தை வழங்கினார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் 'கலைக்கோமான்' என்னும் விருதையும் பேராசிரியர் க.கைலாசபதி 'நவரசத்திலகம்' என்னும் விருதையும், தென்னிந்திய தமிழ் மூதறிஞர் மா.பொ.சிவஞானம் 'நாடகவேந்தன்' என்னும் விருதினையும், முன்னாள் வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் 'நடிப்பிசைச்சக்கரவர்த்தி' என்னும் விருதினையும் பாசையூர் சென்றோக் படிப்பகத்தினர் 'முத்தமிழ்வித்தகர்' என்னும் விருதினையும் வழங்கிக் கௌரவப்படுத்தியிருக்கின்றார்கள். 2004 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவருக்குக் 'கலாநிதி' பட்டம் வழங்கித் தன்னையும் கௌரவப்படுத்திக்கொண்டது.

1989 யூலை 8 அன்று மறைந்த நடிகமணி வி.வி.வைரமுத்து நம்மைப் பிரிந்து இன்று இருபத்தைந்து ஆண்டுகள் கடந்திருக்கின்றது, எனினும் தமிழர்களின் இசைநாடக வரலாறு பேசப்படும் காலம் வரை இந்த மண்ணில் நடிகமணி வி.வி.வைரமுத்துவின் வரலாறும் பேசப்படும்.

தொகுப்பு - வரணியூரான் (ஜூனியர்)

(தொகுப்பில் உதவியவை - பேராசிரியர் எஸ்.தில்லைநாதன், குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சு.வித்தியானந்தன், பி.விக்னேஸ்வரன், ஒலி,ஒளிபரப்பாளர் வி.என்.மதியழகன் ஆகியோரின் கட்டுரைகள், வலைப்பூக்கள், இணையத் தளங்கள்)

## "ஒரு பிடி சாம்பலி"

இலங்கை அரசாங்கத்தின் உண்மைகளைக் கண்டறியும் ஆணைக்குழு முன் சாட்சியமளிக்கப் போவதற்காக, அந்த இடம் பெயர்ந்த முகாம் மக்கள் தயாராகிக் கொண்டிருந்தனர். வலி வடக்குப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து தங்கியுள்ள முகாம் மக்களை விசாரணைக்கு வருமாறு விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைவாக அம் மக்கள் தங்களைத் தயார்படுத்திய வண் ணம் இருந்தனர்.

இந்த ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளிக்கப் போவதை யிட்டு இம் முகாம் பகுதி மக்கள் ஆர்வமோ அக்கறையோ காட்ட வில்லை. இடம் பெயர்ந்து இருபத்து நான்கு வருடங்களை எட்டி விட்டது. யுத்தம் முடிவடைந்த பின்னர் இதுவரை மீளக் குடியமர விடப்படாத பகுதியாக மயிலிட்டி, தையிட்டி, பலாலி அதனை அண்டிய பகுதிகளும் உள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்று சொல்லிக் கொண்டு படையினர் இப் பகுதி மக்களின் காணிகளை சுவீகரிக்க முனைந்து வரிந்து கட்டி நிற்கின்றனர்.

உங்களை விடுவோம் பதியுங்கள், உறுதிகளைக் கொண்டு வாரு ங்கள், விசாரணை, தலைவர்கள் முன்பு சாட்சியம் என் றெல்லாம் எவ்வளவோ முறை தலை காட்டியும் இதுவரை எந்த வித முன் னேற்றமோ முன்னெடுப்புக்களோ உண்டாகவில்லை. இது இவர் களுடைய பரம்பரைச் சொத்தான காணிகள் தலை முறை தலை முறையாக வாழ்ந்து கெட்ட மண். யுத்தம் வந்ததன் விளைவாக இம் மக்களின் பரம்பரைக் காணிகளை பறித்தெடுக்கவோ, போக வேண்டாம் என்று தடுப்பதற்கோ யாருக்கும் உரிமை கிடையாது.

இருந்தாலும் யுத்தத்துடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் மக்கள் என்பதற்காக வாழ்விடங்களைப் பறித்தெடுப்பது எந்த வகையிலும் நியாயம் கூற முடியாது. அவர்களுக்கு மீண்டும் யுத்தம் வருமோ? என்ற பயம் ஆனால் இந்த முகாம் மக்கள் சிறு குடிசைகளுக்குள் முடங்கி வாழ்வதும் மலசலகூடம், குடிதண்ணீர், குளிப்பு, முழுக்கு என்றும் பிள்ளைகளின் கல்வி, கலாசாரம் என்று அடிப்படை வசதிகளுக்கே அடிமைவாழ்வு வாழும் நிலை இவர்களின் பரிதாப நிலமை உணர்ந்தாவது மீளக்குடியமர விடுவார்களா? இல்லையா?

என்ற ஏக்கமே இம் முகாம் மக்களை வாட்டி வதைத்து வரு கின்றன.
கொழும்பிலிருந்து விசேடமாக வலி வடக்குப் பகுதி மக்களை மட்டுமே அழைத்து அவர்களின் துயரங்களையும் உண்மை களையும் கண்டறியவும் என்று வரும் குழுவும் முடிவையும் விடிவையும் ஒரு போதும் தரப்போவதில்லை என்ற நம்பிக்கை இம் மக்களிடம் இருக்கின்ற போதிலும் எங்கள் காணிகளை உடனே தாருங்கள் உன்று கேட்க வேண்டும் என்ற வைராக்கியம் இவர் களிடம் நிறைந்திருக்கிறது. முகாம் தலைவரான சுந்தரம் அண்ணர் எவ்வித சலனமுமின்றி பத்திரிகைச் செய்திகளுடன் மூழ்கியபடி இருந்தார்.

இருப்பிடங்களை இழந்து தவிப்பவர்களுடன் சுந்தரம் அண்ணரும் ஒருவர் என்ற போதிலும் அவர் சந்தித்த இழப்புக்கள் கொஞ்சம் அல்ல. அவருடைய ஒரு மகனும் மகளும் காணாமல் போய் இல்லை கடத்தப்பட்டு காணாமல் போய் பல வருடங்களாகி விட்டன. சொந்த இடம் திரும்பி அந்த மண்ணிலே தான் உயிர் பிரிய வேண்டும். என்ற வைராக்கியத்துடன் இருந்த சுந்தரம் அண்ணரின் மனைவியும் இறந்து மூன்று மாதங்களாகி விட்டன. மிஞ்சி இருப்பது ஒரு மகள் மட்டுமே அவள் திருமணமாகி இரண்டு குழந்தைகளுடன் இருப்பதால் சிறு நிம்மதியுடன் சுந்தரம் அண் ணர் வாழ்ந்து வருகிறார்.

என்ன சுந்தரம் பேப்பரோடை இருக்கிறாய்? என்ன புதினம் கிடைக் குது? கேள்வி கேட்டவாறு வந்தாள் செல்லமுத்தாச்சி. செல்ல முத்தாச்சி தொண்ணூற்று இரண்டு வயதுடையவள். பழைய சாப் பாடும் மயிலிட்டி மீனும் ஆச்சியை இப்பவும் எழுந்து நடமாடக் கூடி யதாக வைத்துள்ளது. ஊரின் கதைகளையும் அருமை பெரு மை களையும் முற்றாக அறிந்து வைத்துள்ள ஒருவர் தான் செல்ல முத்தாச்சி.

செல்லமுத்தாச்சியிடம் ஊர் பெருமைகளைக் கேட்டறிந்து இளம் பெடியள், பெட்டையள் எங்கட ஊரின் அழகைப் பார்க்க வேணும் என்று துடிப்பதற்கு ஆச்சி தான் காரணம். என்னணை ஆச்சி எல்லாம் மனங்களை குழம்புற செய்திகள் தான் பேப்பரிலை

வருகுது சுந்தரம் அண்ணர் ஆச்சிக்கு விளக்கமளித்தார். "மன்னார் புதைகுழி முடிவு கண்டிட்டுதே இல்லை தொடருதோ" ஆச்சியின் ஆதங்கம் "தொடருது தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் வருகுது இன்னும் எத்தனை புதைகுழிகள் வெளிப்படப்போகுதோ" அலுத்துக்கொண்டார் சுந்தரமண்ணை" ஆர் பெத்த பிள்ளைகளோ அது சரி சுந்தரம் நீ இன்னும் வெளிக்கிடேல்லையே நான் றெடி யடா மோனே அவங்களை நாக்கை பிடுங்கிற மாதிரி கேட்காமல் வரமாட்டேன் நீ என்னையும் கூட்டிப்போ" செல்லமுத்தாச்சி ஆசைப் பட்டாள்.

"நாங்கள் என்ன சொன்னாலும் நடக்கவே போகுது நாங்கள் வாழ்ந்த மண்ணுக்கு, நாங்கள் கட்டின வீட்டுக்கு போறதுக்கு உவங்களை மண்டாட வேண்டிக்கிடக்குது எத்தினை தடவை கூப்பிட்டாங்கள் என்னவும் நடந்ததோ... எல்லாம் மோசடி தான்" சுந்தரம் அண்ணாரின் நியாயம் சரி தான் என்பது விளங்காமல் இல்லை." அடிச்சுக்கலைக்கேக்கை ஒண்டும் கேக்கேல்லை. திருப் பிப் போறத்துக்குத்தான் அனுமதி வேண்டி கிடக்குது" ஆச்சியின் கோபம் மீண்டும் கூடியது.

"சுந்தரம் அண்ணே" குரல் கேட்டு திரும்பிய போது மூன்று துவிச்சக்கர வண்டிகளில் சிவில் உடையுடன் மூவர் காணப் பட்டனர். சுந்தரம் அண்ணே நீங்க விசாரணைக்கு போறது தானே நீங்க உங்கடை காணி வேண்டுமென்று மட்டும் தான் சொல்ல வேணும். ஆமி புடிச்சுப்போனது கடத்திப்போனது ஒண்டும் சொல்ல வேண்டாம் நாங்க உங்கடை பிள்ளைகளை பிடிக்கேல்லை கொழும்பு ஆட்கள் வாறது நீங்க வேறே எதுவும் சொல்ல வேண்டாம். பிறகு கரைச்சல் வரும் தெரியுந்தானே தமிழைக் கொலை செய்தவாறு கூறினான் ஒருவன். இவர்களின் மிரட்டல் பாணியை கேட்டு கிழவிக்கு கோபம் தலைக்கேறியது.

தம்பியவை உங்கடை மிரட்டலைக் கொண்டு போய் வேற இடத்திலே பேசுங்கோ... நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறம் எங் களுட்டை உண்மையை கண்டறியத்தான் வருகினம் நான் எல்லா உண்மைகளையும் சொல்லத்தான் போறேன்" கிழவி வைராக்கியத்துடன் பதில் அளித்தாள். "ஆச்சி ஆட்கள் கோபம்

வேண்டாம் நீங்கள் சொல்லுறது காணி மட்டும் தான் உங்களுக்கு வயசு போட்டுது கரைச்சல் தேட வேண்டாம்" மீண்டும் தமிழைக் கொல்லினான் அவன் செய்யுறதையும் செய்து போட்டு சொல்ல வேண்டாம் என்றால் கொதித்துக் கொண்டனர் முகாம் மக்கள். வந்தவர்கள் யார்? ஏன்? எங்களை ஒண்டும் சொல்ல வேண்டாம் என்று மிரட்ட வேணும் என்று சுந்தரம் அண்ணை எண்ணிக் கொண்டார் ஏற்கனவே இரண்டு பிள்ளைகளை பறி கொடுத்துவிட்டு வாழும் நிலையில் வந்தவர்களுடன் ஏன் முட்டி மோத வேணும் என்று எண்ணி அமைதியானான். பேச்சு சுதந்திரம் கூட மறுக்கப் பட்டவர்களாக வாழும் நிலையை எண்ணி முகாம் மக்கள் வருத் தப்பட்டனர். "நாங்க சரியான முடிவைத்தான் எடுப்பம் நீங்க போட்டு வாங்கோ" ஆச்சி மிண்டும் சீண்டிக் கொண்டாள்.

"சரியுங்கோ ஆச்சி போட்டுவாறம் சுந்தரம் அண்ணை ஆச்சியை சொல்லிவையுங்க" சொல்லியவன் வந்த வழியே திரும்பி விட் டான். காணாமற் போனவர்களின் விடயங்கள் பற்றியே வெளியே கொழும்பு ஆட்களுக்கு சொல்ல வேண்டாம் என்று மிரட்டி விட்டு போகின்றனர். உண்மைகளை கண்டறியும் குழுவானது மக்கள் குறைகளை கேட்டறியவே வருகின்றனர். இந்த நிலையில் இந்த மிரட்டலின் உள் நோக்கம் என்ன? இந்த கேள்வியை பலரும் கேட்க தவறவில்லை ஆனாலும் வந்தவர்கள் யாரென்று தெரியா மல் ஏன் அவர்களுடன் வாக்குவாதப் படவேண்டும்? சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டியதை சொல்லுவம் என்று முடிவெடுத்துக்கொண்டனர்.

காணாமல் போனவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்துக்குத்தான் அந்த வேதனையும் வலியும் தெரியும். காணாமல் போன தங்கள் பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா? இல்லையா என்று ஏங்கி தவிக்கும் பெற்றோர்கள் தன் பூவுக்கும் மொட்டுக்கும், கட் டின தாலிக்கும் சொந்தக்காரனான கணவன்மாரை இழந்து வாழ முடியாமல் பிள்ளைகளை படிப்பிக்க முடியாமல் ஒரு வேளை உணவுக்கே வழி தெரியாமல் கண்ணீருடன் வாழும், வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களின் அவலம் நிறைந்த வாழ்வின் துயர் யாருக்கு விழங்கப்போகின்றது தன் கணவர் உயிருடன் இருக் கின்றானா? இல்லையா? என்று தெரியாமல் தினமும் நெற்றியில்

பொட்டு வைத்து தலையில் பூவைத்து தமிழர்களின் பாரம்பரி யங்களை சுமந்து வாழும் நம்முடைய பெண்களின் அவலங்கள் புரியுமா? மிரட்டல்காரர்களுக்கு தன்கணவர் இறந்துவிட்டார் என்று தெரிந்தும் காமுகர்களிடம் இருந்து தனது பெண்மையை காப் பாற்றுவதற்காக பொட்டுவைத்துக்கொள்ளும் எம்மூர் பெண்களின் பண்பு தெரியுமா? வந்து மிரட்டிவிட்டுப் போறவர்களுக்கு யுத்தம் நிறைவடைந்துவிட்டது இனிமேல் எங்கள் நிலங்களுக்கு போவதை ஏன் தடுக்கவேண்டும்? எங்கள் நிலங்களை பாதுகாப்பு வலயங்கள் என்று காணிகளை பறிக்க முற்படும் சதி விளங்குமா மிரட்டல் காரர்களுக்கு வெளியில் சொல்ல பயந்த நிலையில் ஒவ்வொரு வரும் இவ்வாறு மனங்களுக்குள் எண்ணிக்கொண்டனர். சுந்தரம் அண்ணை... இவங்கள் வந்து மிரட்டிப் போட்டுப் போறாங்கள்.... பிறகும் ஏதும் ஆபத்து வருமோ... முகாம் இளைஞன் ஒருவன் கேட்டான்.

"எங்களிட்டை இழக்கிறதிற்கு இந்த உயிர் மட்டும் தான் கிடக்குது பிள்ளைகளையும் இழந்திட்டம் நீங்கள் இளம் பெடியள் ஒதுங்கி யிருங்கோ நாங்கள் பாப்பம்" சுந்தரம் அண்ணர் கதைத்தால் மற்றவர்கள் ஒருபோதும் மறுபேச்சு பேசமாட்டர்கள் இளம் பிள்ளை களை வைத்திருக்கும் பெற்றோர்கள் சுந்தரம் அண்ணர் சொல்லு வது சரியென்று ஆமோதித்துக் கொண்டனர். எந்த நேரம் என்ன நடக்குமென்று யாருக்குமே சொல்லத் தெரியாது அமைதி பிறந்து விட்டது பாதைகள் சீராகி புகையிரதம் கூட யாழ்ப்பாணம் வந்து விட்டது. சுற்றிவளைப்புக்கள் இல்லை சோதனை சாவடிகள் இல்லை அடையாள அட்டை சோதனையில்லை எந்த நேரத்திலும் எங்கும் செல்லலாம் என்னும் வசதி வாய்ப்புக்கள் கூடவந்துள்ளன.

மக்களெல்லாம் அமைதியாக இருக்கும் நிலையிலே இவ்வாறான மிரட்டல்காரர்களும் இருக்கவே செய்கின்றனர். இதனால் பூரண மாக பேசும் உரிமை கூட மறுக்கப்பட்டிருப்பதையே உணர்த்து கின்றது. விசாரணைக்குழுவுக்கு முன் சாட்சியமளிப் பதற்காக தெரிவானவர்களை சுமந்து செல்வதற்கான வாகனமும் வந்து சேர்ந்தது அரை மணித்தியால பயணங்களின் பின் விசாரணைகள் நடைபெறும் இடம் ஒன்றில் இறக்கப்பட்டனர். கொழுந்து விட்டெரி யும் வெயில் சுட்டெரித்தாலும் இந்த வளவினுள் நிறைய நிழல்

தரக்கூடிய மரங்கள் இருந்தமையால் அம் மரங்கள் வந்தோருக்கு நிழல் கொடுத்து அணைத்துக்கொண்டது.

அந்த அலுவலக வளவுமுழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தன. துப்பாக்கியை சுமந்துள்ள படையினர் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டனர் விசாரணைக்காக வந்தவர்களில் காணாமற் போனவர்களின் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. காணாமற் போனவர்களின் உறவுகள் காணாமற் போனவர்களின் புகைப்படங்களை கையிலே வைத்திருந்தனர். இளம் வயது முதல் வயது போனவர்கள் வரை விசாரணைக்காக வந்திருந்தனர். அவர் களின் முகங்களில் சோகங்களே குடிகொண்டிருந்தன.

சுந்தரம் அண்ணரும் செல்லமுத்தாச்சியும் அமர்ந்திருந்த பகுதிக்கு அருகாமையில் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததை இவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது விசாரணைக்கு அழைக்கப்பட்டிருப்பவர் ஒரு இளம் பெண் ஏழு வயதுடைய மகளும் இருந்தாள்.

உங்கடை பெயர்
திருமதி சுதாயினி தமிழ்க்குமரன்
வயதெத்தினை
இருபத்தேழு வருடங்கள் ஐயா
உங்களுடைய கணவர் தமிழ்க்குமரன் ஓரு போராளியா?
இல்லை ஐயா
எத்தினையாம் ஆண்டு எந்த நேரம் யாராலே கடத்தப்பட்டதென்று தெரியுமா உங்களுக்கு...
2006ம் ஆண்டு புரட்டாதி மாதம் சனிக்கிழமை 19ம் திகதி நடுச்சாமம் 12 மணி 10 நிமிடமளவில் வெள்ளை நிறவானில் வந்தவை தான் கடத்திக்கொண்டு போனவை
வந்தவை யாரென்று தெரியுமா? என்ன மொழியில பேசினவை?
வந்தவை யாரெண்டு எனக்குத் தெரியாது அரைகுறையான தமிழில பேசினவை
உங்களுடைய கணவரை கடத்திபோக வந்தவர் ஆயுதங்கள் வைத்திருந்தவையோ?
ஆறு, ஏழு பேர் வந்தவை எல்லாம் ஆயுதம் வைத்திருந்தவை

ஐயா!
ஆணைக்குழுவின் அதிகாரிகள் அந்த இளம் பெண்ணை பலவித மான கேள்வி கேட்டு துன்பம் கொடுத்தனர். அவளும் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் பதிலளித்தாள். பாவம் அவள் இருபத் தேழுவயதுடைய அவளின் வாழ்வு அவளது இருபதாம் வயது தொடங்க முதலே வாழ்வினை இழந்துவிட்டாள். இன்று அவள் சுமங்கலியா? அல்லது அமங்கலியா? அவளுக்கே விடை தெரியவில்லை... நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டு வைத்திருக் கிறாள். அவள் தன் கணவனைத் தருமாறு அழுது மன்றாடினாள்.

ஐயா என்ர கணவரை மீட்டுத்தாங்கோ என்ர பிள்ளை அப்பா எங்கே என்று கேக்கிறாள். அப்பாவின் முகம் தெரியாமல் இருக் கிறாள். எனக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை வாழ வழி தெரியாமல் தவிச்சுக்கொண்டிருக்கிறேன். எங்கை வைச்சிருக்கிறி யள் இல்லை கொல்லிப்போட்டியளோ எனக்கு பதில் சொல் லுங்கோ என்று நியாயம் கேட்டு மன்றாடினாள் சுதாயினி.

அம்மா எங்கிட்டை உங்கிட புருஷன் இல்லை உங்கட நிலையை அறியத்தான் வந்தனாங்கள் உங்களுக்கு உதவி செய்ய விரும் புறம். அரிசி, மா, சீனி, பருப்பெல்லாம் வைச்சிருக்கிறம் தாறம் கொண்டு போங்கோ உங்கட பிரச்சனையை நாங்கள் மேலிடத் தில் போய் சொல்லிறம் என்றார் விசாரணை அதிகாரி.
உங்கட அரிசி, மா ஒண்டும் வேண்டாம் ஐயா! எனக்கு என்ர புரு ஷன் தான் வேணும் அழுது புலம்பினாள் சுதாயினி
அம்மா அழாதேங்கோ நாங்க உரிய இடத்தை பார்த்து முடிவு சொல்லுறம் என்ற கூற்றுடன் சுதாயினியின் விசாரணை முடிந்து விட்டது.
மேலும் பலர் படங்களைக்காட்டி அழுது மன்றாடினார்கள் எங் கடை உயிர்போறதுக்கிடையில் எங்கட பிள்ளைகளை காட் டுங்கோ என்றெல்லாம் கேட்டாங்கள் பதில் ஏதும் இல்லாமல் முதல் கட்ட விசாரணை மதிய உணவிற்காக இடைநிறுத்தப்பட் டது.

அடுத்த கட்ட விசாரணை வலிவடக்குப்பகுதி மீளக்குடியமர்வு சம்பந்தமானது என்றும் தயார் நிலையில் இருக்குமாறும் கூறப்

பட்ட சொற்ப நேரத்தில் செல்லமுத்தாச்சியின் பெயர் கூறி அழைக்கப்பட்டது ஆச்சி தள்ளாத வயதிலும் வைராக்கியத்துடன் எழுந்து சென்றாள். அம்மா உங்கடை பெயர் என்ன? உங்கடை ஊர் என்ன? என்ற பெயர் செல்லமுத்தாச்சி ஊர் பலாலி வயது 92 நீங்க பலாலியை விட்டு வெளிக்கிட்டு எவ்வளவு காலம் 24 வருஷம் முடியுது பதில் சொல்லுங்கோ எப்ப எங்களை விடப்போறியள். கொஞ்சம் பொறுமையாக இருங்கோ உங்கள உங்கடை இடத்துக்கு விடுவம் இதுக்கான தகவலைத் திரட்டத்தான் வந்திருக்கிறம் விசாரனை அதிகாரி ஆச்சியை சமாளித்தான். தம்பியவை 92 வயதிலயும் நான் திடமாக இருக்கிறன் என்றால் என்ர ஊரின்ர கடல் காத்துப்பட்டு முறுக்கேறின உடம்பிது உடனை பிடிச்ச மீனை சாப்பிட்டு வைரம் பாய்ஞ்சிருக்கிற உடம்பிது என்ர மண்ணிலே போய்த்தான் சாக வேண்டும் யுத்தம் முடிஞ்சுது இனியும் ஏன்? எங்களை தடுக்கிறியள் ஆச்சி முழங்கினாள்.

உங்கிட காணியள் உயர் பாதுகாப்பு வலயத்துக்கை வந்திடுச்சு விமானம் வந்து போறதுக்கு பாதுகாப்பு வேணும் அதுதான் என்றான் அதிகாரி.

தம்பியவை இதைத்தானே நெடுகச் சொல்லுறியள் கட்டுநாயக்கா விமான தளத்திற்கு கிட்டவாக உயர மாடி கட்டிடங்கள் இருக்கலாம் வீடுகள் இருக்கலாம் பலாலியில மட்டும் சிறு குடிசைகூட இருக்கக்கூடாதோ உங்கிட விமானம் வந்து போறத்துக்கு பாதுகாப்பு வேணுமென்றால் நாங்கள் ஏவுகணையை வைச்சிருக்கிறம் அடிச்சு விழுத்த எங்களை அடிச்சுக் கலைக்கும் போது உதையெல்லாம் கேட்டனியளே செல்லமுத்தாச்சியின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் அதிகாரிகள் திண்டாடினர்.

அம்மா உங்கிட நியாயம் எங்களுக்கு விளங்குது தமிழ் மக்களுடைய மீள் குடியமர்வு விஷயம் தான் இப்ப முக்கியமாக பாக்கிறம் இப்ப வடக்குக்கு புதிய தளபதி வந்திருக்கிறார் உங்களையெல்லாம் விடுவிக்கப்போறம் அதிகாரி தன் பக்கத்தில் நியாயத்தை தெளிவு படுத்தினார்.

அந்த தளபதி நல்ல மனுஷன் என்று கேள்விப்பட்டேன் அவர் ஓம் என்றாலும் உங்கிட கொழும்புக்காரர் ஓம் சொல்ல வேணும் தம்பியவை நீங்க ஓசி பிளேனில வந்து ஏசியறையில வந்து இருந்திட்டு போடுவியள் எங்கிட முகாமில வந்து ஒருநாள் தங்கிப்பாருங்கோ குடிக்கத் தண்ணிருக்கு கஸ்ரம் மலசல கூடத்தை பாவிக்கிறத்துக்கு கியூவில நிற்கிறம் சின்ன குடிசையில இருக்

கிறம் குளிரிலையும் பனியிலையும் மழையிலையும் நனைஞ்சு வாழுறம் எங்களை மனுஷராக கூட பார்க்க மறுக்கிறியளே ஏன் தம்பி கண்ணில இருந்து வழிந்த கண்ணீரை துடைத்துக்கொண் டாள் ஆச்சி!

கிழவியின் கண்ணீர்க்கதை அதிகாரிகளையும் கண்கலங்க வைத் தது. தமிழ் மக்களை அவர்களுடைய சொந்த மண்ணுக்கு விடா மல் காலம் கடத்துவதினாலே உள்ள இடர்ப்பாடுகளையும் அவர்களின் அவலம் நிறைந்தவாழ்வையும் அதிகாரிகள் புரிந்து கொண்டனர்.

தம்பியவை எங்கிட கஸ்ரங்களை அங்க போய் சொல்லுங்கோ தமிழர் சிங்களவருக்கு எதிரிகள் இல்லை நாங்கள் ஒற்றுமையாய் இருப்பம் எங்கடமண்ணில நாங்கள் வாழவேணும், என்ர உயிர் என்ர பலாலி மண்ணிலதான் பிரியவேணும், நான் பிறந்து வளர்ந்த மண்ணிலதான் இந்த உடம்பு எரியவேணும், என்ர வைராக்கி யத்தை குழப்பாதேங்கோ ஆச்சி வேதனைபட்டவாறு கூறிக் கொண்டு வந்த துணியினால் சுற்றி கட்டப்பட்ட ஒரு சிறு பொட்டளி ஒன்றை மேசையில் எடுத்து வைத்தாள் பொட்டளியை அதிகாரி கள் வியப்புடன் பார்த்தனர். தம்பியவை இது குண்டில்லை பயப் படாதேங்கோ இது என்ற புருஷனின் சடலத்தை எரித்த ஒரு பிடி சாம்பல் எடுத்து வைச்சிருக்கிறன் என்ர புருஷன் பிறந்து வளர்ந்த மண்ணில் சாம்பலைக் கரைக்க வேணும் அப்பத்தான் அவரின்ரை ஆத்துமா சாந்தியடையும். அதோடே இந்த ஒரு பிடி சாம்பலிலை அவரின்ர மீள் குடியமர்கின்ற ஆசை கனவு கற்பனையெல்லாம் தங்கியிருக்குது.

அவர் உயிரோடே இருந்த காலத்திலே தான் பிறந்து வளர்ந்த மண்ணில போய்த்தான் சாகவேண்டுமென்று துடியா துடித்தவர். அந்த ஆசை நிறைவேற முன்னமே செத்துப்போனார். இந்த ஒரு பிடி சாம்பலை அந்த மண்ணில கரைத்தால் அவர் தன்ர சொந்த மண்ணில ஆவியாக வந்து போவார்

உயிரோடே இருக்கும் போது விடல்லை செத்துப்போன மனுஷன்ர கடைசியாசையாவது நிறைவேறும் இல்லாட்டி அந்த சாம்பலை உங்களையெல்லாம் சுட்டெரிக்கும் மறவாதேங்கோ. ஆதங்கத்தை கொட்டியே செல்லமுத்தாச்சி மீள்குடியமரப்போகும் நாளை எண் ணியபடி வெளியேறினார்.

(யாவும் கலப்படமற்ற கற்பனையே)

பசுபதி உதயகுமார்

எழுத்தாளர் அளவெட்டி வடக்கு வடக்கு

இராகம் :- ஆனந்த பைரவி ( சிங்கார வேலன் மெட்டில் பாடவும் )
தாளம் :- ஆதி

பல்லவி

கந்தன் கருணை புரிவான் - மாவைக்
கந்தன் கருணை புரிவான் - என்
தனை யாழும்

( கந்தன் )

அனு பல்லவி

அண்ணன் தடை விலக்க
அம்மா அருள் புரிய
அப்பன் உதவி யுடன்
கந்தன் இரக்கம் கொண்டு

( கந்தன் )

சரணம் - 1

அன்று நாம் செய்த வினை
என்று உணர வைத்து
பந்த பாசப் பற்றெல்லாம்
அகற்றி அவன் முன்னாலே
மனதை அடக்கி எம்மை
சிந்தை தெளிய வைத்து
கந்தா கந்தா என்று
கதறி அழுத எம்மை கந்தனும் காத்திடுவான்

( கந்தன் )

சரணம் 2

செய்யாத பிழைகள் எல்லாம்
செய்தோம் எனவும் கேட்டு
பொறுமை மிகவும் கொண்டு
புரிந்தோம் உலகை நாமும்
நம்பி வந்தோம் இங்கு
நடந்தோம் உண்மையாக
தொடர்ந்தோம் சேவை தனை
சிறுவர் சிறுமியர்க்கு கற்பிப்பதில் மகிழ்ச்சி கொள்வோம்

( கந்தன் )

சரணம் 3

பட்டம் பதவியெல்லாம்
கிடைத்தும் உதறி விட்டோம்
பொழுது போக்காக இந்த
இசையை வளர்த்து வந்தேன்.
எம் நாடு எம் சேவை
எமக்கே உரிய இசை
வளர்ப்போம் அதனை இங்கு
மாவை மண்ணில் எங்கள் பேரன் புகழ் ஓங்கு என்றும்.

( கந்தன் )

ஆக்கம்:-
கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2014
மாருதப்புரவீகம் மலர் வெளியீடு
மலர்க்குழு

# வலிகாமம் வடக்கு வரலாற்று முக்கியத்துவம்

இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு வர லாற்றுப் பூமியானது கலைப்பூமியென்றே வர்ணிக்கப்படுகின்றது. இவ் வலிகாமம் வடக்கானது தனக்கென ஒரு கலைப் பாரம் பரியங்களை தன்னகத்தே கொண்டமைந்தது. அதாவது வந்தாரை வரவேற்கும் பண்பாட்டில் சோழப்பரம்பையில் அமைந்துள்ள வர லாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமும் அத னோடு இணைந்த கலையம்சங்களும் சான்று பகிர்கின்றது. அத் தோடு இங்கு காணப்படுகின்ற 200 வருடங்களுக்கு மேலான வர லாற்றைக் கொண்டமைந்த தேவாலயங்களும் பாடசாலைகளும் இங்கு அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சத்தை எடுத்துக் காட்டு கின்றது எனலாம்.

அவ்வாறே வலிகாமம் வடக்கின் கலைப் பாரம்பரியங்கள் இன்று நேற்று மிளிர்ந்தவை அல்ல அவை தொன்று தொட்டு வளர்ந்து வந்தவையாகவே காணப்படுகின்றது. இவ்வாறான வளர்ச்சிக்கு இதன் புவியியல் அமைவிடமும் காரணமாக அமைந்துள்ளது என வும் கூறிக் கொள்ளலாம்.

புவியியல் அமைவிடம் எனும் போது கடல் நீரின் தனித்துவமும் 5 வகை நிலங்களின் செல்வாக்குகளும் இதனை பறை சாற்றி நிற் கின்றது. அதுமட்டுமல்லாது இங்கு காணப் படுகின்ற கட்டடங் களும், சித்தர் சமாதிகள், மடங்கள் மூலமாகவும் வரலாற்று நூல்கள், சான்றோர்கள் மூலமாகவும் இவற்றை நாம் அறிந்து கொள்ள முடியும்.

அதாவது ஈழத்து சித்தர் வரிசையில் முக்கியமான வகிபங்கினைக் கொண்ட யோகர் சுவாமி அவர்களின் தாயகமாக மாவிட்டபுரம் என்னும் ஊரே சிறப்பாகக் கொள்ளப்படுகிறது. இதனால் சித்தர் வாழ்ந்த பூமி என்றும் அழைக்கப்படுகின்றது அதேபோல மடமும் கட்டடக் கலையின் வரலாற்றில் பேசப்படும் சிறாப்பர் மடமும் எமது வலிகாமம் வடக்கில் கீரிமலையில் அமைந்துள்ளமை இதன் சிறப்புக்களைப் எடுத்தியம்புகின்றது. இன்னும் வீரசைவர்கள்,

அரிய பல பெரியவர்கள் வாழ்ந்த இடமாவும் கொள்ளப்படுகின்றது. சோழ இளவரசியுடனும், நகுலமுனியுடனும் தெடர்பு கொண்ட மைந்த மாவிட்டபுரம், நகுலேஸ்வரம், அதனோடமைந்த விநாயகர் ஆலயங்களும், வைரவர் ஆலயங்களும் நாம் சிறப்பாக வலிகாமம் வடக்கில் நோக்குதற்குரிய தொன்றாகும். அத்தோடு தெல்லிப் பளை துர்க்காதேவி ஆலயம் முதல் பல வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களும் இங்கு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் அதுமட்டுமல்லாது கிராமத்துத் தெய்வ வழிபாடுகளும் இங்கு சிறப்பான இடத்தினைப் பெறுகின்றது. இங்கு காணப்படுகின்ற வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்கள் முதல் கிராமத்து தெய்வங் கள் வரை கலைகளை பேணிக்காத்து வளர்த்தமையை நம் வர லாறுகள் மூலமாக அறிய முடிகின்றது.

குறிப்பாக கிராமியக் கலைகளான வசந்தன் ஆட்டம் ஒயிலாட்டம் கரகம், காவடி, கூத்து கும்மி, கோலாட்டம் என்பனவும் இசை வாத்தியம் வாய்ப்பாட்டு, தவில் நாதஸ்வரம், நடனம், ஓவியம், சிற்பம், நாடகம், கட்டடக்கலை போன்ற அனைத்தும் ஆலயங் களை மையமாக வைத்து வளர்ந்துள்ளமையைக் காணலாம்.

அவ்வாறே வரலாற்று சிறப்புகள் எனும் இடத்து வலிகாமம் வடக் கில் ஆலயங்கள் கலைகள் என்பவற்றிற்கு அப்பால் நீர்வளம் நிலவளம் தொழில் வளம் என பலவும் இணைந்ததாக பலாலி விமான நிலையம் காங்கேசன் துறைமுகப்பட்டினம் புகையிரத நிலையம் சீமெந்து தொழிற்சாலை என்பனவும் மயிலிட்டி துறை வெளிச்ச வீடு என்பனவும் இதன் வரலாற்று பெருமைகளை மெரு கூட்டுகின்றன. அத்தோடு வலிகாமம் வடக்கின் பொருளாதாரத் தின் முக்கிய அம்சமாகவும் இவை இருந்து வந்துள்ளது.

மேலும் வலிகாமம் வடக்கு கண்கவர் அம்சங்களும் சுற்றுலா மையங்களையும் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. குறிப்பாக கீரிமலை கடற்கரை, சேந்தாங்குளம் கடற்கரை மற்றும் ஆல யங்கள், தேவாலயங்களைக் குறிப்பிடலாம். இங்கு கீரிமலை எனும் போது யாவர்க்கும் மனதில் ஞாபகமூட்டுவது என்ன வென்றால் வடபகுதியில் ஆடி அமாவாசைத் தினத்தன்று பிதிர்க்

கடன் செலுத்துவதற்கு சிறப்பான இடமாக தீர்த்தக் கேணியும் சமுத்திரமும் அதற்கான மடங்களும் யாத்திரிகர் தங்குவதற்கான மடங்களும் அமையப் பெற்றமையே என்று கூறிக் கொள்ளலாம். இப்புண்ணிய தீர்த்தத்தில் தீர்த்தமாடினால் எமது பிதிர்கடன் தீரும் என்பது நம்பிக்கை. அவ்வாறே வலிகாமம் வடக்கின் வைத்தியத் துறைகளிலும் மிகவும் ஒரு வரலாற்று பார்வையை செலுத்த முடியும். குறிப்பாக புற்று நோய் வைத்திய சாலை, காச நோய் வைத்தியசாலை, ஆதார வைத்தியசாலை, கூட்டுறவு வைத்தியசாலை என்ற வரிசையிலும் மனநோய் என்றால் தெல்லிப்பழைக்கு போங்கள் என்னும் அளவிற்கு அதிலும் சிறப்பான சேவையாற்றும் வைத்தியசாலையாகவும் எமது பிரதேசம் விளங்குகின்றது எனலாம்.

மேலும் கலைகளை அழியாது காத்தும் இன்றும் வெளிநாடு களிலும் புகழ் மணம் பரப்பும் கிராமங்களாக அளவெட்டி, குரும்பசிட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கட்டுவன் என்னும் கிராமங்களும் பல கலைமன்றங்களும் கலைஞர்களும் எமது வரலாற்றின் பெருமைகளாக உள்ளன. இவை மட்டுமல்லாது கல்விக் கூடங்கள் முதல் ஆசிரியர் கலாசாலைகள் வரை வலிகாமத்தின் வரலாற்றுப் பெருமைகளை எடுத்தியம்புகின்றது.

புதுமைகள் பல கண்டும் பழமைகளை போற்றி பேணிப்பாதுகாக்கும் மக்களும் இவ்வலிகாமத்தவர்களாகவே உள்ளனர். அதாவது இன்றைய காலகட்டத்தில் சங்கடப்படலை, ஆவுரஞ்சிக்கல், நாற்சர வீடு, தெருத் தொட்டிகள், சுமைதாங்கி, சூத்திரக் கிணறு போன்றனவும் பேணப்பட்டு வருகின்றது. அத்தோடு பாரம்பரிய விளையாட்டுக்களான கோழிச்சண்டை, கைக்கொடிச்சவாரி, கம்படி சிலம்படி, வண்டில் மாட்டுச் சவாரி, போர்த் தேங்காய் தயிர் முட்டி உடைத்தல் போன்றன பலவும் நடாத்தப்பட்டு பாரம்பரியங்கள் அடுத்த பரம்பரைக்கு கடத்தப்பட்டு வருகின்றது.

அதேபோல் விவசாயத்துறையை நோக்கிலும் வலிகாமம் வடக்கு தனக்கான இடத்தை பிடித்துள்ளது. குறிப்பாக வெற்றிலை முந்திரி என்றால் வலிகாமம் வடக்கிலிருந்து வந்ததா என்று கேட்டு வாங்கும் அளவிற்கு அவை சிறப்பு பெற்று விளங்கும் உற்பத்திகளாக அன்று மட்டுமல்லாது இன்றும் திகழ்கின்றது.

எனவே சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் நீங்கியது முதல் நகுல முனிவரின் பிதிர் சாபம் நீங்கியது மட்டுமல்லாது கோயிற்கடவை என்று வர்ணிக்கும் சிறப்புக்களும் குமாரத்திபள்ளம் நல்ல தண்ணீர்க் கிணறு என்று பலவாறு நீண்டு செல்லும் வரலாறுகளுடனும் கலை கலாசார அம்சங்களுடனும் சமய வழிபாடுகளுடனும் வலிவடக்கு வரலாற்று முக்கியத்து வங்கள் இன்றும் மிளிர்வதைக் காணமுடிகின்றது எனலாம்.

வாழ்க கலை வளர்க கலைஞர்கள்

செ.தக்சாயினி
கலாச்சார உத்தியோகஸ்தர்
பிரதேச செயலகம்
தெல்லிப்பளை

# இதயம் கனிந்த நன்றிகள்

வலிகாமம் வடக்கு கலாசரப் பேரவை மூலமாக மாருதப்புரவீகம் எனும் பண்பாட்டுமலரினை வெளியிடுவதில் பெருமையடைகின்றது. பல்வேறு காலகட்டங்களில் எமது பிரதேசமானது பல அழிவுகளைச் சந்தித்தும் பல இடங்கள் மீள்குடியேற்றங்கள் இடம்பெற்றும் இன்னும் சில இடங் கள் மீள் குடியேற்றப்படாமலும் இருந்து வரும் நிலையிலும் எமது கலைப்பாரம்பரியங்களை பண்பாட்டினை பதிவு செய்தல், ஆவணப் படுத்தல் என்பது இன்றைய கால கட்டத்தில் முக்கிய தேவையாக உள் ளது.

இந்த வகையில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தி னால் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமாக இம்மலரினை மிகக்குறுகிய காலத்தில் இவ் பண்பாட்டுமலரினைப் படரவிட்டுள்ள இம் மலரிற்கு உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியறிதலை தெரிவிப்ப தென்பது எமது தலையாய கடமையாகும்.

அந்த வகையில் முதலில் இத்திட்டத்தினை முன்மொழிந்து அதற்கான நிதியுதவியினை வழங்கியுதவிய வடமாகண பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கௌரவ குருகுலராஜா அவர்களுக்கும், செயலாளர் உயர்திரு சத்தியசீலன் அவர்களுக்கும், பணிப்பாளர் திருமதி. உஷா சுபலிங்கம் அவர் களுக்கும் எமது மனம்திறந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றோம்.

அத்தோடு இம்மலர் வெளியிடுவதற்கு காரணமானதும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியும் வழிகாட்டி வரும் பிரதேச செயலாரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய உயர் திரு. க. ஸ்ரீமோகனன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் ஆலோசனைகளை வழங்கிய கலாசார பேரவை உறுப்பினர் களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் அத்தோடு இம்ம லரிற்கு ஆசிச்செய்திகளை வழங்கிய உயர் அதிகாரிகளுக்கும் மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் குறுகிய காலத்தில் ஆக்கங்களையும், தகவல்களையும் வழங்கியவர்க்கும் அட்டைப்படத்தினை வடிவமைத்தவர்களுக்கும் கட்டுரைகளைச் செவ்வை பார்த்தவர்களுக்கும், இம்மலரினை பிரசுரிப்பதற்கு பெருந்துணை புரிந்த VETEP CORENER அச்சகத்தாரிற்கும், வெளியீட்டுரை வழங்கியவர்கள், முதற்பிரதி, சிறப்புப் பிரதிகள் பெற்றவர்களுக்கும் நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்தோடு இம்மலரிற்கு அனைத்து வழிகளிலும் உதவிய அனைவரிற்கும் எமது செயலக உத்தியோகத்தர்கள் அனைவரிற்கும் இதயம் கனிந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

செயலாளர்
கலாசாரபேரவை
வலி வடக்கு
தெல்லிப்பளை.

## இறையருளி

நிலைமாறும் நிலை தனை மாற்றி
நிலைத்து நிற்கும் தெய்வ அருளை
தினம் தோறும் இங்கு வழங்கும்
மாவை எனும் மங்கல பூமியிலே!

கலைகள் பல விளங்க வைத்து
கரம் கோர்த்து இருள் நீங்க
சிவன் முருகன் பதம் போற்றி
சீருடன் திகழ வழி உண்டு!

அரசரும் முனிவரும் துன்பம் நீங்க
அன்பு இறைவன் கருணை வேண்டி
உயர்வடைந்த பூமி இதுதான் என்று
உரத்த ஓங்காரத்துடன் உயர்த்திடுவோம் கைகளை!

வளங்கள் பல கொண்ட நிலங்கள்
இங்கு நிலைத்து நிறைந்து இருந்தாலும்
சிறப்புக் கொண்ட மக்கள் குழாம்
செந்நெறி காத்து வாழுமிடம் இது!

அருளும் பொருளும் வேண்டி ஆன்றோரும்
சான்றோரும் சரணடையும் மாவை முருகனை
தினம் தோறும் பாடி மகிழ்வோம்
தித்திக்கும் அவன் செயல் நாடி!


ஊரும் உலகும் வியந்து பார்க்கும்
உயர்வு அடைந்த யாழ் மண்ணிலே
நாளும் கோளும் நலம் அடையும்
நன்மை பல நடந்து வருமே!

பட்டணம் துறைமுகம் இங்கு கண்டு
பார்ப்போர் மகிழ்ந்து இன்பம் கொள்ள
திட்டமும் கொண்டு திடமுடன் பாடு

வட்டமும் கூடும் வாழ்க்கையும் உயரும்!
வற்றாத நீர் ஊற்றைப் போல
வலி வடக்கில் வளர்ந்து நிற்கும்
கலைகள் எல்லாம் செழித்து ஓங்க
கடவுளை நிதம் வேண்டி வணங்குகின்றேன்!

காலங்கள் பல மாறிப் போயினும்
ஞாலத்தின் புகழ் மங்கி மாறினும்
மாருதப்புரவீகம் என்னும் மலர் கொண்ட
மங்காத விடயங்கள் சீருடன் சிறப்படையும்!

ஆக்கம் :- திரு.தே.விக்கினேஸ்வரன்
வாழ்வின் எழுச்சி முகாமையாளர்
பிரதேச செயலகம்
தெல்லிப்பழை.



**கலாசார பேரவை**
**பிரதேச செயலகம்**
**வலி வடக்கு தெல்லிப்பளை**



VETEP CORNER, 126 C, ARASADY ROAD, JAFFNA.